THAYAGAM

75¢

27 . 5 . 94

உண்மை:5
தேடல்:47

# தாயகம்

## தேடகம் நூலகம் தீக்கிரையாக்கப்பட்டது

**பாஸ்போட் மோசடியில் மூன்று தமிழர்கள் கைது**

**தேர்தலில் தன்னைத் தெரிவு செய்யுமாறு மதகுருமாரிடம் ஜனாதிபதி மன்றாட்டு**

**பிரேமதாச கொலை பற்றி விசாரணை இல்லை**

**3 பேரைக் கொன்றதற்காக ஆயுட்தண்டனை அனுபவித்த இரண்டு தமிழர்கள் விடுதலை**


நகரின் மத்தியில்
துரித பணமாற்றுச் சேவை
CDவிற்பனையாளர்
SENDURAN & CO
584 A, PARLIAMENT ST, TORONTO
(416) 962 7397



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Niru Brand®
Niru Brand®
Niru Brand®
Niru Brand®
Niru Brand®
Niru Brand®
Niru Brand®
Niru Brand®

தரத்தின் சின்னம்

நிரு பிராண்ட்®
நிரு பிராண்ட்®
நிரு பிராண்ட்®
நிரு பிராண்ட்®
நிரு பிராண்ட்®
நிரு பிராண்ட்®
நிரு பிராண்ட்®
நிரு பிராண்ட்®

Niru Niru

# தரத்தின் சின்னம்
# நிரு பிராண்ட்®
# Niru Brand®

நிரு பிராண்ட் தயாரிப்புகளுக்கு நிகர்
Niru Brand® தயாரிப்புகளே.

உங்கள் கைகளில் கிடைப்பது தரமான
நிரு பிராண்ட் தயாரிப்புகளா? என்பதை
உறுதிப்படுத்துங்கள்

## போலிகளை வாங்கி ஏமாறுதீர்கள்

Niru Enterprises Inc,
**Tel:(416) 299-4202**

நிரு பிராண்ட் தயாரிப்புக்கள் எல்லா இலங்கை
வர்த்தக நிலையங்களிலும் விற்பனையாகின்றன.
உங்கள் ஏமாற்றத்தைத் தவிர்ப்பதற்கு எம்முடன்
தொடர்பு கொண்டு எமது தயாரிப்புகள்
எப்பொழுதும் கிடைக்கக் கூடிய
வர்த்தக நிலையங்களை அறியலாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Second class mail Registration No:8435


# தாயகம்

'உண்மையைத் தேடி'


## தேர்தலில் ஆதரிக்கும்படி மதகுருக்களிடம் ஜனாதிபதி மன்றாட்டு

அடுத்த தேர்தலில் தான் வெற்றி பெற ஆதரவு தருமாறு ஜனாதிபதி விஜேதுங்க மதகுருமாரையும் சகல இனத்தைச் சேர்ந்த மக்களையும் கேட்டுள்ளார். பௌத்த, கிறிஸ்தவ, முஸ்லிம், இந்து மதகுருக்களுக்கு ஜனாதிபதி விடுத்த பகிரங்கக் கடிதம் ஒன்று இந்த வெள்ளியன்று கொழும்பு பத்திரிகைகளில் பிரசுரமாகின. 'உங்களது வழிகாட்டுதலையும் ஆதரவையும் நான் பணிவுடன் எதிர்பார்க்கிறேன்' என்று அவர் குறிப்பிட்டுள்ளார். நவம்பர் மாதம் நடைபெறும் ஜனாதிபதி தேர்தலில் இவர் சிறிமாவோ பண்டாரநாயக்கவுடன் போட்டியிடுகிறார்.

இரகசியமான, ஊழல் சக்திகள் அதிகாரத்தைக் கைப்பற்ற போட்டியிடுவதாகவும் சரியான அரசியல் நடவடிக்கை மூலம் அரசியல் தலைமையை வழங்க தாம் உறுதி பூண்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். ஆனால் இந்த ஊழல் சக்திகள் யார் என்பதை அவர் குறிப்பிடவில்லை. ஆனால் பிரேமதாசா காலத்திலேயே ஊழல் மலிந்திருந்ததாக பலரும் கருதுகின்றனர்.

'தேர்தல் காலத்தில் நீங்கள் உடுக்கும் முடிவில் தான் எமது நாட்டின் எதிர்கால அபிவிருத்தியும் ஸ்திரத்தன்மையும் தங்கியுள்ளது என்பதை நான் மீண்டும் வலியுறுத்த வேண்டிய அவசியம் இல்லை' என அவர் மேலும் கூறியிருக்கிறார்.

## பிரேமாவின் மரணம் பற்றி விசாரணை இல்லை

பிரேமதாசாவின் மரணம் குறித்து விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று பிரேமதாசாவின் மகள் விடுத்த வேண்டுகோள் ஜனாதிபதியினால் நிராரிக்கப்பட்டிருக்கிறது. ஜனாதிபதியின் செயலாளர் விஜேதாசா எழுதிய கடிதம் ஒன்றில் இந்தக் கொலைக்கு புலிகளே காரணம் என்று கண்டுபிடிக்கப்பட்டதால் மேலதிக விசாரணை அவசியமில்லை என்று தெரிவித்துள்ளார்.

ஆனால் ஐலண்டில் வெளிவந்த செய்தி ஒன்றின்படி பிரேமதாசாவிற்கு நெருக்கமான ஒரு அரசியல்வாதி "மே தினத்தன்று முக்கிய தகவல் ஒன்றை ஜனாதிபதி வெளியிட இருந்தார்" என்றும் விசாரணை நடத்தப்பட்டால் மேலும் தகவல்களை தாம் தெரிவிக்க முடியும் என்று கூறியதாகவும் கூறப்பட்டுள்ளது. லலித் கொலை பற்றி முக்கிய தகவல்கள் பிரேமதாசாவுக்கு ஏப்ரல் இறுதியில் கிடைத்திருந்ததாகவும் அதை தான் மே முதல் தேதி வெளியிடவிருப்பதாக பிரேமதாசா கூறியதாகவும் அந்த அரசியல்வாதி தெரிவித்திருக்கிறார். தனது மரண தினத்தன்று முக்கிய பொலிஸ் அதிகாரிக்கு சேவை நீடிப்பு பத்திரத்தில் கையொப்பமிட்டார் எனவும் பிரேமதாசா கொல்லப்பட்ட பின்னர் ஐந்து நாட்களுக்குள் அந்த அதிகாரி விலக்கப்பட்டதாகவும் அந்த அரசியல்வாதி தெரிவித்ததாக ஐலண்ட் கூறுகிறது.

## மண்சரிவில் 7 பேர் பலி

கொழும்புக்கு சமீபமாக உள்ள இடம் ஒன்றில் மண் சரிவு ஏற்பட்டதில் ஏழு பேர் புதையுண்டதாக தகவல்கள் கூறுகின்றன. இந்த ஏழு பேரும் ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் ஆவர். கடந்த வெள்ளிக்கிழமை எகலியகொட என்ற கிராமத்தில் இரண்டு நாட்கள் நடைபெற்ற பெரும் மழையினால் இந்த மண் சரிவு ஏற்பட்டது. பொலிசார் தோண்டிய போதும் இன்னமும் உடல்கள் கண்டுபிடிக்கப்படவில்லை.

## கொலைக்குற்றச்சாட்டில் ஆயுட்தண்டனை பெற்ற 2 தமிழர்கள் விடுதலை

லண்டனில் நடைபெற்ற எரிகுண்டு வீச்சு சம்பவத்தில் மூவர் கொல்லப்பட்டது குறித்து ஆயுட்கால சிறைத்தண்டனை அனுபவித்து வந்த இரண்டு தமிழர்கள் விடுவிக்கப்பட்டிருக்கின்றனர். லண்டனில் உள்ள வீடொன்றின் மீது மீது நடந்த எரிகுண்டு தாக்குதலில் மூன்று தமிழர்கள் கொல்லப்பட்டிருந்தனர். இது தொடர்பான குற்றச்சாட்டில் 37 வயதான சாம் குலசிங்கம், முப்பது வயதான பிறேம் சிவலிங்கம் ஆகியோர் 1988ல் ஆயுட் காலச் சிறை விதிக்கப்பட்டிருந்தனர். 1992ல் இவர்கள் மேற்கொண்ட மேன்முறையீடு நிராகரிக்கப்பட்டது.

இதையடுத்து குலசிங்கம் உண்ணாவிரதம் இருந்து மரணம் அடையும் தறுவாயில் இருந்த போது, பிரிட்டிஷ் அரசு இது குறித்து விசாரணைக்குழு ஒன்றை நியமித்து இதன் பின்னர் மேன்முறையீட்டு நீதிமன்றம் இது குறித்து விசாரணைகள் செய்தது.

இந்த விசாரணைகளில் ஈடுபட்ட பொலிஸ் அதிகாரிகள் குற்றவியல் சட்டத்தை பெருமளவில் மீறியதாகவும் எதிரிகள் தங்களுக்கு சாதகமாகப் பாவித்திருக்கக் கூடிய தகவல்களை மறைத்ததாகவும் நீதிபதி தமது தீர்ப்பில் கூறியுள்ளார். அத்துடன் சாட்சியமளித்தவர் பற்றியும் தனது சந்தேகங்களை நீதிபதி எழுப்பியிருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராவுக்கு பரிசாரகம் செய்ய கறுப்பர்களுக்கு அனுமதி மறுப்பு பயங்கரவாத தாக்குதல் குறித்து அச்சம்

பிரதமர் நரசிம்மராவ் அமெரிக்கா வந்த போது அவர் தங்கியிருந்த ஹோட்டலில் அவருக்கு வெள்ளையர்கள் மட்டுமே சேவை செய்ய வேண்டும் என்று நிர்வாகம் வற்புறுத்தியதால், தங்கள் மீது பாரபட்சம் காட்டப்பட்டதாகக் கூறி இரண்டு கறுப்பர்கள் ஆட்சேபம் தெரிவித்து வழக்குத் தொடர்ந்துள்ளனர். மே 16ம் திகதி ராவ் தங்கியிருந்த 4 சீசன்ஸ் ஹோட்டலில் பல ஊழியர்கள் ராவின் வருகையை ஒட்டி தாம் வேறு பகுதிகளுக்கு இடம் மாற்றப்பட்டதாக குற்றம் சாட்டியிருந்தனர். ஆனால் இந்திய அரசு இவ்வாறு எந்த வித கோரிக்கையையும் நிர்வாகத்திடம் விடுக்கவில்லை என்று அரசு சார்பில் தெரிவிக்கப்பட்டது.

ஆனால் ராவின் பாதுகாப்பு அதிகாரிகள் பயங்கரவாதத் தாக்குதல்கள் நடத்தப்படக் கூடும் என்று காரணம் காட்டி தென்னாசியர்கள், வெள்ளையர்கள் அல்லாதோரை பிரதமருக்கு சேவை புரிய அனுமதிக்க வேண்டாம் என்று கேட்டுக் கொண்டதாகவும் அதை ஏற்றுக்கொண்டு பாரிய தவறு ஒன்றை தாம் இழைத்ததாகவும் ஹோட்டல் நிர்வாகி பொஸ்டன் குளோப் பத்திரிகைக்கு தெரிவித்திருக்கிறார். இந்திய, பாகிஸ்தான், இலங்கை பயங்கரவாதிகளின் தாக்குதல்கள் நடத்தப்படக் கூடும் என்று காரணத்தினாலேயே இந்த கோரிக்கை விடுக்கப்பட்டதாக நியூ யோர்க்கில் உள்ள இந்திய தூதுவரக அதிகாரி தெரிவித்திருக்கிறார்.

பிந்திய செய்திகளின் படி பாரபட்சம் காட்டப்பட்டதாக ஒத்துக் கொண்டு தொழிலாளர்களுக்கு எழுபதாயிரம் டொலர்களை செலுத்த நிர்வாகம் சம்மதித்திருக்கிறது. முன்பு சவுதி இளவரசர் ஒருவர் வந்த போதும், இஸ்ரேலிய தூதுக்குழு ஒன்று வந்த போதும் இவ்வாறான ஒழுங்குமுறைகள் கடைப்பிடிக்கப் பட்டதாக குற்றம் சாட்டப் பட்டிருக்கிறது.

# தோதல் ஆணையாளருடன் அரசியல்வாதிகள் மோதல்

இந்திய அரசியல்வாதிகளுடன் மோதிக் கொள்ளும் தேர்தல் ஆணையாளர் சேஷன் தனது முயற்சி ஒன்றில் தோல்வி கண்டுள்ளார். உத்தரப் பிரதேசத்தில் நடைபெற்ற இடைத்தேர்தல்களில் முதலவர் முலாயம் சிங் யாதவ் அரச ஹெலிகொப்டரைப் பாவித்தார் என்று குற்றம் சாட்டி இத்தேர்தல்கள் பின்போடப்பட்டன. ஆனால் முலாயம் சிங் யாதவ் உயர்நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்து இந்த ஹெலிகொப்டர் பயணத்துக்கான சகல செலவுகளும் தமது கட்சியால் செலுத்தப்பட்டன என்று கூறியதை அடுத்து நீதிபதி இத்தேர்தல் குறிப்பிட்ட தேதியில் நடத்தப்பட வேண்டும் என்று தீர்ப்பளித்துள்ளார். யாதவ் தனது கருத்தைக் கூற சேஷன் சந்தர்ப்பம் அளிக்கவில்லை என்று நீதிபதி தனது தீர்ப்பில் கூறியிருந்தார்.

உத்தரப்பிரதேசத்தில் ஏழு பாராளுமன்றத் தொகுதிகளுக்கும் சில மாநில ஆசனங்களுக்கும் நடத்தப்படும் தேர்தல்களில் வேட்பாளர்கள் செலவிடும் தொகை பற்றி கவனிக்கும்படி சேஷன் தன் அதிகாரிகளுக்கு கட்டளையிட்டிருந்தார். தேர்தல் காலங்களில் செலவிடப்படும் அதீத செலவுகளை படம் பிடிக்க வீடியோக்காரர்களையும் அனுப்பியிருந்தார். இந்தப் பயத்தினால் வழமையில் கட் அவுட்கள், ஒலிபெருக்கிகள் பாவிக்கும் பிரசாரகர்கள் வீடுவீடாக பிரசாரம் செய்யும் நிலைக்கு தள்ளப்பட்டனர்.

இப்போது சேஷனின் அதிகாரங்களைக் குறைப்பதற்காக மேலும் இரண்டு தேர்தல் அதிகாரிகளை நியமிக்க அரசு திட்டமிட்டு, பாராளுமன்றத்தை ஜுன் மாதத்தை கூட்டுகிறது. அரசாங்கம் இந்த திட்டத்தை அமுல்படுத்தினால் தான் மாணவர்களை இதற்கு எதிராக ஆர்ப்பாட்டம் செய்யுமாறு கேட்கப் போவதாக சேஷன் கூறியுள்ளார்.

# ராவய மீது கூரே வழக்கு

இராணுவத் தளபதி ஒருவருடன் சேர்ந்து ஆட்சியைக் கவிழ்க்க சிறிசேன கூரே சதி செய்தார் என சிங்கள வாரப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டிருந்தது. இதற்கு எதிராக தற்போது கூரே மானநட்ட வழக்குத் தொடர்ந்திருக்கிறார். பத்துக் கோடி ரூபா நட்டஈடு கோரியிருப்பதாகவும் அவர் தெரிவித்திருக்கிறார்.

# வடக்கில் புலிகளின் வங்கி

வடக்கில் புலிகள் தங்கள் சொந்தப் பொருளாதாரத்தை கட்டியெழுப்பும் முயற்சியில் புதிதாக வங்கி ஒன்றைத் திறந்துள்ளனர். கடந்த திங்கட்கிழமை இந்த வங்கி கோலாகலமாகத் திறந்து வைக்கப்பட்டது. திறப்பு விழாவில் பேசிய அன்டன் பாலசிங்கம் தமிழ் ஈழத் தேசிய பொருளாதாரத்தை கட்டியெழுப்பும் முயற்சியில் இது முதலாவது கட்டம் என்று தெரிவித்தார். இந்த வங்கியில் சேமிப்பு, நடைமுறைக் கணக்கு என்பன திறக்கப்பட முடியும்.

புலிகளால் நடத்தப்படும் சொந்த இராணுவம், பொலிஸ், நீதித்துறை என்பன உண்டு என்றும் தற்போது வங்கித் துறையும் திறக்கப்பட்டிருக்கிறது என்றும் பாலசிங்கம் தெரிவித்தார்.

இதற்குள் சுயதொழில் செய்வதற்காக வடக்கில் பதினெட்டு வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு மூன்று வருடங்களுக்குள் திருப்பிக்கொடுக்கக் கூடிய பத்தாயிரம் ரூபா கடன்களை வழங்க இலங்கை வழங்கி திட்டம் கொண்டு வந்துள்ளதாக அதன் யாழ். மாவட்ட முகாமையாளர் தெரிவித்திருக்கிறார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலியல் வன்முறைக்கு எவ்வித சமாதானமும் கூறமுடியாது

**கட்டுக்கதை** | **உண்மை**

பெண்கள் தம் புறத்தோற்றத்தாலோ அல்லது நடத்தையாலோ பாலியல் வன்முறையைத் தூண்டுகிறார்கள்.

ஒருவர் எத்தகைய உடை அணிந்தாலும், எங்கெங்கே சென்றாலும், எவருடன் பேசினாலும், பாலியல் வன்முறைக்குள்ளாக 'வேண்டி' அழைப்பதில்லை.

**கட்டுக்கதை** | **உண்மை**

அதிக பாலியல் வன்முறைகள் அந்நியர்களாலேயே செய்யப்படுகின்றன.

அந்நியர் ஒருவரிலும் பார்க்க அறிந்தவர் ஒருவராலேயே பெண்கள் பாலியல் வன்முறைக்கு ஆளாகும் சாத்தியம் உண்டு. வன்முறையாளர் கணவனாகலாம், முகமறிந்த ஒருவராகலாம், அல்லது நண்பனாக இருக்கலாம்.

**கட்டுக்கதை** | **உண்மை**

குறிப்பிட்ட சில சமுதாய இனத்தைச் சார்ந்த குழுக்களிலேயே பாலியல் வன்முறை பிரச்சனை ஆகிறது.

பாலியல் வன்முறையைப் பிரயோகிக்கும் ஆண்கள் பல்வேறு பொருளாதார, சமூக, இனக்கலாச்சார, வம்ச சூழலிருந்து வந்த தோடல்லாது வயது வரம்புமற்றவர்களாக இருப்பர்.

# பாலியல் வன்முறை

# சட்டவிரோதமானது

நீங்கள் அல்லது உங்களுக்குத் தெரிந்த ஒருவர் பாலியல் வன்முறைக்கு ஆளாகியிருந்தால் பாலியல் வன்முறையால் பாதிக்கப்பட்டோர் / கற்பழிக்கப் பட்டோர்க்கு உதவும் மையம் அல்லது பாலியல் வன்முறையில் பாதிக்கப பட்டோரை பராமரிக்கும் மையம் அல்லது உங்கள் சமூகத்தில் உள்ள பெண்கள் குழு ஒன்றுடன் தொடர்பு கொள்ளுங்கள்.

Ontario




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவுக்கு ரஷ்ய ரொக்கட் விற்பனை

ரஷ்யா இந்தியாவுக்கு ரொக்கட் இயந்திரங்களை விற்பனை செய்யவுள்ளது. ஆனால் இதற்கான தொழில்நுட்பத்தை விற்பனை செய்ய மாட்டாது என்று ரஷ்யா தெரிவித்துள்ளது. முன்பு ரொக்கட் விற்பனை, தொழில்நுட்ப உதவி என்பனவற்றுக்கு அமெரிக்கா ரஷ்யாவிடம் ஆட்சேபம் தெரிவித்திருந்தது. டோக்கியோவில் நடைபெற்ற கைத்தொழில் நாடுகளின் மாநாட்டில் கிளின்டன் யெல்ஸ்டினிடம் இதுகுறித்து ஆட்சேபம் தெரிவித்ததை அடுத்து கடந்த 91ம் ஆண்டு இந்த ஒப்பந்தம் ரத்து செய்யப்பட்டது. ஏழு ரொக்கட் இயந்திரங்கள் விற்பனை செய்யப்படும். இதில் முதலாவது இயந்திரம் 96ம் ஆண்டு வழங்கப்படும்.

திரவ ஐதரசனும் திரவ ஒட்சிசனும் சேர்ந்த எரிபொருளை பாவிக்கும் இந்த ரொக்கட் இயந்திரங்கள் மிகவும் வலிமை வாய்ந்தன. தற்போதைய உபகோள்களை விண்வெளிக்கு ஏவ 12 தொன் நிறையான ரொக்கட் இயந்திரங்கள் தேவை.

இந்த இயந்திரங்கள் கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணைகளை உருவாக்க இந்தியாவினால் பயன்படுத்தப்படலாம் என்றே அமெரிக்கா கருதி வருகிறது.

# புலிகளின் வள்ளம் தகர்ப்பு

பூனகரியிலிருந்து புலிகளால் கடத்திச் செல்லப்பட்ட அதிவேகப்படகு ஒன்றை கடற்படையினர் அழித்ததாகவும் அதிலிருந்த ஏழு புலிகள் கொல்லப்பட்டதாகவும் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்தது. இரண்டு கடற்படைப் படகுகள் இந்தப் படகைக் கண்டு துரத்திச் சென்று அழித்ததாகவும் அது தாக்கப்பட்டபோது பல தடவைகள் வெடித்ததால் அதில் வெடிமருந்துகள் இருந்திருக்க வேண்டும் என்றும் பாதுகாப்பு அமைச்சு மேலும் தெரிவித்தது.

# சந்திரிகாவுக்கு பதவி

சுதந்திரக் கட்சியில் நிர்வாக சபைக்கு பண்டாரநாயக்க குடும்பத்தினரே தெரிவு செய்யப்பட்டிருக்கிறார்கள். சுதந்திரக் கட்சியின் தலைவியாக சிறிமாவோவும் உபதலைவியாக சந்திரிகாவும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இந்த உபதலைவர் பதவி புதிதாக ஏற்படுத்தப்பட்டதாகும். சிறிமாவின் சகோதரரான கேணல் அனுருத்த ரத்வத்தை தேசிய அமைப்பாளராக நியமிக்கப்பட்டிக்கிறார். முன்பு இந்தப் பதவியை அனுரா பண்டாரநாயக்க வகித்திருந்தார்.

அடுத்த ஜனாதிபதி தேர்தலில் சிறிமாவே எதிர்க்கட்சி சார்பில் போட்டியிடுவார். ஜனாதிபதி தேர்தல் நவம்பரில் அல்லாமல் ஆகஸ்டிலேயே நடத்தப்படும் என்றும் அவர் ஊகம் தெரிவித்தார். தான் பதவிக்கு வந்தால் ஜனாதிபதி முறைமையை ஒழித்து பாராளுமன்ற முறையைக் கொண்டு வரப் போவதாகவும் அவர் மேலும் கூறினார்.

இந்தப் பதவிப் போட்டிகளில் தான் ஒதுக்கப்படுவதாகக் கருதியே அனுரா ஐ.தே.கட்சியில் சேர்ந்தார்.

# உலக அழகியாக இந்தியப் பெண்

உலக அழகியாக இந்தியப் பெண் தெரிவு செய்யப்பட்டிருக்கிறார். சுஷ்மிதா சென் என்ற பதினெட்டு வயதான பெண் முதன் முறையாக உலக அழகிப் பட்டம் பெற்ற இந்தியப் பெண்ணவர். 77 நாடுகளைச் சேர்ந்தவர்களுடன் போட்டியிட்ட இவர் தனது ஆதர்ஷ பெண்மணிகளாக இந்திரா காந்தியையும் அன்னை தெரேசாவையும் குறிப்பிட்டார். தனக்கு அரசியலில் ஈடுபாடு இல்லை என்றும் பெண்களின் உரிமைக்காக பாடுபடப் போவதாகவும் அவர் தெரிவித்தார். இவருக்கு 215 ஆயிரம் டொலர் பரிசு கிடைத்தது. பிலிப்பைன்சில் நடைபெற்ற இந்த போட்டியின் போது பிலிப்பைன்ஸ் பத்திரிகைகள் ஒவ்வொரு நாளும் கலந்து கொள்ளும் அழகிகளின் படங்களை முன்பக்கத்தில் நீச்சலுடையில் வெளியிட்டு அவர்கள் பற்றிய தகவல்களையும் தெரிவித்திருந்தது.

# காமினியை உள்ளிழுத்து கட்சிக்கு உயிரூட்ட முயற்சி

காமினியை புதிதாக கட்சியில் சேர்ப்பதன் மூலம் கட்சிக்கு புத்துயிரூட்ட ஜனாதிபதி முயன்று வருகிறார். கொழும்பு பத்திரிகை ஒன்றில் வந்த கருத்துப்படி காமினி ஒரு முழு வட்டம் சுற்றிய நிலையில் மீண்டும் ஐ.தே.கவுக்குள் வந்திருக்கிறார். ஆனால் எந்த ஜனாதிபதிப் பதவியை ஒழிக்க வேண்டும் என்று கங்கணம் கட்டினாரோ, அதே பதவியில் விஜேதுங்கவை அமர்த்துவதற்காக அவர் இனிமேல் பிரசாரம் செய்யப் போகிறார்.

ஆனால் காமினியின் அரசியல் திறன், ஒழுங்குபடுத்தும் திறன், பேச்சுத் திறன் என்பவற்றை கட்சி பயன்படுத்த முனைகிறது. பிரேமதாசாவின் பின்னர் ஒருவருக்கும் இந்த திறன் கட்சியில் இல்லாதிருந்தது. காமினி 28 வயதில் 70ம் ஆண்டு தேர்தலில் வெற்றியீட்டி பின்னர் 77ல் திரும்பவும் பதவிக்கு வந்தார். பின்னர் மகாவலித் திட்டத்திற்கு பொறுப்பாக நியமிக்கப்பட்டிருந்தார்.

ஆளும் கட்சி தற்போது சீரமைப்புகளில் முழுமூச்சாக ஈடுபட்டிருக்கிறது. தற்போது நிறைவேற்றுக் குழுவில் உள்ள 52 பேரில் பத்துப் பேர் ராஜினாமா செய்யும்படி கோரப்பட்டிருக்கிறார்கள்.

காமினி கட்சிக்குள் வருவதற்கு சிறிசேன கூரே எதிர்ப்பு தெரிவித்து தனது பதவியை இழந்தார். இது குறித்து ஜனாதிபதிக்கும் கூரேயிற்கும் இடையில் நடைபெற்ற உரையாடல் ஒன்றின் போது ஜனாதிபதிக்கு கூரே கூறினாராம் 'ஐயா, காமினி எனது பதவிக்காக வரவில்லை. உங்களது பதவிக்காகத் தான் வருகிறார். எனவே நானல்ல, நீங்கள் தான் கவனமாக இருக்க வேண்டும்'.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரொறன்ரோ தேடகம் நூல்நிலையம் தீக்கிரையாக்கப்பட்டது

ரொறன்ரோவில் வெலெஸ்லி/ பார்லிமென்டில் அமைந்துள்ள தேடகம் நூலகம் இனம் தெரியாதவர்களால் 23.5.94 நள்ளிரவு 1.30 மணியளவில் தீக்கிரையாக்கப்பட்டுள்ளது. 23.5.94 விக்டோரியா தினம். இரவு வாணவேடிக்கைகள், வெடிச்சத்தங்கள் மத்தியில் இதயமில்லாத மனிதங்கள் தேடகம் நூலகத்தை தீக்கிரையாக்கிவிட்டன. பின்புற ஜன்னல் உடைக்கப்பட்டு பெற்ரோல் குண்டு ஒன்று வீசப்பட்டிருக்கிறது. தீ கொழுந்து விட்டெரிந்து பத்திரிகைகள், சஞ்சிகைகள், தளபாடங்களை நாசம் செய்யத் தொடங்கியது. அப்போது அந்த கட்டத்தில்வசித்தவர்கள் தீ பரவுவதை அறிந்து தீயை அணைப்பதில் ஈடுபட்டதுடன் தீயணைக்கும் பிரிவு வரவழைக்கப்பட்டது. இருப்பினும் பரவிய தீ கண்ணாடிகளை உருக்கி உடைத்து, தளபாடங்களை கபளீகரம் பண்ணி, பல பெறுமதி வாய்ந்த ஆவணங்களை நாசம் செய்து விட்டது.

புகலிடங்களிலுள்ள சஞ்சிகைகள், உலக நாடுகளிலுள்ள பத்திரிகைகள், சஞ்சிகைகள், ஏராளமான நூல்கள் இவ் நூலகத்தில் மக்களுக்காக வைக்கப்பட்டுள்ளன. பல ஆண்டுகளாக அரசாங்க உதவியின்றி தங்களது சொந்த பணத்தில் இந்த நூலகத்தை நடாத்தி வரும் இந்த இளைஞர்கள் தமிழ் மக்களுக்கு பெரும் சேவையாற்றி வருவது யாவரும் அறிந்ததே. இன்று ஆயிரக்கணக்கான வாசகர்கள் தேடகத்தின் மூலம் பயனடைபவர்கள், எல்லா பத்திரிகைகளையும் இங்கே வந்து வாசிப்பவர்கள் பலர். இத்தனை ஆண்டுகள் தங்கள் சொந்த பணத்தில் தமிழுக்கு சேவையாற்றிய இந்த தமிழ் நூலகத்தை நள்ளிரவில் தமிழ்க் கரங்கள் தீக்கிரையாக்கி விட்டன.

கண்ணாடிகள் வெடித்து.. புகை பிடித்து கரிய நிற சுவர்களாய் மாறி.. சஞ்சிகைகளும், பத்திரிகைகளும், சாம்பலாய்.. நிலம் வெடித்து.. எரிந்து மேசைகள் கதிரைகள், பாதி எரிந்து சாம்பலான நிலையில், சுவர்களிலே அழகாய் தொங்க சீகிரிய ஓவியங்கள் உருகி வடிய இதற்கு மேல் புதிய கலாச்சாரம் எனும் சஞ்சிகை எரிந்து எழுந்து நின்று கொண்டிருந்தது. புகலிடத்தின் புதிய கலாசாரம் துப்பாக்கிகளிலும் தீ வைப்புகளிலும் தான் வளர்ந்து கொண்டிருக்கிறது.

தேடகம் நூலகத்தின் அமைப்பிலுள்ள இளைஞர்கள் மிகவும் வேதனையும் ஆத்திரமும் அடைந்துள்ளனர். ஒரு வயோதிபர் "பேப்பர்படிக்க வந்தேன், ஆனால் எரிச்சுப்போட்டாங்கள். இவங்கள் உருப்படுவாங்களா" என வேதனையுடன் கூறினார்.

இன்னுமொரு இளைஞர் 'நான் வேலைவிட்டு புத்தகம் எடுத்துப் போக வந்தேன். பார்த்தவுடன் ஏங்கிப்போனேன்" என்றார்.

மாலையாகியதும் நூலகத்தை நோக்கி பத்திரிகை வாசிக்க வந்த பெரும்பாலோனோர் அதிர்ச்சியும், ஆத்திரமும் வேதனையுமடைந்தனர்.

கொட்டும் மழையிலும் தேடகத்தின் முன் நூற்றுக்கணக்கான மக்கள் துயரம் தோய்ந்த முகங்களுடன் தேடகத்தினரால் நடாத்தப்பட்ட கண்டனக் கூட்டத்தில் கலந்து கொண்டார்கள்...

திரு.ஜெயகரன் தொடர்ச்சியாக தமது பணியில் ஈடுபடும் தமிழர்களுக்காக தமிழர் ஆற்றும் பணி, இதை என்றென்றும் தொடர்வோம் என கருத்து தெரிவித்தார்.

திரு.சாம்பசிவம் கோணேஸ் "இக் கொடிய செயலை புரிந்தவர்கள் நிட்சயமாக மனிதர்களாக இருக்க மாட்டார்கள். உங்கள் ஒற்றுமையினூடாக மக்களின் ஜனநாயக உரிமைக்காகவும் எத்தகைய தடங்கலையும் மீறியும் மனிதாபிமானம் கொண்ட மனிதர்களால் தமிழர் வகைதுறைவள நிலையம் தமது சேவையை தொடரும்" என்று இவரது வேதனையூடாக வெளிவந்த வார்த்தைகள் கூடியிருந்தவர்களின் மனதைத் தொட்டது.

விழிப்பு அமைப்பைச் சேர்ந்த அமிர்தவர்ஷினி, பாமதி, ஸ்டீவ், சபாநடேசன் மற்றும் பலர் தமது கருத்துக்களை துணிச்சலாகவும், வேதனையுடனும், தொடர்ந்தும் இச் செயல்களை வன்மையாக கண்டித்தும் உரையாற்றினார்கள்...

தேடகம்வெளியிட்ட அறிக்கை ஒன்றில் 'மாற்று அரசியல் கருத்துக்களுக்கும் மாற்று வேலை முறைகளுக்கும் எதிராக துப்பாக்கிச் சூடுகளும்தீ வைப்புகளுமே எம் நாட்டு அரசியல்வாதிகளிடமிருந்து நாம் கற்றுக் கொண்ட விடயங்களாகும். இவ்வகையான தொடர் நிகழ்வுகளில் ஒன்றே இத்தீ வைப்பாகும். ஈழ வரலாற்றின் நெடும்பாதையில் எஞ்சிக் கிடப்பவை எரிந்த நூல்களும், தலையிழந்த மனித உடல்களுமே. இந்த வரலாற்றுத் தடங்களை கனடாவில் தொடர அனுமதிக்கப் போகிறோமா?' என்று கேள்வி எழுப்பப்பட்டிருந்தது.

இந்த தீ வைப்பு சம்பவம் பற்றி செய்தி உடனடியாக உலகம் பூராவும் பரவியது. ரொறன்ரோ பத்திரிகைகள் மட்டுமன்றி இலங்கைப் பத்திரிகைகளும் உடனடியாக செய்தி வெளியிட்டன. ஐரோப்பிய சஞ்சிகைகளின் ஆசிரியர்கள், இலக்கிய ஆர்வலர்கள் உடனடியாகத் தொடர்பு கொண்டு நிலைமையை அறிந்து கொண்டனர். பிரான்சில் தமிழ் அகதிகள் சார்பில் வெளியிடப்பட்ட அறிக்கை ஒன்றில் 'புகலிட தமிழர் சமூகத்தில் விடுதலைப் போராட்ட துரோகிகளின் வெறித் தனம், முன்னெப்போதுமில்லாதவாறு அகோர நர்த்தனம் புரிகிறது. மாற்றுக் கருத்துள்ளவர்களை தாக்குதல், படுகொலை செய்தல், கொலை மிரட்டல் என்பவற்றுடன் நூலக எரிப்பும் கனடாவில் அறிமுகப் படுத்தப்பட்டுள்ளது. அன்று யாழ். பொதுநூல் நிலையம் தீயிடப்பட்டு சாம்பல் மேடாக்கப்பட்ட போது அவ் ஈனச் செயல்களை கண்டித்த தமிழர் சமூகம் இக்காடைத்தனத்தையும் கண்டிக்க முன்வர வேண்டும். அறிவார்ந்த நூல்கள், வெளியீடுகளைக் கண்டதும் இச்சமூக விரோதிகள் ஏன் எப்போதும் பீதியடைந்து தாக்குகிறார்கள் என்பது இன்று வரை புரியாத புதிராகவே உள்ளது. உலக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரலாற்றில் மக்களின் விடுதலையை முன்னெடுத்தவர்கள் எவருமே நூல்நிலையங்களை எரித்ததாக வரலாறு இல்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

'எதிர்ப்பு காட்டும் உரிமையை பாதுகாக்க ஒன்று திரள்வோம்' என்ற தலைப்பில் இலங்கையில் ஜனநாயக உரிமைகளைப் பாதுகாப்பதற்கான இயக்கம், மக்கள் செயற்பாட்டிற்கான ஆய்வு கல்வி நிறுவனம், இனங்களுக்கிடையிலான நீதி,சமத்துவ இயக்கம் ஆகியன இணைந்து விடுத்த அறிக்கையில் 'எதிர்ப்பை அடக்க [illegible] பயன்படுத்துகின்ற வடிவம் இது. இந்த தாக்குதல் ஐரோப்பாவிலும், [illegible] தொடர்புகளையும் காட்டுகிறது, யார் இந்த வன்முறைக்கு காரணமானவர்கள்? எல்லா ஆதாரங்களும் தமிழ் நாட்டின் இரட்சகர்களாக தங்களை கூறிக் கொள்பவர்களைத் தான் காட்டுகின்றன, அவர்கள் பலமிழந்ததால் எதிர்ப்பை எதிர்கொள்ள முடியாதிருக்கிறார்களா? அல்லது பயங்கரவாதம் தான் அவர்களது தெரிந்தெடுத்த வழிமுறையா? கனடா, ஐரோப்பா, எங்குமுள்ள ஜனநாயக அமைப்புகள் இந்த ஜனநாயக விரோத நடவடிக்கைகளுக்கு எதிராக கடுமையான வழியில் எதிர்ப்பைத் தெரிவிக்க வேண்டும். சுவிட்சலாந்து அகதிகளை திருப்பி அனுப்ப முயலும் இக்கட்டத்தில் இந்த வன்முறைகள் அதிகரிக்கின்றன. இது அகதிகளை வெளியேற்ற முயல்பவர்களின் காரங்களைப் பலப்படுத்தும்' என்று குறிப்பிட்டுள்ளது.

இதற்குள் புலிகள் நடாத்தும் தொலைபேசிச் சேவையில் 'இதற்கான காரணமோ, மேற்கொண்டவர்கள் பற்றியோ அறியப்படாத நிலையில் இத்தீவைப் பின விடுதலைப் போராட்டத்திற்கு எதிரான பிரசாரத்திற்கு பயன்படுத்த சில புல்லுருவிகள் முனைந்திருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன. விடுதலைப் போராட்டத்தின் மீது சேறடிக்கும் இவ்வவசர முயற்சி இத்தீயைப் பிற்கு இவர்களே காரணமாக இருந்திருக்கக் கூடும் என்ற சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது. தமிழ்ழ விடுதலைக்கு எதிரான தீயசக்திகளால் சர்வதேச ரீதியாக முடுக்கி விடப்பட்ட நாசகார செயற்பாட்டின் ஒரு வடிவமாக இது கருதப்படுகிறது' என்று கூறப்பட்டது.

தொடர்ந்து இவர்களது சேவையை பாராட்டி இவர்களது எரிந்துபோன இந்த நூலகம் புத்துயிர் பெற்று எழுந்து மீண்டும் புத்தெழில் பெற்று தமிழ் மக்களுக்கு சேவையாற்ற வேண்டுமென ஒவ்வொரு மனிதாபிமானமுள்ள மனிதர்களிடமும் கேட்போம்.

# தீ எரிக... எமதறிவு கனலுக..

தீ எரிக
அதனிடத்தே நெய் சொரிகின்றோம்
தீ எரிக
அதனிடத்தே தசை சொரிகின்றோம்
தீ எரிக
அதனிடத்தே செந்நீர் சொரிகின்றோம்
தீ எரிக
அதற்கு வேள்வி செய்கின்றோம்
தீ எரிக
அறத்தீ, அறிவுத்தீ, உயிர்த்தீ,
விரதத்தீ, வேள்வித்தீ
சினத்தீ, பகைமைத்தீ, கொடுமைத்தீ
இவை அனைத்தையும் தொழுகின்றோம்.
இறைஞ்சுகின்றோம்
தீயே நீ எமது உயிரின் தோழன்
உன்னை வாழ்த்துகின்றோம்
நின்னைப்போல
எமதுயிர் நூறுண்டு [illegible]
சுடரும்
தருக
தீயே நின்னைப்போல எமதுள்ளம்
சுடர்விடுக
தீயே நின்னைப்போல எமதறிவு கனலுக
[illegible]

**மூர்த்தி**

மக்கில் பல்கலைக்கழக லிகொக் வளாகக் கட்டிடம்.
மே இருபத்தியாறு வியாழக்கிழமை..

பி.எச்.டி பட்டத்திற்கான ஆய்வுக்காக சமர்ப்பிக்கப்படுகின்ற ஆராய்ச்சிக்கட்டுரைத் தொகுப்பிற்கான தலைப்பு "Safeguarding Mother Tamils Honour in Multicultural Quebec"

ஆய்வுக்கட்டுரையை சமர்ப்பிப்பவர்: திருமதி பேர்ன் (Fern Marjorie Brunger) மனிடோபாவிலுள்ள வின்னிபெக்கில் பிறந்து ஆங்கிலத்தை தாய்மொழியாக கொண்ட பெண். தமிழை நன்கு எழுதத் தெரிந்த பெண், மழலையாக தமிழ் பேசத் தெரிந்த பெண்.

மண்டபத்தின் இரண்டு ஆள் உயர கண்ணாடி ஜன்னலுக்கு அப்பால் காற்றுடன் மழையடிக்கிறது. உள்ளே [illegible] தமிழ் [illegible] பற்றியும் [illegible] அவர்களால் [illegible] அனுபவபூர்வமான பங்களிப்பு பற்றியும், அவர்களது கலாச்சாரத்து அரசியல் பற்றியும் ஒரு தெளிவான ஆய்வு பற்றிய சமர்ப்பணம் தொடர்ந்து கொண்டிருக்கிறது. என் உடம்பு உண்மையிலேயே அடிக்கடி சிலிர்த்துக் கொண்டது குளிரினால் அல்ல.

முன்பு நாங்கள் கேள்விப்பட்டிருந்த மானுடவியல் ஆராய்ச்சியாளர்களும் தமிழ், சைவ நிபுணர்களுமான புரொபஸர் மக். கின்ஜென், புரொபஸர் ஓர் ஆகியோருடன் புரொபஸர் அட்லுட் புரொபஸர் கோரின் ஆகியோரும் மண்டபத்தில் குழுமியிருந்து கட்டுரையாளரை நோக்கிய வண்ணம் இருந்தனர். அங்கே நானும்....

பேர்ன் தனது ஆராய்ச்சியில் [illegible] புதிய உலகச் சமூகத்தில் கனடாவின் பல்கலாச்சார கொள்கை [illegible] எல்லைகளில் [illegible] தமிழ்மக்களுக்கு ஏற்புடையதாக கணிக்கப்பட முடியும் என்பதை அடிப்படை நோக்கமாயும் கூடவே தமிழரின் பாரம்பரியமும் கலாச்சாரமும் அதற்கு எல்லையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒத்து வருகின்றன அல்லது பாதிக்க முயல்கின்றன என்ற சமாந்தர நோக்கத்தையும் கொண்டிருப்பதை விளக்கினார். இதற்காக சமர்ப்பிக்கப்பட்ட 324 பக்கங்களைக் கொண்ட ஆராய்ச்சிக் கட்டுரைத் தொகுப்பில் அவர் சிலப்பதிகாரம், திருக்குறள், கம்பராமாயணம் உட்பட பல பழைய நூல்களை மேற்கோள் காட்டியும் சமகாலத்தில் மொன்றியாலில் வாழும் பல தமிழ்கலாச்சார ஆர்வலர்களின் கருத்துக்களைத் தொகுத்தும், மொன்றியாலில் இயங்கிவரும் கனடா தமிழ் கலாச்சார சங்கம், ஈழத்தமிழர் ஒன்றியம், உலகத்தமிழர் இயக்கம், சைவ மகாசபை என்பவற்றுடன் சில வருடங்களுக்கு முன்வரை மொன்றியாலில் இயங்கிய தேடகம் அமைப்பு போன்ற அமைப்புக்கள் கலாச்சாரத்தை காக்க முயலும் வழிவகைகளைப் பற்றியும், பிரச்சனைகள் பற்றியும் தகவல்களைத் தொகுத்திருந்தார். மொன்றியாலில் வெளிவந்த தமிழ்எழில் வீணைக்கொடி சஞ்சிகையிலிருந்தும் 'நாயகன்' பத்திரிகையிலிருந்தும் மறுபிரசுரங்கள் ஆய்வில் சேர்க்கப்பட்டிருந்தன. தாயகம் பத்திரிகை கலாச்சாரத்தைக் காக்கும் முயற்சியில் அது செய்துவரும் பங்களிப்பு, 'கலாச்சார யுத்தத்தினால்' அதற்குவரும் பாதிப்புகள் பற்றியும் கூட தகவல்கள் தெரிவிக்கப்பட்டிருந்தன.

ஆய்வு சமர்ப்பிக்கப்பட்டதும் கேள்விகளும் சரமாரியாக தொடுக்கப்பட்டன. தமிழ் பெண்கள் எதிர் கொள்ளும் பிரச்சனைகள் ஆய்வில் அதிக கவனத்தில் கொள்ளப்படவில்லை. என்பது சுட்டிக் காட்டப்பட்டதும், ஆண்களே தமிழ் கலாச்சாரத்தினை வளர்ப்பதில் முன்நிற்கிறார்கள் என்ற கருத்து ஆராய்ச்சியில் தொனிப்பது ஒரு புரபெஸர் தெரிவித்ததற்கு பதிலாக "இங்கு தமிழ் ஆண்கள் தொகை அதிகமாயிருப்பதாலும் இருக்கும் பெண்களுள் பெருந்தொகையானோர் வேலைசெய்வதால் தமிழ்க் கலாச்சாரத்தை காப்போர் தொகையில் தமிழ் பெண்கள், குறைவாக தெரிகிறார்கள் என பேர்ன் தமிழ்ப் பெண்கள் சார்பில் தெரிவித்தார். தமிழ் ஆண்கள் தமிழ்ப் பெண்களின் 'கற்பு' பற்றி இந்த பல்கலாச்சார சமூகத்தில் வைத்திருக்கும் நிலைப்பாடு பற்றிய கேள்விகள் தொடுக்கப்பட்ட போது 'ஒருவனுக்கு ஒருத்தி" என்று தான் தமிழர்களின் பாரம்பரியம் சொல்கிறதே தவிர "ஒருத்திக்கு ஒருவன்" என சொல்வதில்லை என தமிழ் ஆண்கள் சார்பில் சொன்னார். இதுபோன்ற பல சுவையான விவாதங்கள் முடிந்து, பார்வையாளர்களையெல்லாம் வெளியே போகச் சொல்லிவிட்டு, பரீட்சைக்கமிட்டி கூடி, பல குறுக்கு விசாரணைகளின் பின், மக்கில் பல்கலைக் கழகத்தில் இவ்ஆய்வுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு மாணவி பேர்ண் டாக்டர் பேர்னாக உருவாக்கப்பட அங்கு தமிழ்...தமிழ்.. .தமிழ்தான்....

டாக்டர் பேர்ன் சமர்ப்பித்த ஆய்வு புத்தகமாக வெளிவரவேண்டும் என்ற கருத்து அங்கு வெளிக் கொண்டுவரப்பட்டது. கனடாத் தமிழர்களைப்பற்றி ஏனைய கனேடியர்களும் கனேடிய கொள்கைகளைப் பற்றி தமிழர்களும் எதிர்காலத்தில் உணர்ந்துகொள்ள இவ்வகை நூல்கள் பூரண உதவிபுரியும் என்று நம்பிக்கையும் சொல்லப்பட்டது.

என்னது... என்னது..... புத்தகமா...? டாக்டர் பேர்ன் தனது ஆராய்ச்சிக்கே சுமார் அறுநூறுக்கு மேற்பட்ட பிரசுரங்கள், புத்தகங்கள் வரை தேடி தமிழைப்பற்றி படித்து, மொழிபெயர்த்து கனடாத் தமிழர்களைப் பற்றி ஆராய்ச்சிக்கட்டுரை ஒன்றை இதே கனடாவில் சமர்ப்பித்திருக்கின்றார். ஆனால் நாங்கள் கனடாத் தமிழர்கள் அல்லவா... தேடுவோம்... எங்காவது நூல்நிலையங்கள் கண்ணில் பட்டால் எடுப்போம் எரிகுண்டு......எறிவோம். . எரிப்போம். தமிழுக்கு நம்மாலான பணி இதுதானே!

ஏசுங்கோடா.. எரியுங்கோடா....

# மாபெரும் கண்டன ஊர்வலம்

**தேடகம் தீக்கிரையாக்கப்பட்டதற்கு**
**கண்டனம் தெரிவிக்குமுகமாக**
**சனிக்கிழமை 28.5.94 மாலை 4 மணிக்கு**
**566 பாராளுமன்ற வீதியில்**
**கண்டன ஊர்வலம் ஆரம்பமாகும்.**

**இலங்கையில் ஜனநாயகத்திற்கான அமைப்பு,**
**மனித உரிமைகளுக்கான இலங்கையர்,**
**விழிப்பு, கிரியாகுரல், தாயகம்**

தொடர்புகளுக்கு
*968 2603*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# GOOD BYE BALDNESS



## முடி உதிர்பவர்களுக்கு ஒரு நற்செய்தி

ஒரு சிறு குமிழ்
உங்கள் கேசத்தை
வளரச் செய்கிறது

பரீட்சித்துப் பாருங்கள்
Try First

பலர் இச்சிகிச்சை மூலம் பயன் அடைந்துள்ளனர்

239 Carlton St
Toronto, Ont
Tel:922-0478

## சிறந்ததையே தெரிவு செய்யுங்கள்!
## Dr.ROBERT VITAMOL, BETTER THAN VIVA HORLICKS




VITAMOL சத்துள்ளதாகவும் மிகுந்த சுவையுள்ளதாகவும் இருப்பதால் விவா ஹோர்லிக்ஸை விட விட்டாமோலை பலர் விரும்புகின்றனர். விட்டாமோல் டாக்டர்.ரொபேட்டினால் தயாரிக்கப் பட்ட சத்துணவுப் பானமாகும். விட்டமின்கள், இரும்புச் சத்து, கல்சியம், தேன் கொண்ட ஒரே சத்துணவுப் பானம் இது. உடலின் சகல பகுதிகளுக்கும் தேவையான உணவு இது. உதாரணமாக கல்சியம் எலும்புக்கு அவசியமானது. விட்டமின்களும் இரும்புச் சத்தும் இரத்தக் குறைபாட்டைத் தடுக்க அவசியமானது. எனவே சிறந்ததைக் கொண்டு உங்கள் உடலுக்கு உணவளியுங்கள். ஒவ்வொரு போத்தல் விட்டாமோலிலும் அதிகம் பெறுங்கள். தரம், அளவு, விலை என்பவற்றை ஒப்பிடுங்கள். தரத்திலும் பெறுமதியிலும் சிறந்த விட்டாமோலைக் கேட்டு வாங்குங்கள். விட்டாமோல் குழந்தைகளுக்கும் வயதானவர்களுக்கும் பரிந்துரை செய்யப்படுகிறது.




### NERVOGEN NERVE FOOD


உடலின் கடுமையாக உழைக்கும் பகுதிகளான மூளை, சிறுநீரகம், ஈரல், இதயம் போன்றவற்றிற்கு சிறந்தது. சனட்டோஜனை விட சிறந்த புரதத்தைக் கொண்டிருப்பதுடன் சுவையானதும் கூட. [illegible] வளர்ச்சிக்கு கேட்டு வாங்குங்கள்.

[illegible]மரிக்காவிலும், கனடாவிலும் மேற்கிந்திய
[illegible] கிடைக்கும்.
[illegible]handise Co.
[illegible]




### CHATAK: CURRY EXCELLENT

Chatak Madras Curry Powder இன்றைய நிலையில் சிறந்த கறி பவுடராகும். 475 வருட காலமாக வரும் பாரம்பரியப்படி தயாரிக்கப்பட்டது. மற்ற கறி பவுடர்களை விடச் சிறந்தது. Chatak Meat Seasoning, Fish Seasoning, Tandoori Chicken Mix போன்றனவும் கிடைக்கும்.




### DR.ROBERT'S GLUCOSE

குளுக்கோஸ் மரக்கறிகளிலும் பழங்களிலும் இயற்கையாகக் கிடைக்கிறது. டாக்டர் ரொபேட்டின் குளுக்கோஸ் இயற்கையான மூலப்பொருட்களிலிருந்து அதிஉயர் தரத்திற்கு தூய்மைப்படுத்திப் பெறப்பட்டது. இது உடனடியான சக்தித் தேவைகளுக்குரியது. மூளை, இரத்தம், ஈரல், தசைகள் போன்றவற்றிற்கு சிறந்தது. பால்குடிக்கும்குழந்தைகளுக்கும் வயதானவர்களுக்கும் சிறந்தது, ஏனெனில் இது உடலினால் உடனடியாக உறுஞ்சப்படுகிறது

அன்பளிப்புப் பொருட்கள், பொம்மைகள், இலங்கை உணவுப் பொருட்கள், மேற்குறிப்பிட்ட பொருட்கள் அனைத்திற்கும் தொடர்பு கொள்ளுங்கள்

BUDGET SUPERSAVINGS DISCOUNT
1340 Queen st west (East of Lansdowne)
Tel:(416) 5370394

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாமெல்லாம் திராவிடர்!



## அசை

*மனநலம் நன்குஉடையா ஆயினும் சான்றோர்க்கு
இனநலம் ஏமாப்பு உடைத்து.*

பிறவியிலேயே நல்ல மனம் உடையவராக இருந்தாலும் சேர்ந்த இனம் நன்றாக இருப்பது சான்றோர்க்கு காப்பான வலிமையுடையதாயிருக்கும் என்று வள்ளுவர் சொல்கிறார்... எங்கள் இனத்தைப்பற்றி நினைக்கும்போது இந்தக் குறள் ஞாபகத்துக்கு வருவதைத் தவிர்க்க முடிவதில்லை.

எங்கள் இனம் இப்படித் தெருத் தெருவாக நாடு நாடாக அலைவதற்கும் ஏதாவது காரணம் இருக்கக் கூடுமோ? அப்படியாயின் எங்கள் மனங்கள் நல்லனவாய் இல்லை என்று பொருள் கொள்ள முடியுமோ?

வெள்ளைக்காரர் இனத்துவேஷிகள் என்று ஊர்வலம் போகிறோம். அப்படியிருந்தும் இன்னும் எங்களை அகதிகளாக ஏற்றுக்கொண்டு தானிருக்கிறார்கள்! சிங்களவர்களைக் காட்டுமிராண்டிகள் என்று தூற்றிக்கொள்ளுகிறோம். அவர்களது காடுகளில் எங்களவர்கள் கானமிசைத்துக் கொண்டிருக்கின்றார்கள்! எல்லைகளை எடுத்துவிட்டுப் பாருங்கள். மக்கள் எங்கு ஓட எத்தனிக்கிறார்களோ அங்குதான் சந்தோஷமிருக்கிறது என்று அர்த்தம். முடியுமா எங்களால்?

நமது மனங்கள் நன்றாகவே இல்லை. அதனால்தான் நாம் பெருந்துன்பங்களை அனுபவிக்கிறோம்.

சமீபத்தில் ரொறொன்டோவில் தேடகம் நூலகம் இனம் தெரியாதவர்களால் எரிக்கப்பட்டது. கிடைத்தற்கரிய பல நூல்கள் ஓவியங்கள் ஆவணங்கள் தீக்கிரையாக்கப்பட்டன. யார் எரித்தார்கள்? இவர்கள் மனம் எப்படிப்பட்டதாயிருக்கும்? யாழ் நூலகத்தை சிங்கள இராணுவம் எரித்தபோது உலகமே கண்ணீர் வடித்தது. இதயமில்லாதவர்கள், சிந்திக்கத் தெரியாதவர்கள் காட்டுமிராண்டிகள் என்றெல்லாம் அவர்களை வர்ணித்தோம். இன்று அதே தமிழர் நாம் நமது நூலகங்களையே எரித்துக் கொள்கிறோம்! யாருக்கு இதயமில்லை? யாருக்கு மூளையில்லை?

சபாலிங்கம் கொலை செய்யப்பட்டபோது அவரைப்பற்றித் தூற்றி எழுதியது ஒரு தமிழ்ப் பத்திரிகை. தேடகம் நூலகம் எரிந்து சாம்பலாயிருக்கும்போது அதைத் தேடகக்காரரே எரித்துக் கொண்டார்கள் என்று சந்தேகப்பட வேண்டியிருக்கிறது என்று தமிழ் செய்திச் சேவை ஒன்று திரித்துக் கொள்கிறது.

இப்படியெல்லாம் சொல்வதற்கும் எழுதுவதற்கும் இந்தத் தமிழுடம்புகட்குக் கூச்சமென்றும் இருப்பதாகத் தெரியவில்லை. மக்கள் மனங்கள் ரொம்பவும் அழுகிப்போய் விட்டன! நாங்கள் நடுத்தெருவில் நாய்களிலும் கேவலமாக வாழ்ந்து கொண்டிருக்க வேண்டியவர்கள். எங்களுக்கு ஏன் கல்வி? எங்களுக்கு ஏன் அறிவு? எங்களுக்கு ஏன் கலாச்சாரம்?

தேடகம் நூல்நிலையத்தைப் பற்றி பலரும் பலதையும் சொல்லிக் கொள்ளட்டும் அவர்களது நூலகத்தைப் பலரும் பயன்படுத்தினார்கள். கருத்துப் பரிமாற்றங்களுக்கு மேடையமைத்துக் கொடுத்தார்கள். அவ்வப்போது ஒருசில தவறுகளையும் இழைத்திருக்கிறார்கள். ஆனாலும் தவறுகளை விடவும் அவர்களது சேவைகள் அளப்பரியது. இத்தனைக்கும் இச்சேவைகளைச் செய்வதற்கு அரசாங்கத்திடமோ அல்லது மதஸ்தாபனங்களிடமோ இருந்து ஒரு செப்புக் காசு கூடக் கிடைப்பதில்லை. தமது சொந்தக் காசுகளைக் கொட்டிக் கொட்டி தமிழுக்கும் தமிழருக்கும் சேவை செய்துகொண்டிருந்தார்கள் இந்த இளைஞர்கள்! கட்டிடத்துக்கு வாடகை பாக்கியிருந்தும் கூட வாசகர்களுக்கு எதுவித பாக்கியும் வைக்காது பாக்கியம் செய்தவர்கள் இந்த இளைஞர்கள். அந்த நூலகம் இப்போது சில தமிழர்களால் எரிக்கப்பட்டிருக்கிறது!

இந்தச் சம்பவம் ஒரு விபத்தாக இருந்திருப்பினும் கூட அதற்காக அனுதாபம் தெரிவிப்பது நாகரீகம். அதை விட்டுவிட்டு இந்த எரிப்பையும் இந்த இளைஞர்களின் நல்ல நோக்கத்தையும் கொச்சைப்படுவது போல எழுதுவதும் பேசுவதும் எந்த ரகம்? இவர்கள் எல்லாம் எனது இனத்தவர்கள்! இதுவே தான் இவர்கள் குணமாகுமானால் எனக்கு அந்தச் சம்பந்தம் வேண்டவே வேண்டாம். இந்த இனம் அழியட்டும். எரியட்டும். எக்கேடு கெட்டுப்போகட்டும்! இராவணனின் வம்சமல்லவா.. அரக்ககுணமல்லாது இரக்க குணமாகவா இருக்கும்.

நூறு குடங்களில் நுங்கினாலென்ன,
நூறு மடங்களில் தங்கினாலென்ன.
நூறு முடங்களை மொங்கினாலென்ன,
இனமெதுவோ குணமதுதான்!
நாமெல்லாம் திராவிடர்...!

**சிவதாசன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தன்னலமற்ற சேவைக்கு அரியதொரு விருது

## ஜனகன்மகள்

சிறீ என்று அழைக்கப்படும் சிறீ குகன் சிறிஸ்கந்தராஜா மிகவும் மனிதாபிமான முறையில் ஒன்ராறியோ மகாணத்தில்வாழும் பல இனங்களுக்கு இடையில் நல்லுறைவை ஏற்படுத்துவதில் முன்னோடியாகத் திகழ்ந்தார் எனப் பாராட்டி பல இனங்களுக்கு இடையே நல்லுறைவை நிலைநாட்டும் நிறுவனம் (URBAN ALLIANCE ON RACE RELATIONS) அரியதொரு விருதை வழங்கியது. இவ் விருது, இந் நிறுவனத்தின் பத்தாண்டுப் பூர்த்தி விழாவன்று, சித்திரை மாதம் 21ம் திகதி ஒன்ராறியோ குடியுரிமை மந்திரி மதிப்பிற்குரிய எலெய்ன் சியெம்பா, ரொறன்ரோ மாநகரசபை அங்கத்தினர் பார்பரா ஹோல், கனேடிய பாராளுமன்ற உறுப்பினர் ஜோசெப் வொல்ப் ஒன்ராறியோ மாகாண பாராளுமன்ற உறுப்பினர் ஜெறி பில்ப்ஸ் மற்றும் வேறு பல இனப் பிரமுகர்கள் முன்னிலையில் வழங்கப்பட்டதுடன் ஒன்ராறியோ முதல்வர் மதிப்பிற்குரிய பொப் றே, ரொரன்ரோ மேயர் ஜுன் றோலண்ட்ஸ் ஆகியோரின் வாழ்த்துரைகளும் தெரிவிக்கப்பட்டன.

சிறீ எம்மவர் பலருக்கு பல விதங்களில் ஏற்கனவே அறிமுகமானவர். இருப்பினும், இந் நேரத்தில் அவரது சிறப்புகளை நாம் மேலும் அறிவதுடன், ஏனையோரும் அறிந்து கொள்வதால் ஈழச்சமுதாயம் மகிழ்ச்சியும் பெருமையும் அடைவதுடன் ஓர் சிறப்பையும் பெற்றுக் கொள்கிறது என்றால் மிகையாகாது.

சிறுபான்மை இனத்தைச் சேர்ந்த அனுபவமும், சட்டத்துறையிலான அனுபவமும் ஒருங்கிணைந்து சிறீகுகன் சிறிஸ்கந்தராஜாவை ஒரு அதி சிறந்த இனத்துவ செயல்திறமை வாதியாக ஆக்கியுள்ளது. அத்துடன் ஒன்ராறியோவில் வாழும் சிறுபான்மை இனங்களின் நீதி சமத்துவம்பேணப்படவும் அங்கீகாரம் பெறவும் வேண்டி நின்ற போராட்டங்களில் முன்னோடியாக நிற்கவும் வைத்துள்ளது.

இலங்கையைப் பிறப்பிடமாகக் கொண்ட சிறீயின் தந்தை சிறீஸ்கந்தராஜா மேல்நீதிமன்றத்தின் பிரதம நீதிபதியாகத் திகழ்ந்து புகழ்பெற்றவர். சிறுபான்மை இனப்


உ

# சோதிடம்

★ ஜாதகக் குறிப்பு எழுதுதல்
*Raphael's Astronomical Ephemeries* இன் அடிப்படையில் பாவ, கிரகஸ்புடகங்கள் தயாரிக்கப்படும். வேறு நாடுகளில் பிறந்தவாகளுககும் ஐம்பது வருடங்களுக்கு முன்னா பிறந்தவாகளுக்கும் ஜாதகக் குறிப்பு எழுதப்படும்.
★ ஜாதகங்கள் பரிசீலிக்கப்பட்டு பலன் கூறப்படும்.
★ அதிட்ட விஞ்ஞான அடிப்படையில் பெயரிடுதல்
★ சுபமுகூாத்தம் நிச்சயித்தல்
★ பாவஸ்புடக ரீதியாக கிரகபாவம் கணிக்கப்பட்டு அங்காரகதோச பரிகாரம் பற்றிய கருத்துக்கமைவாக விவாகப் பொருத்தம் பாாத்தல்

உங்கள் பிரச்சனை எதுவானாலும்
சோதிட ஆலோசனை பெற நாடுங்கள்.

## சி.சிதம்பரப்பிள்ளை

இளைப்பாறிய ஆசிரியா (சாவகச்சேரி)
அனுபவமிக்க சோதிடா
தொடாபுகளுக்கு:
90 Digby Cresent (Brimley/Steeles)
Markham, Ont,L3R 7G7
(905) 513-9840

## கிறிஸ்தவ திருமணங்களில்

மணப்பெண்ணிற்கான தலைச்சோடனை, அலங்காரப் பொருட்கள் குறைந்த விலையில் வாடகைக்கு பெற்றுக் கொள்ள

## மாஜி
## 796 2672

பூங்கொத்துக்கள் நீங்கள் விரும்பிய வடிவங்களில் பெற்றுக் கொள்ளலாம்

**Net, Colorful Flower Bouquet, Flower Basket**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதிநிதியான சிறீக்கு தந்தை சிறீஸ்கந்தராஜாவின் ஆளுமையும் இத்தகைய மனித நேய ஈடுபாட்டை ஏற்படுத்தியது குறிப்பிடத்தக்கது.

தந்தையாரது அடிகளைப் பின்பற்றி சிறீ பட்டப்படிப்பை நாடி இங்கிலாந்து சென்று, கிறே விடுதி (Gray's Inn) யில் இணைந்து படிப்பைத் தொடர்ந்தார். சிறீ தனது சட்டக் கல்வியை பூரணமாக்கி அந்தாட்சிப் பத்திரம் பெற்றுக் கொண்டவர் அல்லாவிடினும் ஓர் சட்டத்தரணியை விட சட்ட நுணுக்கங்களை அனுபவத்தினால் மிகவும் திருத்தமாகவும் ஆழமாகவும் அறிந்து கொண்டவர். 1975 இல் தனது மனைவி ஜனற், மகள் ஆனியா ஆகியோருடன் கனடாவிற்கு குடிவரவாளராக வந்து சேர்ந்தார்.

சிறீயின் தொழில் ரீதியான கடமைக்கும், அவரது மகத்தான மனிதாபிமான பணிக்கும் பேதம் பிரிக்க முடியாத வகையில் அவரது செயற்பாடு தொடர்ந்தது. சிறுபான்மை இன மக்களுக்கு சட்ட ஆலோசகராக ஏற்றுக் கொண்ட தொழில் பணி, ஓர் நிறுவனத்துடன் இணையாது தனியாக நின்ற மக்கள் பாதிப்பிற்குள்ளாகிய இனங்கள் தனிப்பட்டவர்கள், வலது குறைந்தவர், பாலியல் அடிப்படையில் பாரபட்சப் படுத்தப்பட்டவர்கள் யாவருக்கும் உரிமை கோரிய மனித நேயம் கொண்ட சிறீயின் சேவைக்கு மிகவும் பொருத்தமாக அமைந்தது. சமூக நீதி சம்பந்தப்பட்ட விடயங்கள் பிரச்சனைகள் யாவற்றிலும் சமத்துவம் நிலைக்கவேண்டும் என்று தீர்க்கமாக நம்புபவர்.

கடந்த காலங்களில் சிறீ பல பதவிகளை ஏற்று, பல இன மக்களுடன் நேரடியாக தொடர்பு கொண்டு கடமையாற்றினார். கறுப்பர்கள் ஆதார தகவல் நிலையத்தில் (Black Resources Information center) சமூக சட்ட சேவை நிலையத்தில் (Jane Finch Community Legal Services) உயர் சமூக சட்ட அலுவலராகவும், கனேடிய குடிவரவு அகதிகள் சபையில் (The Immigration & Refugee Board) அங்கத்தவராகவும் பணி புரிந்தார். தற்பொழுது சிறீ ஒன்ராறியோ மாகாண குற்றவியல் நீதிப்பிரிவின் திட்டமிட்ட துவேஷங்களை ஆராயும் ஆணைக்குழுவின் இக்கால வேளையில் சிறீ அளப்பரிய சமூக சேவையில் ஈடுபட்டுள்ளார் சிறீ தமிழ் ஈழச் சங்கத்தின் ஆரம்ப கால கட்டங்களில் சங்கத்தின் தலைவராகவும் பொதுசன தொடர்பு பணிப்பளராகவும் சேவையாற்றியதுடன் ஈழத் தமிழர் பலருக்கு பலவிதங்களின் தனது அறிவாற்றலுடன் கலந்த தன்னலமற்ற சேவையைப் புரிந்துள்ள தமிழ்மக்கள் அகதிகளாக கனடா வந்து சேர்ந்த வேளையில் அரசாங்கம் வந்து சேர்ந்த வேளையில் அரசாங்கம் தடை விதிக்காமல் அகதிகளை ஏற்றுக் கொள்ளவேண்டும் என்று அரசாங்க அலுவலகங்கள், உத்தியோகத்தர்கள் மனிதாபிமான ஸ்தாபனங்கள் ஆகியவற்றுடன் தொடர்பு கொண்டு வெற்றியீட்டியவர் இக்கால கட்டத்தில் சிறீக்கு உறுதுணையாக இருந்தது சேவை புரிந்துவர் பலர் தனது சொற்சொழிவின் போது தனது சேவையின் பங்காளர்கள் எனஅவ்வாறுன பலரின் பெயர்களை தெரிவித்தார். அத்துடன் இளம் சந்ததியினர் சிலரின் பெயர்களை பெண்கள் உட்பட குறிப்பிட்டு அவர்களும் இக்கல கட்டத்தில் சில விஷயங்களில் அறிவூட்டுபவர்கள் என்று கூறியது, எமது நெஞ்சைத் தொட்டதுமல்லாமல் அவரது பெருந்தன்மையை ஓர்படி உயர்ந்த எடைபோட வைத்தது. சிறீ ரொறன்ரோ மாநகரின் விழும் இலங்கையர்களுக்கென ஆரம்பிக்கப பட்ட குடும்ப நல சேவை நிறுவனத்திற்கென இந்நாளில் பெரும்பகுதி நேரத்தை செலவிடுகிறார். சிறீ தற்பொழுது சமூக இன உறவுகளுக்கான ரொரறன்ரோ மேயர் குழுவின் உபதலைவராக சேவை ஆற்றுகிறார். இவற்றிற்கு மேலாக, சர்வதேச ஆபிரிக்கரின் முன்னேற்றத் திற்கான நிறுவனத்தில் (Universal African Improvement Association) பணிப்பாளராகவும் கனடா தேசிய கறுப்பர்கள் கூட்டமைப்பின் ரொறன்ரோ பிரிவின் (Toronto chapter of the National Black coalition of canada) தலைவராகவும், பொலிஸ் நடவடிக்கைகளுக்கான பிரஜைகள் சுயாதீன பரிசீலனை (The citizens Independent Review of police Activities) பொலிஸ் நடவடிக்கைகளுக்கான மாநகரை சீர்படுத்தும் வேலைக்குழு (Metro Reform's working Group on police Activities) ஆகியவற்றில் பங்கேற்றும், ரொறன்ரோ அகதிகள் விவகாரக்குழுவின் (Tornto Refugee Affairs council) சிறப்பு அங்கத்தவராகவும்சேவை ஆற்றினார். அத்துடன் பன்கலாச்சார பல் இன சமூகங்களுக்கான ரொறன்ரோ மாநகர வேலைக் குழுவை (Greater Toronto working Group on multicultural, multi ethnic urban communities ஆரம்பித்து வைத்தவர்.

இலங்கையர் போல சிறீயின் சேவைக்கு உறுதுணையாக அறிவூட்டிய வேறு இனத்தவர் பலர் அவரது நீண்ட பட்டியலில் குறிப்பிடப்பட்டார்கள். அவர்களில் விருது நிறுவனத்தின் தலைவர் ஒளடி தர்மலிங்கம், விழாவை நடாத்தி வைத்த கமல ஜீன், கோபி விருது பெற இருந்த ஜோய் சொகாவா (JOY Kogewa) ஆகியோர் இடம் பெற்றனர் ஜோய் கொகாவா தன் இன ஜப்பானிய மக்களை ஒன்று சேர்ப்பதற்கு தொலைபேசி புத்தகங்களை பக்கம் பக்கமாக பிரட்டி, தொடர்பு கொண்டார் என்பது குறிப்பிடப் பட்டது.

எல்லோரிலும் மேலாக 1977 இல் அறிமுகமான (Dudley laws) என்று அழைக்கப்படும் கறுப்பர்களின் பெயர் பெற்ற செயல் திறமையின் சிறீயின் சேவைக்கு அறிவூட்டியாக முக்கிய இடம் பெற்றிருக்கிறார்.

சிறீயை சந்திப்பவர்களில் சிலரே அவர் வலது கையை பயன்படுத்தாமையை உணர்ந்த வர்கள். அவரது 14 வயதில் போக்குவரத்தில் ஏற்பட்ட விபத்து வலது கையை பயன்படுத்த முடியாமலும், வலது பக்கத்தை பலவீனப்படுத்தி வலது கண் பார்வையை பாதிப்படையவும் செய்தது. எவ்வாறுயினும், இந்நிலை அவரது வாழ்க்கையை அனுபவிப் பதில் பெரும் இடையூருக இருந்ததில்லை. சிறீ தன்னம்பிக்கை யுள்ள திறன்மிக்க கார்ச்சாரதியாக இருப்பதுடன் நீச்சல் கிரிக்கட் விளையாட்டு ஆகியவற்றில் ஏனையோர் போல் ஈடுபடுபவர்.

வலது கை வழங்காமையால், இடதுகையை நீட்டும்போது ஏற்படும் அனுபவம் ஏனைய வலது குறைந்தவர் களின் பிரச்சனைகளையும் ஏமாற்றங் களையும் உணரவும், அவர்கள் எவ்வாறு நோக்கப்பட்டும் நடாத்தப பட்டும் வருகிறார்கள் என்பதை

27 ம் பக்கம் பார்க்க..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## ஜெயந்தீஸன் குட்டிக்கதைகள்

# ஞானக்கண்

ரயிலுக்குள் நான் மியூஸிக் கேட்டுக் கொண்டிருந்தேன். அடுத்த தரிப்பில் ஒரு தமிழ்ப் பெண் ஏறினாள். ஜனங்கள் அதிகமானபடியால் வேறுவழி யில்லாமல் எனக்கு முன்னாலே வந்து அவ அமரவேண்டியதாகி விட்டது. நாணம் கொண்டு விழிகளைத் தாழ்த்தினேன். பின்னர் கடைக்கண்ணை அவவின் மீது விட்டேன். என்னை ஒரு பார்வை பார்த்துவிட்டுத் தூங்கவெளிக்கிட்டா. பாவம்! காலையும் மாலையும் பீரோக் கிளினிங் செய்கின்றது போலும்... களைப்பில் தூங்குகின்றது போலும் என நினைத்தேன். "ஆராரோ, ஆரிவரோ, ஆரடித்து நீ அழுதாய்" பாடி பிள்ளையின் தூக்கத்தை ஊக்குவிக்க வேண்டும் போல பட்டாலும்.... பிள்ளை மாறி நினைத்துவிடுமோ எனப் பயந்து, பிள்ளையின் தூக்கத்தைக் கொடுக்கக் கூடாது என்பதற்கான எனது வோக்மானுக்குள் 'கிஸ் கிஸ்' என்று சத்தம்போட்ட 'பிறின்ஸ்'ஸின் குரலைச் சற்றே குறைத்து விட்டேன். ஒவ்வொரு தரிப்பும் வந்தபோது பிள்ளை விழிகளைத் திறந்துவிட்டு மூடிக்கொண்டது. பொய்த் தூக்கமோ என்று வேறு எனக்குப்பட்டது. ஒரு தரிப்பில் ரிக்கெட் பரிசோதகர்கள் ஏறினர்... அதுவும் பிள்ளையின் பின்புறம். அவர்களைப் பிள்ளை காணவே இல்லை. பரிசோதகர்கள் பின்னே பரிசோதித்துக் கொண்டிருந்தபோது.. மூடிய கண்களை மூடியபடியே இருக்க பிள்ளை தனது பாய்க்கைத் திறந்தது.. ரிக்கெட்டை எடுத்தது. பரிசோதகர் கிட்டே வந்தவுடன் கண்ணைத் திறந்து... ரிக்கெட்டைக் காட்டி விட்டு மீண்டும் மூடிக்கொண்டது. பிள்ளைக்கு ஞானக் கண் உள்ளபடியால்தான், பின்னே இருந்து வந்த பரிசோதகரைக் கண்டது என நினைத்து.. பிள்ளை நிம்மதியாக விழித்தே இருக்கட்டும். முடிவெடுத்து... அடுத்த பெட்டிக்குள், அடுத்த தரிப்பிடத்தில் ஏறிக்கொண்டேன்.

(இது ஓர் கற்பனை கலக்காத 100% உண்மைக் கதை)


ATLANTIC AUTO CLINIC LTD

1960 LAWRENCE AVE EAST

755 8550 -CALL MIKE or RAJAN

Car Certification 29.99

Exhaust, starter, Shocks, Altenater, Clutch Radio, Transmission, Air Conditon, General Repair

பல வருட அனுபவம் மிக்கவர்கள்


| | |
|---|---|
| 4WHEEL ALLIGNMENT | 44.99 |
| BREAK SHOES | 29.99 |
| BREAK PADS | 24.99 |
| TUNE UP FROM | 34.99 |
| ENGINE SHAMPOO | 24.99 |
| FILTER 4 CYL | 16.99 |

உங்கள் வாகனங்களை குறைந்த செலவில் சிறந்த முறையில் கம்பியூட்டர் இணைப்புகளுடன் திருத்திக் கொள்வதற்கு நகரில் ஒரு சிறந்த ஸ்தாபனம்

Fuel Injections, Electronic and Electric

திருத்துவதில்பலவருடம் அனுபவம்உள்ளவர்கள்

We use Quaker State Oil








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Scarborough Dental Office

- Cosmetic Dentistry
- Crown & Bridges
- Gum Treatment
- Root canals
- Bleaching
- Dentures
- Surgery

★ அவசர சிகிச்சைகளுக்கு முன்னறிவிப்பு இன்றி சிகிச்சை வழங்கப்படும்

★ அழகுபடுத்தும் பற்சிகிச்சைகள்

★ காப்புறுதித் திட்டங்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.

★ சமூக உதவிப் பணம் பெறுபவர்களுக்கும் சிகிச்சை வழங்கப்படும்



## Dr.Athi K.Somasundaram
## டாக்டர் ஆதிகணபதி சோமசுந்தரம்

பேராதனை பல்கலைக்கழகம், சென்னை மருத்துவக் கல்லூரி,
கனடா தேசிய பல்வைத்திய சபை

**TEL:(416) 750 9969**
**FAX:(416) 750-9967**

**2155 LAWRENCE AVE EAST, SUITE 10**
**(AT BIRCHMOUNT), SCARBOROUGH**
**•WHEEL CHAIR ACCESS**
**•FREE PARKING**

திங்கள் முதல் சனி வரை
காலை 9 மணி - மாலை 9 மணி வரை
ஞாயிறு தினங்களில்
நண்பகல் 12 - மாலை 5 மணி வரை
(ஞாயிறு தினங்களில் சேவையைப் பெற்றுக் கொள்ள முன்னறிவித்தல் செய்து கொள்ளுங்கள்)
★ 24 மணி நேர அவசர சிகிச்சை சேவை

**MONDAY-SATURDAY**
**9 AM-9 PM**
**SUNDAYS**
**12 NOON-5 PM**
**SUNDAY BY APPOINTMENT ONLY**
**24 HRS EMERGENCY SERVICE**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேட்டி

-அருணன்-

தமிழக திரைப்பட இயக்குனர் கே. பாலசந்தர் பத்திரிகையாளர்களை மதிக்கத் தெரியாதவர், பண்பில்லாதவர் என அண்மையில் செய்தி வந்திருந்தது.

இது தொடர்பாக இயக்குனர் கே. பாலசந்தர் அளித்த பதிலில் தான் உண்மையில் ஒரு திறமையாளரே புத்திஜீவியை மதிப்பதாகவும் வணங்கக் கூட தயங்குவதில்லையெனவும், தன்னை ஒரு பேட்டிக்காக சந்தித்த ஒரு பத்திரிகையாளரின் கேள்வி ஒன்றுக்கு தான் இயற்றிய தண்ணீர் தண்ணீர் படம் தொடர்பாய் பதில் அமைந்த போது அப்பத்திரிகையாளருக்கு அவ்விளக்கம் குழப்பம் தந்ததை தானுணர்ந்து தண்ணீர் தண்ணீர் பார்க்கவில்லையா என கேட்க அப்பத்திரிகையாளர் அசடு வழிந்தாராம்.

தன் திரைப்பட வரலாற்றில் தண்ணீர் தண்ணீர் ஒரு முக்கியமான படம். இதைப் பற்றித் தெரியாமல் அது தொடர்பாய் கேள்வியாம்? தனக்கு ஆத்திரம் வந்ததாகவும் விசயம் தெரியாமல் அது தொடர்பாய் கேள்விகளை மட்டும் எழுதிக் கொண்டு வந்திடுங்கோ என பேசிவிட்டு அத்துடன் பேட்டியையும் முறித்துக் கொண்டு அப்பத்திரிகையாளரை துரத்திவிட்டது உண்மையென அவர் ஒத்துக்கொண்டார்.

'ஒரு பேட்டி' எனும் போது கேள்விகளை மட்டும் எழுதிக் கொண்டுபோய் அவற்றுக்கான பதில்களை வாங்கிக் கொண்டு வருவதுடன் ஒரு பேட்டி பூரணமடைகின்றதா?

பத்திரிகைக்கான பேட்டியெனில் அவகாசம் எடுத்து கேள்விகளையும் பதில்களையும் கோர்வையாக்கிக் கொள்ளலாம். இடையிடையே சில தகவல்கள் தேவைப்படின் முடிந்தால் பேட்டி கொடுத்தவரை மீண்டும் தொடர்பு கொண்டு விடப்பட்ட தகவல்களையும் சேர்த்துக் கொள்ளலாம்.

ஆனால் நேரடி ஒளிப்பரப்பிலும் வானொலி தொலைக் காட்சிக்கான நிகழ்ச்சிகளிலும் பேட்டியை நிகழ்த்தும் போது பேட்டி காண்பவர் உணர்ச்சி பாவம் ரசிகரை அடைவதால் அவர் அவ் விடயத்தில் அதிசிரத்தை கொள்ளவேண்டும். அசடாய் இருக்கக்கூடாது, அசடு வழியக்கூடாது.

பேட்டி எனும் நிகழ்வு ஒரு கனதியான பெருமானம் உடையது. அதில் பேட்டி கொடுப்பவரது திறமை மட்டுமல்ல பேட்டி பெறுபவரது திறமையும் அப்பேட்டியின் தகமையை தீர்மானிக்கும்.– இதை பேட்டி எடுக்க என புறப்படும் பலரும் உணர்ந்து செயற்படுவதாய் தெரியவில்லை.

பத்திரிகைகளில் கூட கால காலமாக மாமுலாக கேட்டுக் கொள்ளப்படும் பொதுவான சில கேள்விகளை மட்டும் கேட்டு பேட்டி பக்கங்களை நிரப்பிக் கொள்கின்றனர்.

ஒரு பேட்டி என்பது பத்திரிகையின் பக்கங்களையும் நிகழ்ச்சிகளின் நேரத்தையோ நிரப்புவதுடன் மட்டும் நின்று விடக்கூடாது. அது வாசகரை அல்லது ரசிகரை கவரக்கூடியதாக அமைய வேண்டும்.

ஒரு ரசிகரை அல்லது வாசகரை ஒரு பேட்டி ஏதோ ஒரு வகையில் தாக்கத்துக்குள்ளாக்கினால் அல்லது திருப்தி ஏற்படுத்தினால் அப்பேட்டி தனது கடமையை பூரணமாக்குகின்றது.

வாசகரை அல்லது ரசிகரை எப்படி திருப்தி படுத்துவது அல்லது எப்படி தாக்கத்தை ஏற்படுத்துவது இது பேட்டி எடுப்பவர் தன்னை தானே கேட்டுக்கொள்ளக்கூடியது.

ரசிகர் அல்லது வாசகர் பல மட்டங்களிலும் இருப்பர், அவர்களின் மனஓட்டத்தின் அடிப்படையில் அவர்களுக்கு ஒவ்வொரு விடயம் தொடர்பாயும் கேள்விகள் எழும்.

சமூகத்துடன் ஒன்றிப்போன ஒருவருக்கு சமூகத்தின் வெவ்வேறு புள்ளிகளிலிருந்து விலகிக்கூட கேள்விகளை ஊகிக்கமுடியும், இத்தகைய ஒருவரால்தான் சமூகத்தின் பிரதிநிதியாக செயற்பட்டு கேள்விகளை தயாரிக்கமுடியும். இதில் இன்னொரு விடயமும் கவனத்தில் கொள்ளவேண்டும். அது என்னவெனில் கேள்விகளை உருவாக்கும் முறை.

பேட்டி கொடுக்க இணங்கியவரிடம் கண்ட கேள்விகளையும் கேட்பது நாகரீகமல்ல. அதே நேரம் வாசகர் அல்லது ரசிகர் மனதையும் கவனத்தில் கொள்ளவேண்டும். நாசூக்காய் சில கேள்விகளுக்கு பதில் பெறவேண்டும். ஆக ஒரு பேட்டியாளர் சமூக பரிச்சயம் மட்டுமல்லாது பேட்டி விடயம் தொடர்பான அம்சத்தின் பரிச்சயமும் கொண்டிருக்க வேண்டும்.

ஒரு திரைப்படம் சம்பந்தமான பேட்டியெனில் பேட்டி காண்பவர் அத்திரைப்படத்தை பாத்திருக்க வேண்டும், அத்திரைப்படம் தொடர்பான வேறு பலரின் அபிப்பிராயங்களையும் செவி மடுத்தவராயும் இருக்கவேண்டும். அது மட்டுமல்லாது திரைப்படம் தொடர்பான அடிப்படை அறிவும் அவசியம். இத்தகைய ஒருவரால் தான் அப்பேட்டியை சிறப்பாக வளங்க முடியும்.

ஒரு நிறுவனம் ஒரு பேட்டியாளரை நியமிக்க முதல் அவரது திறமையை, அனுபவத்தை கவனத்தில் எடுக்கும். பரீட்சை, தெரிவு என்பவற்றால் மட்டுமல்ல பயிற்சியின் பின்புதான் ஒரு பூரண பேட்டியாளர் உருவாகின்றார்.

இதனால் தான் இங்குள்ள வெகுசன ஸ்தாபனங்களால் சிறப்பான பேட்டியை வழங்க முடிகின்றது. ஏன் இலங்கையில் ரூபவாகினி இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனம் என்பனவும் இத்தகைய அக்கறையுடன் செயல்படுவதால் தான் அவற்றால் சிறப்பான பேட்டிகளை வழங்கக்கூடியதாய் உள்ளது.

ஆனால் இங்கு இப்போது தான் தோன்றிகளாக தம்மை பேட்டியாளராக உருவகித்துக்கொண்டு செயற்படுவோர் பேட்டி என்று கூறி எம்மை சலிக்கப் பண்ணுகின்றார்கள்.

சிறிது காலத்தின் முன் சமய கிரிகை சம்பந்தமான பேட்டி ஒன்றில் பேட்டியாளர் கேள்விகளை எழுதிவைத்து அடுக்கடுக்காய் வாசித்துக் கொண்டதால் அப்பேட்டி சலிப்பூட்டுவதாய் அமைந்தது. அத்துடன் அப்பேட்டியால் நாம் எதையும் அறிந்துகொண்டதாயும் இருக்கவில்லை. ஏனெனில் கேள்விகள் கோர்வையாகவும் அமையவில்லை,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமக்கு தேவையான கேள்விகளாகவும் இருக்கவில்லை.

ஒரு பேட்டியாளர் ஒருவிடயம் தொடர்பான பேட்டிக்காக ஒருவரை நேர்காண எண்ணினால் அச்சந்திப்பின் முன் அவ்விடயம் தொடர்பான தகவல்களை கூடியளவு தெரிந்துக்கொள்ள முயலவேண்டும். மேலும் பேட்டி கொடுப்பவரிடம் இருந்து எத்தகைய செய்திகளை பெறவேண்டும் என அறிந்திருக்க வேண்டும். இதற்கு அப்பேட்டி வழங்குவோரின் அவ்விடயம் தொடர்பான அறிவு, அனுபவம், தொடர்புகள் எத்தகையது என்கின்றது என்கின்ற தகவல்கள் தெரிந்து கொள்ளப்பட வேண்டும். வெவ்வேறு கோணங்களில் அவ்விடயம் தொடர்பான கேள்விகள் அமைந்ததால் அப்பேட்டி மிகச் சிறப்புறும்.

ஒரு கேள்வி கேட்டு பதில் பெற்றவுடன் அக்கேள்வியுடன் தொடர்பில்லாது அடுத்த கேள்வி அமைந்தால் அது பதில் சொல்பவரையும் ரசிகர் அல்லது வாசகரையும் சலிப்பூட்டும். இச்சந்தர்ப்பத்தில் முதல் கேள்வியின் பதிலிலிருந்து இரண்டாம் கேள்விக்கான பகுதிக்கு தொடர்பை ஏற்படுத்தும் பொறுப்பு பேட்டி வாங்குபவரின் கடமை. பேட்டியின் விடயம் நன்கு பரிச்சயம் உள்ளவருக்குத்தான் இது சாத்தியம்.

இதனால்தான் அந்தந்த துறைகளில் உள்ளவர்களைக கொண்டே பேட்டிகளை எடுப்பது இன்றுவரை நடைமுறையில் உண்டு– இது எம்மவரின் பலருக்கும் புரிந்ததாய் தெரியவில்லை

மேலும் பத்திரிகை பேட்டியெனில் மேற்கூறப்பட்டவை கவனத்தில் எடுக்கப்பட்டால் ஒரு பேட்டி சிறப்புற அமையலாம். ஆனால் வானொலி நிகழ்ச்சியெனில் பேட்டி காண்பவருக்கு குரல் வளமும் அவசியம். தொலைக்காட்சி நிகழ்ச்சியெனில் குரல் வளம் மட்டுமல்ல பேட்டி காண்பவருக்கு அழகும் அலங்காரமும் இருப்பது சிறப்பு.

குரல் வளம் மட்டுமிருந்தால் வானொலி அறிவிப்பாளராக ஆகலாம். பேட்டியாளராக முடியாது. தொலைக்காட்சி நிகழ்ச்சியாளராகவும் முடியாது– ஆனால் ஒரு சிறந்த தொலைக்காட்சி நிகழ்ச்சியாளர் அறிவிப்பாளராகவும் முடியும்.

# சொல்ல வல்லாயோ கிளியே

பலவிதமான ஜோசியங்கள் உள்ளன. பிறந்த வருஷத்தை வைத்துக்கொண்டு பலன் சொல்லும் முறை சீனர்களுடையது. ஒவ்வொரு வருஷத்துக்கும் ஒரு மிருகம் என்று மாறி மாறிப் பன்னிரண்டு மிருகங்களின் பேரில் பன்னிரண்டு வருடச் சுற்றில் குணம், தொழிற்பொருத்தம், ஜோடிப் பொருத்தம் என்று பிய்த்து விடுகிறார்கள். பிறந்த மாத அடிப்படையில் ஜோசியம் சொல்வது மேல் நாட்டு முறை. இந்த மாத இடைவெளி பூமிக்குச் சார்பாக சூரியனின் தானத்தை வைத்து நிர்ணயிக்கப்படுவது. இரவும் பகலும் சமமாக இருக்கும் நாட்களை அடிப்படையாக வைத்தே இந்த மாத இடைவெளிகள் வகுக்கப்பட்டுள்ளன. நம்புகிறார்களோ இல்லையோ, பலரும் வாசிக்கிறார்கள் என்று தெரிந்து தான் பத்திரிகைகளில் எல்லாம் நாட் பலன், வார பலன் மாத பலன் என்று எழுதி வியாபாரம் பண்ணுகின்றார்கள். பிறந்த நாள் அடிப்படையிலான ஜோசியமும் உண்டு நாளைச் சந்திரனின் ஸ்தானத்தின் அடிப்படையில் வைத்து நிர்ணயித்து 27 நட்சத்திரங்களின் பேரை வைத்து அதற்கான பலன் சொல்வது நம்மூர் ஜோசிய மரபு. இதற்கும் மேலாகப் பிறந்த நேரத்தை நாளின் பன்னிரண்டு பகுதிகளாகவும் அதை மேலும் ஒன்பதால் வகுத்தும் யோசியம் சொல்வார்கள். இந்த நுட்ப நுணுக்கங்களைப் பற்றி எனக்கு அதிகம் தெரியாது. நான் என்றைக்குமே ஜோசியர்களிடம் போனது கிடையாது. ஓரிரண்டு ஜோசியப் புலிகள் எனக்கு நண்பர்களாக இருந்தபோதும் அவர்களுக்கு என் பிறந்த நேரம் என்னவென்று தெரிவிக்காமலே இது வரை சமாளித்திருக்கிறேன். இந்த ஜோசிய முறை இந்திய மரபில் ஓரிரு ஆயிரக்கணக்கான வருஷங்காக இருந்து வந்துள்ளது. இப்போது புதிதாக நியூமரோலொஜி என்று ஒரு புதுக்கரடி வந்திருக்கிறது. உலகத்தில் உள்ள எல்லாக் கால அளவு முறைகளையும் விட்டுவிட்டு நமது சமகால மேற்குலக நாள்காட்டி (கலண்டர்) முறையின் அடிப்படையில் பிறந்த திகதியின் எண், வருடம் மாதம் தேதி எல்லாம் கூட்டிவரும் எண், போதாக்குறைக்குப் பேரில் உள்ள எழுத்துகளெல்லாம் எண் போட்டுக் கூட்டி வரும் எண் எல்லாம் பார்த்துப் பலன் சொல்வதுடன் பேரில் உள்ள எழுத்துக்களை மாற்றி மனிதர்களுடைய தலை விதியையே மாற்றலாம் என்று பிரகடனம் செய்கிற இந்தப் பிரம்மாவதாரங்கள் பிழைக்கத் தெரிந்தவர்கள் தான்.

இவர்களை எல்லாம் விட, முழு உலகத்துக்கும் ஜோசியம் சொன்ன மேதாவிகளும் இருக்கிறார்கள். நொஸ்ற்றடாமுஸ் என்பவரது ஜோசியம் பிரபலமானது போலவே வேறு பல ஜோசியர்கள் இருந்தார்கள். உலகம் இன்ன நாளில் அழியும் என்று ஜோசியர் சொன்னதை நம்பி உள்ள பொருளை எல்லாம் விரயமாக்கி

**காண்டம் வாசிப்பது என்பது இப்போது பிரபலமாகி இருக்கிறது. உலகத்தில் உள்ள அத்தனை பேருடைய எதிர்காலத்தையும் யாரோ மாமுனிவர் ஓலையில் அதுவும் தமிழில் எழுதித் தமிழ் நாட்டிலே எங்கேயோ பத்திரமாக வைத்திருக்கிறாராம். போகிற ஒவ்வொரு நபருக்குமுரிய ஓலையை எடுத்து இறந்த காலமும் நிகழ்காலமும் எதிர்காலமும் சொல்வார்களாம் இந்த ஜோசியக்காரர். ஒருத்தர் போனவருஷம் லண்டனுக்கு விஸிட் அடித்தார். நிறையப் பேருடைய காசு கைமாறியது. இன்னும் கொஞ்சக் காலத்தில் முனிவர் கொம்பியூட்டர் தட்டுக்களில் எழுதி வைத்த ஜோசிய ஏடுகளையும் கண்டு பிடித்து தருவார்கள்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாசமாகப் போனவர்கள் பலர். கை ரேகை பார்த்து ஜோசியம் சொல்வோர் இன்னொரு ரகம், கை ரேகையைப் பார்த்து ஒருவருடைய குணம், திறமைகள் என்பவற்றை விட எதிர்காலத்தையும் சொல்லிவிட முடியும் என்பது இவர்களுடைய கட்சி. இவற்றை எல்லாம் விடத் தலையில் உள்ள மேடு பள்ளங்கள் ஒருவரது பாத அமைப்பு போன்றவற்றை வைத்து ஜோசியம் சொல்வோரும் இருக்கிறார்கள்.

சீட்டுக் கட்டு ஜோசிய முறைகள் பல உள்ளன. இவற்றுள் மிகவும் பிரபலமானது டரோ (TAROT) சீட்டு ஜோசியம். பல விதமான படங்களைக் கொண்ட ஒரு கட்டு சீட்டுகளில் ஒன்றிரண்டை நீங்கள் உருவி எடுக்க வேண்டும் அதற்கேற்ப உங்கள் எதிர்காலம் பற்றிச் சொல்வார்கள். ஆவி ஜோசியம் கொஞ்சம் பயங்கரமான விஷயம்.

காண்டம் வாசிப்பது என்பது இப்போது பிரபலமாகி இருக்கிறது. உலகத்தில் உள்ள அத்தனை பேருடைய எதிர்காலத்தையும் யாரோ மாமுனிவர் ஓலையில் அதுவும் தமிழில் எழுதித் தமிழ் நாட்டிலே எங்கேயோ பத்திரமாக வைத்திருக்கிறாராம். போகிற ஒவ்வொரு நபருக்குமுரிய ஓலையை எடுத்து இறந்த காலமும் நிகழ்காலமும் எதிர்காலமும் சொல்வார்களாம் இந்த ஜோசியக்காரர். ஒருத்தர் போனவருஷம் லண்டனுக்கு விஸிட் அடித்தார். நிறையப் பேருடைய காசு கைமாறியது. இன்னும் கொஞ்சக் காலத்தில் முனிவர் கொம்பியூட்டர் தட்டுக்களில் எழுதி வைத்த ஜோசிய ஏடுகளையும் கண்டு பிடித்து தருவார்கள்.

குறி சொல்வது தமிழ் மரபில் உள்ளது. பழைய இலக்கியங்களிலே கூட இது பற்றிய குறிப்புகளைக் காணலாம். மனிதர்கட்டு எதிர்காலம் பற்றிய கவலை உண்டு. நிச்சயமற்ற விஷயங்கள் பற்றிய மன உளைச்சலைப் போக்குவதற்கு இரண்டாம் பேர் அபிப்பிராயத்தை நாடுகிறோம். தர்க்கரீதியாக முடிவு செய்ய முடியாதபோது நமது சக்திக்கு அப்பாற்பட்ட ஒன்றின் உதவியை நாடுகிறோம். இங்கே தான் பல விதமான ஜோசியர்களும் வந்து சேருகிறார்கள். பல்லி கூடச், சொல்லும் திசையாலும் நமது மேலில் விழுகிற இடத்தாலும் ஜோசியம் சொல்கிறது. நாய் ஊளையிட்டும் பூனை

*மனிதாகட்டு எதிரகாலம் பற்றிய கவலை உண்டு. நிச்சயமற்ற விஷயங்கள் பற்றிய மன உளைச்சலைப் போக்குவதற்கு இரண்டாம் போ அபிப்பிராயத்தை நாடுகிறோம். தாக்கரீதியாக முடிவு செய்ய முடியாதபோது நமது சக்திக்கு அப்பாற்பட்ட ஒன்றின் உதவியை நாடுகிறோம். இங்கே தான் பல விதமான ஜோசியாகளும் வந்து சேருகிறாகள்.*

குறுக்கே வந்தும் ஆந்தை அலறியும் இவற்றுக்கெல்லாம் அர்த்தங்கள் வகுத்து வைத்தவர்கள் என்ன அடிப்படையிற் செய்கிறார்கள் என்று நாம் யோசிப்பதில்லை வேளைக்குப் பல்லி அகப்படாவிட்டால குழந்தையின் விரலால் அதிர்ஷ்டக் சக்கரத்தில் தொடப் பண்ணிப் பஞ்சாங்கத்தில் பலன் பார்க்கிறோம். அல்லது பூ வைத்தோ காசைச் சுண்டிப் பார்த்தோ நமது நிச்சயமின்மையினின்று விடுதலை தேடுகிறோம்.

தெருவோரத்தில் உட்கார்ந்து ஜோசியம் பார்க்கிறவர்கள் இருக்கிறார்கள். கைரேகை ஜோசியர்கள் இவர்களிற் பெரும் பான்மையானோர் வைத்தியசாலைக்கும் நீதிமன்றத்திற்கும் அருகே இவர்கள் அமர்ந்திருந்தால் தொழில் பெருகும், பொருள் சேரும். என்னளவில் கிளி ஜோசியருக்கு மிகுந்த மரியாதை உண்டு பொதுவாக, மரநிழலில் உட்கார்ந்து, சின்னக் கிளி ஒன்றைக் கூண்டில் அடைத்து வைத்திருப்பார். கிளி பறக்காமல் காலிற் கயிறு இருக்கும் அல்லது செட்டை செதுக்கி இருக்கும். உறையிடப்பட்ட சில காகிதங்களே அவரது ஜோசியத்தின் மொத்தமும். கிளி ஜோசியரிடம் யாராவது போனால் பேரம் பேசமாட்டார். சுற்றி வர ஆட்கள் நின்றாலும் பொருட்படுத்த மாட்டார். ஏதோ ஒரு தெய்வத்தை நினைத்துப் பாடிக் கும்பிட்டு விட்டுக் கையில் உள்ள காகிதஉறைகளைப் பரப்பி வைப்பார். கிளியின் கூண்டைத் திறப்பார். கிளி வந்து அங்கும் இங்குமாக நடந்து ஒரு உறையை அலகால் எடுத்துக் கொடுக்கும் அந்த உறையில் அலகால் எடுத்துக் கொடுக்கும் அந்த உறையில் உள்ள பாதி பூல்ஸ் கப் காகிதத்தில் (அப்போதெல்லாம் ஏ-4 அளவு காகிதம் ஏது) எழுதியுள்ளது தான் ஜோசியம் கேட்பவரது பலன். படு வேகமாகப் பாடுகிற தொனியில் வாசித்து முடிப்பார். போகிற காரியம் சரிவருமா வராதா என்ற கேள்விக்கான பதிலைக் கேட்பவர் எப்படியும் விளங்கிக் கொள்ளலாம். (பத்திரிகையில் வருகிற வார பலன் மாதிரி) இதுவரை யாருமே கிளி ஜோசியர் தன்னை ஏமாற்றிவிட்டதாகச் சண்டை போட்டதாகத் தெரியாது. என்றாலும் கிளி ஜோசியர் மீதான என் மதிப்புக்குக் காரணம், அவர் தான் குறிசொல்கிற தமிழ்க் குறத்தியின் நிஜமான வாரிசு என்பதைவிட, அவர் தன்னுடைய வித்தை மகாவிஞ்ஞானமென்றோ யாரோ மாமுனிவர் அருளிய ஏடுகளின் மூலப்பிரதிகள் தன்னிடம் இருக்கின்றனவென்றோ தன்னிடம் உள்ள கிளி ஒரு முனிவரின் அவதாரமென்றோ சொல்லாமல் தொழில் நடத்துவது தான். அவரது கையிலுள்ள காகிதங்களைப் பார்த்தால் முதல் முதலில் காகிதம் தயாரிக்கப்பட்ட காலத்துக்கு உரியவை போலத் தெரியும். காண்டம் வாசிக்கிறவர் கையில் இருக்கிற ஓலை பளிச்சென்று புதிதாக இருந்தாலும் பத்தாயிரம் வருஷம் பழசு என்பார். நமது கிளி ஜோசியர் அந்தமாதிரி எல்லாம் பேசியதாக எனக்குத் தெரியாது.

கிளி ஜோசியரை விடப் பல்லி ஜோசியர் சொல்வது சிலவேளை கூட உண்மையாக இருக்கலாம் என்று எனக்கு ஒரு நம்பிக்கை. பல்லி பாஷை நமக்குத் தெரியாததால் சில வேளை அவரது பேச்சைப் பிழையாக விளங்கிக் கொள்கிறோம் என்று தான் தோன்றுகிறது.

இனி மற்ற ஜோசியங்கள் சில பற்றி என் அபிப்பிராயங்களையும் அனுபவங்களையும் எழுதுகிறேன்.

**3618511**

(பி.கு: கட்டுரையில் தரப்பட்டுள்ள எண் என் தொலைபேசி எண்ணல்ல. என் பேரை உடனடியாக வெளியிட விரும்பவில்லை. நியூமரோலஜியில் எழுத்தை விட எண் தானே முக்கியம். எனவே என் பேரின் எழுத்துக்களின் எண் பெறுமானங்களை மட்டுமே தருகிறேன்.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திறனாய்வு (3)

சுபைர் இளங்கீரன்

ஈழகேசரி சிருஷ்டி எழுத்தாளர்கள் பலரை உருவாக்கியது போல விமர்சகர்களையும் உருவாக்கியது. அவர்களில் குறிப்பிடத்தக்கவர் சோ. சிவபாதசுந்தரம் அவர்கள்.

சிவபாதசுந்தரம் ஈழத்தில் தோன்றிய சிருஷ்டி இலக்கியங்களை மாத்திரமல்ல, தமிழ்நாட்டில் வளர ஆரம்பித்த இலக்கியங்களையும் விமர்சித்தார். அவருடைய விமர்சனத் திறனுக்கும், அரும்பு கட்டி நின்ற அக்கால விமர்சன நோக்கிற்கும் அவர் எழுதியுள்ள கட்டுரைகள் சான்றாக நிற்கின்றன. அவர் இலக்கிய உலகிலிருந்து நெடுநாட்களுக்கு முன்பே பிரிந்து விட்டார். இப்போது ஈழநாட்டிலிருந்தும் பிரிந்து விட்டார். அவருடைய துறவு ஈழத்தின் விமர்சன இலக்கியத்திற்கு நஷ்டந்தான்.

ஈழகேசரிக்குப் பிறகு அதாவது 1940–50 ஆகிய பத்து வருஷங்களில் தோன்றிய அ.ந.கந்தசாமியும் கனக செந்திநாதனும் குறிப்பிடத்தக்கவர்கள் அ.ந.கந்தசாமி ஒரு காலத்தில் வேகமும் துடிப்பும் மிகுந்த விமர்சகராகக் காட்சியளித்தார். நவீன கண்ணோட்டமுடைய அவர் பத்து வருஷங்களுக்கு முன் "பண்டிதர் திருமலைராயர்" என்ற புனை பெயரில் சிலப்பதிகாரத்தைப் பற்றிச் செய்த திறனாய்வு அப்போதைய இலக்கிய உலகில் பெரிய பரபரப்பை உண்டாக்கி விட்டது. இடைக்காலத்தில் இலக்கிய உலகிலிருந்து 'ஓய்வு' பெற்றிருந்த அவர் மீண்டும் பழைய ஆர்வத்தோடும் வேகத்தோடும் இலக்கிய உலகில் பிரவேசித்திருக்கிறார். அவர் 'ஓய்வு'க்குப் பின், தினகரனில் தொடர்ந்து வெளிவந்த 'நான் விரும்பும் நாவலாசிரியர்' வரிசையில் எமிலி ஜோலாவைப் பற்றி எழுதிய கட்டுரையும் ஒரு விமர்சனந்தான். திரு. கந்தசாமியின் விமர்சனத்தில் தர்க்க ரீதியான அம்சங்களும் காரணகாரிய விளக்கங்களும் ஆட்சி செலுத்தும். ஈழநாட்டு விமர்சகர்களில் குறிப்பிடத்தக்கவர்களில் ஒருவராக இருக்கும் இவர் இன்னும் அதிகமாக இத்துறையில் ஈடுபட்டு உழைப்பார் என்று எதிர்பார்க்கலாம்.

கனக. செந்திநாதன் தேர்ச்சி மிக்க இலக்கிய ரசிகர். கவிதையில் எந்தளவுக்கு ஈடுபாடு உண்டோ அந்தளவுக்கு விமர்சனத்திலும் ஈடுபாடு உண்டு. அவருடைய திறனாய்வில் ரசிகத்தன்மை முக்கியத்துவம் பெறுகிறதின் உள்ளடக்கத்திற்கு விஷயச் சேர்க்கையாக இருக்கும் பௌதீக அம்சங்களின் மீது விமர்சனத்தின் பார்வை அழுந்திப் பதிய வேண்டியது முக்கியமானதொன்று. இந்த அழுத்தம் செந்திநாதனின் விமர்சனத்தில் அதிகம் இல்லை என்றபோதிலும் தனக்கே உரித்தான சில 'தனித்துவங்கள் விரவியிருக்கும். ஈழகேசரியில் இலங்கை எழுத்தாளர்களை முதலில் அறிமுகப்படுத்தியவர் கனக. செந்திநாதன்தான். அவர் எழுதிய 'ஈழத்துப் பேனா மன்னர்கள்' என்னும் கட்டுரைத் தொடர் ஓரளவு விமர்சனத் தொனி உடையதாகும். அவருடைய இலக்கிய சித்தாந்தமும் விமர்சனக் கண்ணோட்டமும் எப்படியிருந்த போதிலும் ஈழத்தின் விமர்சன இலக்கியத்திற்குத் தன் பங்கையும் தொடர்ந்து செய்து வருகிறார் என்பது மறுக்க முடியாதது.

1950க்குப் பிறகு ஈழத்து இலக்கியத்தில் ஒரு பெரிய மாறுதலும் திசை திருப்பமும் ஏற்பட்டு இன்றும் அதே கதியில் நடைபோட்டுக் கொண்டிருக்கிறது. இந்தப் பன்னிரண்டு வருஷ காலத்திற்குள்தான் இலக்கியத்தைப் பற்றிய சித்தாந்த ரீதியான சிந்தனை தோன்றி உருவாகி வளர்ந்தது. இது விமர்சனத்திலும் எதிரொலித்தது. இந்த எதிரொலிகளின் சின்னமாகத் தோன்றியவர்கள்தான், க. கைலாசபதி, கா.சிவத்தம்பி, எச்.எம். பி.முகிதீன் ஆகியோர். இவர்கள் மூவரும் கிட்டத்தட்ட ஒரே இலக்கிய சித்தாந்தத்தையும் விமர்சனக் கண்ணோட்டத்தையும் கொண்டவர்கள். இவர்களின் திறனாய்வுகள் ரசிகத் தன்மையோடு ஆழமான விஷய நோக்குமுடையவை இம்மூவரினதும் விமர்சனங்களில் ஒருமைப்பாடு அதிகம். எனினும் சில தனித்துவமான அம்சங்களும் இருக்கத்தான் செய்கின்றன.

திரு. கைலாசபதியின் திறனாய்வு மிகவும் அமைதியானது. உணர்ச்சிப் பிரவாகங்களுக்கு இடம் கொடுக்காதது. ஆடம்பரமான வார்த்தை ஜாலங்களோ, விமர்சன வர்ணனைகளோ அதில் இடம் பெறுவதில்லை. சில விமர்சனங்கள் செய்வது போல பெரிய பெரிய வார்த்தைகளைப் போட்டு வாசகனைத் திகைக்கச் செய்யவோ குழப்பமடையவோ செய்யாமல் மிகவும் நேராகவும் சுருக்கமாகவும் எளிதில் புரிந்து கொள்ளத்தக்க வகையிலும் அமைந்தது. இவர் புதிய இலக்கியங்களையும் பழைய இலக்கியங்களையும் விமர்சிப்பதில் ஆர்வமுடையவர். ஈழத்து இலக்கியக் கர்த்தாக்களின் முந்திய தலைமுறையினரின் சில விமர்சனக் கட்டுரைகளை எழுதியிருந்திருக்கிறார். அதோடு, 'சாந்தி'யில் அவர் எழுதிய ஈழத்து எழுத்தாளர்களைப் பற்றிய விமர்சனமும், வீரகேசரியில் எழுதிய தமிழ் இலக்கிய வளர்ச்சி பற்றிய விமர்சனமும் பூரணத்துவம் உடையதாயில்லா விட்டாலும் குறிப்பிடத்தக்கன என்பதில் ஐயமில்லை. அவர் எழுதியுள்ள விமர்சனங்களில் முக்கியமானது, 'மகாகவி கண்ட மகாகவி'யாகும். தினகரனில் தொடர் கட்டுரையாக வெளி வந்து இது 'ஒப்பு நோக்கு' விமர்சனமாகும். இரு மகாகவிகளான தாகூரையும், பாரதியாரையும் இவ் விமர்சனத்தில் பல கோணங்களில் நின்று ஆழமாக அலசியிருக்கிறார். இத்தொடர் கட்டுரை விரைவில் புத்தக வடிவம் பெற இருக்கிறது. 'கலைச் செல்வி'யில் அவர் எழுதிய 'பொருள் மரபும் விமர்சனக் குரல்களும்' என்னும் கட்டுரையும் தினகரனில் சில படைப்பிலக்கியங்களுக்கு எழுதிய விமர்சனங்களும் குறிப்பிடத்தக்கன. சுருங்கச் சொன்னால் கைலாசபதி அவர்கள் தனது இலக்கியப் புலமைக்கும், விமர்சன ஆற்றலுக்கும் ஏற்ப இன்னும் எவ்வளவோ செய்ய முடியும். ஈழத்தின் தலை சிறந்த விமர்சகர்களில் ஒருவராகக் கருதப்படும் அவர் இதற்குத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தகுதியானவர். அவரிடம் ஈழத்து விமர்சன இலக்கியம் நிறைய எதிர்பார்த்து நிற்கிறது.

திரு. கா.சிவத்தம்பியின் விமர்சனம் வேகமும் கூர்மையுடையது. அவருடைய விமர்சனங்களில் புரட்சிகரமான கருத்துக்கள் விரவிக்கிடக்கும். நகைச்சுவை இழையோடி நிற்கும். மற்றவர் போகாத சுவட்டில் போக விரும்பும் சிவத்தம்பியின் விமர்சனம் துணிச்சல் மிகுந்தது. பழங்கால இலக்கியத்தைப் பற்றிய குருட்டு நம்பிக்கைகளேயும், அபிப்பிராயங்களேயும் தகர்த்தெறிந்து புதிய கருத்தினை சிருஷ்டித்து நிற்கும் விமர்சனம். அதில் ஆதார பூர்வமான அம்சங்களும் தன் கருத்தினை வலியுறுத்திக் கூறுவதில் அழுத்தமும் அதிகம் காணப்படும் பண்டித மனப்பான்மைக்கு எதிராகச் செல்லும் அவருடைய விமர்சனமும் பண்டித 'பண்பு' கொண்டதுதான் என்பதையும் குறிப்பிடத்தான் வேண்டும். எழுத்துவுக்குப் பதிலாகச் சமீபத்தில் 'புதுமை இலக்கியத்'தில் அவர் எழுதியுள்ள பொருளும் விமர்சனமும் என்னும் கட்டுரை குறிப்பிடத் தக்கதொன்று. காத்திரம் மிகுந்த இவ்விமர்சனக் கட்டுரையைப் போன்றதொன்று இதுவரை ஈழத்தில் வெளிவந்ததில்லை என்று துணிந்து கூறலாம். 'மரகதத்'தில் தொடர்ந்து எழுதி வந்த 'திரை வளர்த்த கவிதை விமர்சனமும் குறிப்பிடத் தக்கதொன்று.

இலக்கியத்தில் மட்டுமல்லாது, பிற கலைகளேயும் திறனாய்வு செய்வதில் அதிக ருசியும் சிரத்தையுமுள்ளவர் சிவத்தம்பி. ஆற்றல் மிகுந்த அவர், விமர்சனத்துறையில் இன்னும் எவ்வளவோ சாதிக்க முடியும். சென்ற காலம் போகட்டும் நிகழ்காலத்திலும் எதிர்காலத்திலும் நிறைய சாதிப்பார் என்று நம்புவோம்.

இலக்கியத்தில் மட்டுமல்லாது அரசியல், சமூக, சமயத்துறைகளிலும் தனது பார்வையைச் செலுத்தும் சிறந்த விமர்சகர் எச்.எம்.பி.முகிதீன் அவர்கள். அவருடைய திறனாய்வுகள் பெரும்பாலும் ஒப்பு நோக்கு விமர்சனங்களாகும். இக்பாலும் கம்பனும், வள்ளுவனும் பாரதியும், இக்பாலும் வள்ளுவனும் என்னும் தலைப்புகளில் 'தாரகை'யில் விரிவான விமர்சனக் கட்டுரைகள் எழுதியிருக்கிறார். அவருடைய விமர்சனங்கள் பெரும்பாலும் இலக்கியக் கர்த்தாக்களின் கருத்து ஒருமைப் பாட்டைச் சுட்டிக் காட்டுவது. அவருடைய 'தமிழ் சினிமாவில் ஹாஸ்யம்' என்னும் விமர்சனம் தமிழ் இலக்கியத்திற்கே புதிது என்று சொல்லலாம். தமிழ்ச் சினிமாவில் நகைச்சுவை வளர்ச்சி பற்றியும், அதன் குறைநிறைகளேப் பற்றியும் வீரகேசரியில் இத்தலைப்பில் எழுதிய பதினைறு கட்டுரைகளும் ஒரு சிறந்த விமர்சனமாகும்.

இம் மூவரையும் விட மற்றொரு முனையில் நிற்கும் இரு விமர்சகர்களேயும் குறிப்பிட வேண்டியிருக்கிறது. ஒருவர் சில்லையூர் செல்வராசன், மற்றொருவர் எஸ். பொன்னுத்துரை. இருவரும் காரசாரமான, சர்ச்சைக்குரிய விமர்சனங்களேச் செய்கிறவர்கள். இவ்விருவரின் திறனாய்வுகளில் சிலேடையும் குத்தலும் காணப்படுவதோடு சிறிது கண்டன நெடியும் வீசும் விமர்சனத்திற்கென கூர்மையான வார்த்தைப் பிரயோகங்களே ஆள்கிறவர்கள். ஒரு சிருஷ்டியை விமர்சிக்கும்போது அதை அக்குவேறு ஆணிவேருகப் பிரித்துத் தனித்தனியாக அலசத் தொடங்கி விடுவார்கள். பழைய இலக்கியங்களே விமர்சிப்பதில் இவர்களுக்கு ஈடுபாடு மிகக் குறைவு. தற்காலச் சிருஷ்டி இலக்கியங்களேத் திறனாய்வு செய்வதில்தான் ஆர்வம் அதிகம். துணிச்சல் மிகுந்த இவ்விரு விமர்சகர்களின் ஆய்வுகளில் கூர்மையான வார்த்தைப் பிரயோகங்களும் சூடான குணமும் இருந்தபோதிலும் ருசி மிகுந்தவை, பிடிப்பும் சத்துமுள்ளவை என்பதைச் சொல்லித்தாளுக வேண்டும்.

செல்வராசன் இலக்கியத்தில் எல்லாப் பிரிவுகளேயுமே விமர்சிப் பதில்வல்லவர். கல்கி நடத்திய ஈழத்துச் சிறுகதைப் போட்டியில் பரிசு பெற்ற கதைகளேப் பற்றி 'மரகதத்'தில் வெளிவந்த பொன்னுத்துரையின் விமர்சனம் குறிப்பிடத்தக்கதொன்று.

இப்போது புதிதாக ஒருவர் விமர்சன அரங்குக்கு வந்திருக்கிருர், அவர்தான் ஏ.ஜே.கனகரத்ன ஆங்கில இலக்கியங்களிலே அதிக பரிச்சயமும் ஈடுபாடுமுடைய இவர் சமீப காலமாகத் தமிழ் இலக்கிய விமர்சனத்திலும் அதிக ஆர்வமும் அக்கறையும் காட்டி வருகிருர். 'எழுத்து'வில் மௌனிவழிபாடு' என்ற தலைப்பில் எழுதிய திறனாய்வு அவருடைய விமர்சனத் திறனை நன்கு புலப்படுத்துகிறது. அவருடன் சிறிது நேரம் உரையாடினுலும் சரி, அதற்குள் உலக இலக்கியங்களை ஒரு சுற்றுச் சுற்றி விமர்சித்து விடுவார். அவர் பேசுவதோடு மட்டும் நின்று விடாது, எழுதவும் வேண்டும். இத்துறையில் அவரும் பிரகாசிக்கக் கூடிய எதிர்காலம் இருக்கிறது. ஈழத்தின் தமிழ் விமர்சன இலக்கியத்திற்கு அவரும் கணிசமாகத் தன் பங்கை தரமுடியும் அவர் அதைச் செய்வார் என்று எதிர்பார்க்கிருேம்.

ஈழத்து விமர்சகர்களேப் பற்றிய இக்குறிப்புகள் போக இன்னென்றையும் இங்கு குறிப்பிட வேண்டியது அவசியம். டாக்டர் மு. வரதராசனின் நாவல்களேப் பற்றியும் ஈழத்தில் விமர்சிக்கப்பட்டிருக்கிறது. இவ்விமர்சனத்தில் மேலே கூறப்பட்டவர்கள் கலந்து கொள்ளாததோ அல்லது இவ்விமர்சனம் அரைகுறையானதோ என்பதல்ல பிரச்னே. ஆனல் தமிழகம் கூட மு.வ வின் நாவல்களே இத்தகைய துணிச்சலுடன் விமர்சனத்தை செய்ய முயன்றதில்லை என்பது தான் இங்கு கவனிக்க வேண்டியதாகும்.


மேற்கூறிய விஷயங்களிலிருந்து ஈழமும் தமிழ் இலக்கிய விமர்சனத்திற்கு கணிசமான பங்கை அளித்திருக்கிறது என்பதை தெரிந்து கொள்ள முடியும். மேலும் தொடர்ந்து அளித்து வரும் என்பதில் சந்தேகமில்லை.

இறுதியாக ஒரு விசயத்தை குறிப்பிட வேண்டியிருக்கிறது. நாவலர் காலத்திலிருந்து இன்று வரையுள்ள விமர்சன இலக்கியத்தை பரிசீலனை செய்து பார்த்தல் இரண்டு விசயங்கள் குறிப்பிடத் தகுந்தவையாகும். ஒன்று ஈழத்து விமர்சனத்தில் துணிச்சல் மிகுதி. பூஜா உணர்ச்சி, முதுகு சொரிதல், தாட்சண்யம் பார்த்தல் முதலிய விமர்சனத்திற்கு புறம்பான தன்மைகள் குறைவு. இரண்டாவது அம்சம் இலக்கிய உருவத்தை மட்டும் பரிசீலிப்பதோடு நின்று விடாது, உள்ளடக்கத்திலும் அதிக அக்கறை காட்டுவதாகும். சுருங்கச் சொன்னல் ஈழத்து திறனாய்வில் உருவவாத சித்தாந்த நோக்கின் அழுத்தத்தை விட, யதார்த்தவாத சித்தாந்தத்தின் அழுத்தம் அதிகம்.

புதுமை இலக்கியம் மலர் 1962


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செய்வினை



"டேய் தம்பி, இண்டைக்கு தைப்பூசமெல்லே இந்த கண்டுக்குட்டியளைக் கொண்டுபோய் முருகேசப்பின்ர வீட்டில குறிபோட்டன்ருவாவன். போன வரியம் அந்த நரைச்சியின்ர கண்டு தொலைஞ்சது போல இதுகளும் மாறுப்பட்டு எடுபட்டுப்போயிருங்கள். பிறவு என்னத்தைச் செய்யிறது. அவரிட்ட போய்ட்டாத்தான் பட்டியும் பெருகும். சொன்னு சொல்வழிகேள் வெய்யில் வந்தா மனுசன் கள்ளுக்குக்கிள்ளுக்கெண்டு வெளிக்கிட்டிரும் கெதிக்கெணப் போராசா"

அம்மாவுக்கு முருகேசப்பின் கைராசியில அப்படியொரு நம்பிக்கை. மாடாடு செம்மறியெண்டு பட்டிக்கணக்கில் வளர்த்து முட்டையும் பாலும் சாணியும் வித்தே ஊருக்க முன்னுக்கு வந்தவர். தன்ர பட்டியில இருந்து ஒரு மாடெண்டாலும் செத்தாலும் விக்கார். இவர் அம்மாவுக்கு அம்மான் முறையானவர். அந்த வகையில அம்மா கலியாணம் கட்டின புதிசில ஒரு சிவத்தப் பயினுகொன்றை தன்னுல ஏலக்கூடியது இதுதான் எனது சொல்லிக் கொடுத்தவராம். அதின்ர வங்கடம்தானும் இப்ப எங்கட பட்டியில பெருகிக்கிடக்கிற மாடுகளாம். அம்மாவுக்கு முருகேசப்பு கொடுத்த மாட்டின்ர கொம்பு நீண்டு வளர்ந்து முன்னுல வந்து வளைஞ்சிருக்குமாம். அப்படிக் கொம்பிருந்தா அதை பட்டி பார்த்த கொம்பென்று சொல்லிறதாம். அப்படி கொம்போடு மாடுகள் இருந்தா பட்டியில மாடுகளும் கண்டுகளும் அவக் அவக் கெனப் பெறுமாம். அதுதான் எங்கட பட்டி பெரிகின சூக்குமம் எண்டு அம்மா முருகேசப்பின்ர கைராசியை புளுகுவா. இந்தக் கிழவன் மாடுகளுக்கு குறி போடுறது காயடிக்கிறது முன்னடைப்பான் பின்னடைப்பான் வந்தா குறிபோட்டு பரியாரம் செய்வது எல்லாத்திலும் ஒரு விண்ணன். ஆனு இலவசமாய் எந்த வேலையும் செய்ததாய் நான்னறிஞ்சவரையில இல்ல. இப்பத்தைய இங்கிலீசுக்காற வைத்தியர்மார் மாதிரி தொட்டதெற்கெல்லாம் காசு, பக்கத்து ஊர்காறர்கள் எல்லாம் தங்கட மாடுகளுக்கு ஏதேனும் பிரச்சனையெண்டா இவரிட்டத் தான் வாறவை, இதால இவர அந்த ஊர்காரங்கள் மாட்டுப் பரியாரியார் எண்டுதான் சொல்லிறவையள். ஊருக்க அனேகமான பேர் கிடாய்க்கு விடுற முருகேசர் எண்டுதான் சொல்லிறவையள். முந்தியவர் ஒரு கறுத்த சீமைக்கிடாய் வளர்த்தவராம். நல்ல கொழுப்புக் கிடாயாம். அந்தக் கிடாய் உழைச்சுக் கொடுத்த காசிலதானும் தன்ர மூத்த மகளுக்கு தாலிக்கொடி செய்தவரெண்டு இந்த கிழவன் சில வேளையில சொல்லி பெருமைப்படும். ஊசியில சினைப்படுத்திற காலம் வந்த உடனே தன்ர கிடாய்க்கு மவுஸ்சில்லாமப் போச்சாம். பிறகுதானும் அதை வித்தவராம். மற்றத இவற்ற வெள்ளடியான் சாவல்தானும் வயிரவர் கோவில் ஏலத்தில் அந்த நேரத்திலேயே ஐம்பது பவுணுக்குப் போனதெண்டு புளுகித்தள்ளும் இந்த கிழம்.

இவர் மருந்து மாயத்திலயும் சரியான ஆளாம். இவர் பழைய ஏடுகளை அமாவாசை இருட்டுக்க சறட்டை வளவுக்க இருக்கிற புத்தடிவேம்புக்கு இருந்துதானும் படிச்சவர். தேசிக்காய இரண்டா வெட்டித் திருப்பி தகழி செய்து தேங்காய் எண்ணையும் முதல் ஈத்துமாட்டின்ர சுத்தமான நெய்யும் சேர்த்து கொழுத்தி வாற வெளிச்சத்தில இருந்துதானும் மருந்துமாயம் எல்லாம் படிச்சு தேறியவராம். அப்படி முறையா படிச்சாத்தானும் அவர் பிறகு ஏவேக்க சித்திக்குமாம். "வாகடவல்லுனன்" என்று எங்கடஅப்பா அவரைச் சொல்லிறவர் ஆளப்பாத்தா சின்னப் பிள்ளையள்கூட சொல்லிப்போடுங்கள் செய்வினைகாறன் எண்டு. மீசையும் குடும்பியும் பார்க்கிற ஆக்களுக்கு ராச்சதப்பிறப்பு போல அவரைக்காட்டி நிற்கும்.

வயிரவர் கோவிலில சன்னதமும் ஆடுறவர். குமர்ப்பிள்ளையளுக்குப் பேய்பிடிச்சா இவர் தான் சன்னதமாடிப் பேய் கலைக்கிறவர். இப்ப இவர்க்கு பேய் கலைக்கிறத்தில அவ்வளவு பிசியில்ல.

**சிதம்பரம் ஞா.வடிவேலனுர்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏணெண்டா முந்தி ஒருக்கா நல்லான்ர பெட்டைக்கு பேய் பிடிச்சதெண்டு இவரிட்ட கொண்டு போனதாம். கிழவன் சொல்லிப் போட்டாம். பிடிச்சது சின்னன் பொன்னனல்ல குருந்தடிமுனி, அதற்கு பரியாரம் பத்தியம் எல்லாம் பெரிசு மற்றதுகளுக்கு மாதிரியல்ல எண்டும் தன்னோட 3 நாள் விடவேணும் எண்டும் நெருங்கிய சொந்தக்காரர் ஒருவரும் தன்ர ஒழுங்கைப் பக்கத்தாலேயே வரக்கூடாதெண்டும் சொல்லி பெட்டை தன்னோட முன்றிரவு வைத்திருந்து பெட்டைக்கு மேலே ஏறியிருந்த முனியை விரட்டியடிச்சவராம். பிறகு அந்தப் பெட்டை முழுகாம இருந்ததற்கு காரணம் குருந்தடிமுனி ஏறினதுதான் எண்டு சாக்குப் போக்குச் சொல்லி கிழவன் ஒரு மாதிரித் தப்பிற்றும். ஊர்காரர்கள் ஒருத்தரும் இவரோட மல்லுக்கு வரமாட்டையும் எண்டது இவருக்கு தெரியும். ஏனெண்டா செய்வினை சூனியக்காறன் எண்ட பயம். படுபயங்கரப்பேர்வழி. எதிர்த்து கதைத்தால் எப்படியும் எண்ணி 30ம் நாளுக்க டாங்கு டுக்கு டுக்கு.. கேட்க வைச்சுப் போடுவான். முந்தி ஒருக்கா கனகமணியக்கா உறமோருக்கு இந்தக் கிழவன் வீட்டை போயிருக்கு. உடனே கிழவன் அவான்ர கையப் பிடிச்சிழுத்து வம்பு பண்ணியிருக்கு. உடனே அவா குழறிக் கூவ அயலட்டம் வந்து கிழவனை படுகேவலமாய் பேசி காறித்துப்பி போனதுகளாம். பிறகு கிழவன் கனகமணியக்காவைப் பார்த்து சொன்னதாம். "பாரடி உன்ன எண்ணி 30 நாளுக்க தெக்க சுடலைக்கு அனுப்பிறன் இல்லாட்டி நான் தூங்கிச்சாகிறனடி" எண்டு, பிறகு கனகமணியக்காவிட கிணத்தடிச் செத்தைக்க செரிகியிருந்த தூமைச்சீலையை எடுத்து என்னேவோ செய்து சொன்னதுபோல 30 நாளுக்க அவாவை தெக்கசுடலைக்கு அனுப்பினது. இப்படி கிழவன் மருந்துமாயத்தில வலுசூரன் இந்தக் கிழவன்ர வீட்டில இருக்கின்ற பிரம்பால தானும் கிழவனுக்கு பெரிய சத்தியெண்டு ஊருக்க கதைக்கிறவை. இந்தப் பிரம்பு கிழவனுக்கு கிடைச்ச கதையே பெரியகதை. கிழவன்ர தகப்பனும் ஒரு வாலாயகாறனும். அவர் முந்தி விடியப்பிறத்திலேயே பால் கறக்க வெளிக்கிட்டிடுவாராம். ஏணெண்டா வேறயாக்கள் கண்பட்டா மாட்டின்ர மடி எரிஞ்சிடும் என்று கிழவன் நம்பிறதாம். பால் கறக்கேக்க செம்பை கீழே வைச்சிட்டுதானும் இரண்டு கையால கறக்குமாம். அப்படி ஒரு நாள் கறந்து முடிஞ்சபிறகு செம்பைப்பார்த்தா செம்புக்க ஒரு சொட்டுப் பாலும் இல்லையாம். கிழவனுக்கு ஒரே ஆச்சரியமாம். இப்படி தொடர்ந்து நடக்க ஒரு நாள் கிழவன் பாலக் கறந்து கொண்டு கீழே குனிஞ்சு செம்பைப் பார்க்க செம்புக்க ஒரு தடியால பாலத்தொட்டு தொட்டு நக்கியபடி ஒரு பேய்க்குஞ்சொண்டு அங்கால நிண்டதாம். உடனே கிழவன் அவக்கென அந்தப் பொல்லைப் பறிச்சிட்டாம். அந்தப் பொல்ல கிழவன் பறிச்சவுடனே பேயிட்ட இருந்த சத்தியெல்லாம் ஒண்டடி மண்டடியா கிழவனிட்ட வந்திட்டதாம். பிறகு, அந்தப் பேய்க்குஞ்சு கிழவனிட்ட "பொல்லத்தா பொல்லத்தா" எண்டு கெஞ்ச கிழவன் அதிட்டப் பறிச்ச சொல்லை மறைச்செண்டு தன்ர பொல்லக் காட்டினவுடனே பேய் தலைதெறிக்க ஓடி தெக்கு சுடல ஒத்தப்பனையில ஏறினதாம்.

பிறகு அந்தக் கிழவன் தன்ர பிள்ளையளில தன்னப்போல இருந்த முருகேசப்புவிற்கு அந்தப் பொல்லக் கொடுத்து மந்திர தந்திரங்களை சொல்லிக் கொடுத்தவராம். இப்ப அந்தப் பொல்லுக்கு செப்புப் பூண் போட்டியிருக்கு. அதை பேய் கலைக்கிற பிரம்பெண்டும் சொல்லிறவை. வயிரவர் கலைக்கிற பிரம்பெண்டும் சொல்லிறவை. வயிரவர் கோயில் சித்திரைப் படிப்பண்டு ஏடு எழுத்தாணி நிறைநாழியோட அந்தப் பிரம்பையும் வைச்சு கோயில்காறங்க இப்பயும் பூசை செய்யிறவை. ஏனென்டா முருகேசப்பின்ர தகப்பன்ர பூட்டன் தானும் அந்த வயிரவரை வேதாரண்யத்தில இருந்து ஒரு பேழைக்க அடைச்செண்டு வந்து ஒரு அரசிற்க ஆவாகனப்படுத்தி பூசை செய்து வந்தவராம். அதால இப்பயும் அந்தப் பரம்பரையில இருக்கிற முருகேசப்புக்கு மரியாதை அந்த கோவில குடுக்கிறவை. மனுசன் தான் காப்புக்கட்டி சித்திரக்கதையை தொடக்கியும் முடிச்சும் வைக்கிறது.

மற்றது இந்தக் கிழவன்ர உரிமையை கொடுக்காட்டி ஏதேனும் செய்து போடும் என்ற பயமும் ஊர் சனத்திற்கு இருக்கு. மற்றது கிழவனுக்கும் தெரியும் இந்த மரியாதையெல்லாம் தனக்கில்ல, தன்ர செய்வினை சூனியத்துக்குதான் எண்டதும். இந்தக்கிழவன் ஆட்டுக்கும் செய்யும்.. மாட்டுக்கும் செய்யும்.. மனுசனுக்கும் செய்யும் வித்தியாசம் பார்க்காது. கந்தப்பரிட்ட நின்றமயில நாம்பனில இந்தக்கிழவனுக்கு ஒரு கண். கிழவன் அந்த நாம்பன கந்தப்பரிட்ட இருந்து அவிட்டுப்போட எத்தனையோ வழி வகை பார்த்தார். கந்தப்பரும் அதை கிழவனுக்கு விற்கிற பாடாயில்ல, பிறகு கிழவன் அந்த நாம்பனுக்கு ஏதோ செய்து அது இந்தா அந்தா எண்டு சாகக்கிடந்தது. கிழவன் தான் ஏதோ செய்திட்டெண்டு கந்தப்பருக்குத் தெரியும் பிறகு கைமருந்து அது இது எண்டும் சரிவரல. பிறகு அம்மன் கோயில் பூசாரிதான் வந்து துடைச்சு கொழுழுஷத்தி மாடு ஒருமாதிரி ஒழும்பினது. பிறகு வண்டியல்காற அப்பருக்கு அதை கந்தப்பு வித்துப் போட்டார். அப்ப முருகேசப்பு சொன்னவராம் நான் செய்ததில தப்பினது இந்த நாம்பன்தான் இருந்து பாருங்க, ஒரு நாளைக்கு இது மூக்காலும் வாயாலும் இரத்தம் கக்கி சாகாட்டியெண்டு புளுதியெடுத்ததாம்.

"டேய் மடையா, குறிபோடுற தெண்டா வெள்ளன வரத்தெரியாதே, வெய்யில் ஏறின பிறகா வாறது, சொன்னவுடனேயே ஆத்தைக்கு மாதிரி முகம் சிவந்திடும்"

"இல்லயப்பு இந்த கண்டுகுட்டியளை இஞ்ச கொண்டுவரப்பட்ட பாடு எனக்கெல்லோ தெரியும். தொறு தொறெண்டு இழுத்தெண்டல்லா வந்தனான்"

"சரி பொச்சு மட்ட கொண்டு வந்தனியா, சூட்டுக்கோல் சரியாச் சிவக்கோணும், கோல் காயக் காய எரிக்கவேணும்.

"இல்லயப்பு அம்மா சொன்னவா நெருப்பை விசுக்கி கொடுக்கசொல்லி, இஞ்ச தாங்க சுளகை நெருப்பை விசுக்கி எரிப்பம்.

"டேய் சூறுண்ணிப்பயல் அவள மாதிரியே வந்திருக்கிற"

"அப்பு குறி சுடேக்க எழுத்த வடிவா எழுதப்பு. வாசிக்கேக்க ஒரு வடிவா இருக்கவேணுமல்லா"

"டேய் விசர் பெடியா புத்தகத்திலேயா எழுதிறது மாட்டில எல்லா எழுதிறது. பிறகு வடிவும் மயிரும். டேய் சுப்பன் நாம்பனோட வாறுன், என்ன புதினமாய் கிடக்கு"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" என்ன முருகேசர்"
"இந்த நாம்பனுக்கு காயடிக்கோனும். அதுதான் உங்கட கையால செய்தாதான் மாடும் நிற்கும்."
"டேய் தம்பி, உன்ர கண்டுகளுக்கு முதலில குறியை போட்டா நீ உடனே போயிருவ, பிறகு இந்த நாம்பனை மடக்கிப்பிடிக்க ஆள் உதவியில்லாமல் போயிரும். முதலில இந்த நாம்பனுக்கு காயடிப்பம். பேந்து உன்ர வேலையை பார்ப்பம், சரியாடா ஏ சுப்பா, இந்த கயித்த குறுக்கால போட்டு இழுத்து நாம்பனை விழுத்துப் பார்ப்பம். டேய் தம்பி பின்னங்கால இறுக்கி அமத்திப் பிடியடா."
ம்பா, ம்அம்மா...ம்பா.. ஆ.....

"ஐயோ பயமாயிருக்கப்பு என்ன செய்யிறேங்கப்பு"
"அட கோதாரியில போவான் இறுக்கி அமத்தடா, விட்டா படாத இடத்தில பட்டிடும். சுப்பர் தலையை விடக்கால இழுத்துத் திருப்பு.
" ஐயோ இரத்தம், என்ன வேலே செய்யிறேங்க"
"என்ன இரத்தம் இரத்தம் எண்டு அலம்பிற நாயே! விட்டா பத்து மாதத்துக்க பிள்ளையும் பெத்து போடுவேங்க"
"ம்பா, ம்பா... பம்பாபாபா....."
"ஐயோ,ஐயோ, இப்படி கமறுதே"
முருகேசப்புக்கு நாம்பன் காலால காயடிச்சிட்டுது.
ஊருக்க சொல்லுவார்கள் நாம்பனுக்கு செய்தது ஏதோ பிழையா போனதால கிழவனுக்கு திரும்பிற்றெண்டு.
(யாவும் கற்பனையே)

# வேலிகள்

## கடல் புத்திரன்

வாசிகசாலையை அண்டிய காணித்துண்டுகளில் ஒன்றில் நெல் கனகாலமாக விதைக்கப்படுவதில்லே. கலட்டித்தரையாகவிருந்ததும் ஒரு காரணம் ஆடுமாடுகளை அவ்விடத்தில் மக்கள் கட்டி வந்தவர்கள். சிவனே, சிதம்பரக் காணித் துண்டு என்று கதைத்தார்கள் ஆனுல் அது தெற்கராலி யாட்களின் பொறுப்பிலேயிருந்தது.

'உண்மையான விவசாயிகள்' என்று சொல்லப்படக் கூடியவர்கள் அவர்கள் குழந்தை குட்டி, பெடியள், குமருகள், பெற்ருேர் என எல்லோரும் வயலிலே இறங்கி வேலே செய்கிறவர்கள், கடின உழைப்பாளி கள். வடக்கராலியாட்களுக்கு அதனுலே அவர்களில் பலரைத் தெரியும்தவிர, உறவுத்தொடர்புகளும் அதிகம்.

தொழில் வாரியான சாதியம் அங்கே நிலவியது. தொழில்முறையில் ஐக்கியப்படுத்தப்பட்டிருந்ததால் கடுமையான போக்குகள் நிலவவில்லே ஆனுல் அரச உத்தியோகம் V.C விவசாய உத்தியோகத்தர் முதலானவைகளே தம்மவர்களே கைப்பற்றிவிட வேண்டும்' என்ற மௌனப் போட்டியிருந்தது. அதில் ஆட்சியுடையவர்களாக விவசாயப் பிரிவினரே இருந்தனர் அதுவே.. சாதியமாகவே நிலவ வைச்சது தம்மவர்களே சேர்ப்பது, மற்றவர்களே ஒதுக்குவது.. இப்படி இழைகள், வடக்கராலியிலே மேம்போக்கான விவசாயப்' பிரிவினரே இருந்தனர் மண்ணுேடு ஒட்டியவர்களாகவிருக்கவில்லே (நிலப்பிரபுத்து வர்போல குடிமைச் சாதியினரே மண்ணின் மைந்தர்களாகவிருந்தனர் இருந்தாலும், இருவரும் ஒரே சாதியினர் என்று சொல்லிக் கொண்டார்கள்.)

தெற்கராலிப் பெடியளைக் கேட்டால் சொல்லுவார்கள் "எல்லாக் காணிகளுமே வடக்கராலியினர் கையிலேயிருந்தன. குத்தகைக்கு எடுத்து 'சிறிமா'ட காலத்திலே வெங்காயம் மிளகாய், புகையிலே பயிரை வைச்சு உழைச்ச காசிலே பெரும்பாலும் வாங்கிய காணிகளே தற்போது எங்களுடையதாக விருப்பன" என்பார்கள். கோயில் காணிகள் மண் தொடர்பு காரணமாக இரு பக்கங்களிலும் ஓரிரண்டு இருந்தன. அக்காணிகள் பொதுவாக பொறுப்பு வகிக்கிறவர்களின் உரித்தாகவேயிருந்தன. 25-30 வருஷமாக மலிவுக் குத்தகை கட்டிய பிறகு கோயில்காரர்களின் கையை விட்டு நழுவியிருந்தன. உறுதி கோயில்காரர்களிடமே இருந்தன. அதனுல் அக்காணிகளே விற்க முடியாது.

பொதுவாக முத்தன்ர சமூகத்தி னரின் குடியிருப்புக்கள் கணிசமான வை. அத்தகைய காணிகளிலே இருந்தன.

குடிமைச் சாதியாக சீரழிந்த அவர்களுக்கு ஏது பணபலம்? கோயில் காணிகளே மனமுவந்து கொடுக்க.. கொடுக்க எல்லாச் சாதியினருக்கும் வருவதில்லேயே! காணியிலே விழுந்த பற்றும் அதை விரிவாக்கும் சிந்தனே நோய் பிடித்தவர்களாக இருக்கிருர் கள் இன்றைய அரசிடம் காணப்படுகிற மண் அபகரிப்பைப்' போல.. அத்துண்டிலே குணம் கனநாளாய் கண் வைத்திருந்ததான்.

வடக்கராலியாட்களின் காணித்துண்டாகவிருந்தால் இத்தனே தூரம் பிரச்சனே இருந்திராது. ஊரான் என்பதால் அல்ல அவர்கள் மண்ணுேடு பிணைக்கப்பட்டவர்கள் இல்லே சில சமயங்களில் சிலர் அறுவடைக் காலத்திலே மட்டும் இறங்கி வேலே செய்யிறது இருந்தது. அவை மட்டும் ஆழப்பிணைப்பை ஏற்படுத்த போதியதில்லே. தெற்கராலியாட்கள் நிலமை வேறு 300 நாளாவது காணியிலே இருப்பவர்கள் புருஷன் வேலேக்கு போயிருந்தால், பொஞ்சாதி குழந்தை குட்டியோட நிற்பாள்.

காணியற்றவர்களாகசீரழிந்து கஷ்டப்பட்டு... பெற்றிருந்ததால் அதைக் கட்டிக் காக்கிற தன்மை கூடுதலாக காணப்பட்டது. ஆனுல், குணத்தானும் மாமா, மாமி வீட்டிலே எத்தனே நாள் இருப்பான். வடக்கராலிக் காரர்ர.. என்று தேடிப் போக முடியுமா? தவிர குடியிருப்புக்களோடேயே இருப்பது போல வருமா?

அத்துமீறல் வருவது வரட்டும் என்று முதல் நாளிரவு நண்பர்களுடன் ரகசியமாக கொட்டில் போட்டிருந்தான் பகலில் வேலியடை த்திருக்கிருன் வெளிப்படையாக எதிர்ப்பு வராததால்... பயம் போயிருந்தது. நண்பர்களும் அகன்றிருந்தார்கள் ஏதும் நடந்தால் 'கூப்பாடு' போடுவதாகவிருந்தது.

வயல் இருட்டோடு நாலேஞ்சு பேர் வந்து குணமண்ணே, குணமண்ணே" என்று கூப்பிட்டார்கள் 'தெரிஞ்சவயள்' என படலேக்கு

23 ம் பக்கம் பார்க்க..


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## சுழலும் உலகம்

# இத்தாலி: புதிய அமைச்சரவையும் பழைய இழுபறிகளும்

தி.உமாகாந்தன்

கடந்த மே 11ம் திகதி சில்வியே பேர்லுஸ்கோணி தனது புதிய அரசாங்கத்தை கியூரினல் மாளிகையில் பொறுப்பெடுத்துக் கொண்டது இத்தாலியின் வரலாற்றில் ஒரு புதிய சகாப்தமா அல்லது வழமையான இத்தாலிய அரசியல் அவலமா என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும். ஆனால் உலக யுத்தத்தின் பின் உருவான இத்தாலியின் 52 அரசாங்கங்களில் கிறீஸ்தவ ஜனநாயக கட்சியின் ஆளுமை இல்லாத முதல் அரசாங்கம் இதுதான்.

ஒரு பிரபல வர்த்தகராக இருந்த பேர்லுஸ்கோணி அரசியலுக்குள் நுழைந்த 3 மாதங்களுக்குள் இத்தாலிய பிரதமராக பதவியேற்றது குறிப்பிடத்தக்க விடயம் ஒன்றுதான். இத்தாலிய அரசியலில் புதுமை செய்தது போல பேர்லுஸ்கோனி தமது அமைச்சரவையிலும் நிறைய புதிய முகங்களை நுழைத்திருக்கிறார். ஆனால் நவ பாசிச அமைப்பைச் சார்ந்த ஐந்து பேருக்கு தமது அமைச்சரவையில் இடம் அளித்ததன் மூலம் சர்வதேச அதிருப்தியையும் பெற்றுக் கொண்டிருக்கிறார். கடந்த அரை நூற்றாண்டு காலமாக முசோலினியின் கோரங்கள் என்று வர்ணிக்கப்படும் இந்த நவபாசிஷ்டுகளுடன் யாருமே பகிரங்க உறவு வைத்ததில்லை. அது மட்டுமல்ல பிரிவினை கோரும் வடக்கு பேரவை தனது உறுப்பினருக்கு சக்தி வாய்ந்த உள்ளூராட்சியமைப்பைப் பெற்றுகொண்டதன் மூலம் அரசுக்குள் தனது வலிமையைக் காட்டியுள்ளது.

ரோமின் அரசியலில் எதுவுமே நிரந்தரமாக இருப்பதில்லை. ஆனால் பேர்லுஸ்கோனியின் அமைச்சரவையோ முரண்பாடுகளின் குவியலாக வர்ணிக்கப்படுகிறது. தேர்தலில் வெற்றி பெற்றதுபோல அமைச்சரவை அமைப்பது பேர்லுஸ்கோனிக்கு இலகுவாக இருந்துவிடவில்லை. தேர்தல் முடிந்து அமைச்சரவை அமைக்கப்பட ஆறுவாரங்கள் எடுத்தன. பதவிகள் குறித்த பேரங்கள் தொடர்ச்சியாக 12 நாட்கள் மூடிய கதவுகளின் பின்னால் நடைபெற்றன. பேர்லுஸ்கோனியில் அமைச்சரவை குறித்து இத்தாலிய ஜனாதிபதியும் திருப்தியடையவில்லை. அமைச்சரவை பற்றிய அறிவிப்பு வெளியாவதற்கு மூன்று மணித்தியாலங்களுக்கு முன்னர் ஜனாதிபதி லுயிஜி ஸ்கல்பல்ரோ, பேர்லூஸ்கோனிக்கு எழுதிய கடிதத்தில் 'அமைச்சரவை நியமனங்கள் உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் அதிருப்தி ஏற்படுத்தாதவையாக அமைய வேண்டும் என்றும் அமைச்சர்களாக நியமிக்கப்படுபவர்கள் இத்தாலியின் ஒருமைப்பாட்டையும், இறைமையையும் மதிப்பவர்களாக இருக்க வேண்டும்' எனவும் கேட்கப் பட்டிருந்தார். நவபாசிஷ்டுகளையும், வடக்குப் பிரிவினைவாதிகளையும் அமைச்சரவைக்குள் அனுமதிப்பது குறித்தே ஜனாதிபதி இந்த எச்சரிக்கையை விடுத்திருந்தார். ஆனால் வடக்குப் பிரிவினைவாதிகளையும், நவபாசிஷ்டுகளையும் தமது அமைச்சரவையில் நியமித்ததன்மூலம் பேர்லுஸ்கோனி, ஜனாதிபதியின் அதிருப்தியையும் பெற்றுக் கொண்டார்.

அதிருப்தி ஜனாதிபதியிடமிருந்து மட்டுமல்ல ஸ்ராஸ்போர்க்கிலுள்ள ஐரோப்பிய பாராளுமன்றத்தைச் சேர்ந்த சோசலிஷ்டு உறுப்பினர்களிடமிருந்தும் கடுமையான அளவில் எழுந்துள்ளது. பிரெஞ்சு ஜனாதிபதி மித்திரோன் கூட சமீபத்திய தொலைக்காட்சிப் பேட்டியொன்றில் தமது கண்டனத்தை தெரிவித்திருந்தார். அமைச்சரவையை அறிவிப்பதற்காக பேர்லுஸ்கோனி நவபாசிஷ்டுகளுக்கும், பிரிவினைவாதிகளுக்கும் பல விட்டுக் கொடுப்புக்களை செய்தமை அவர் பலமிழந்து வருவதைக் காட்டுகிறது. அதுமட்டுமல்ல தமது நெருங்கிய நண்பரும் வழக்கறிஞருமான சிசெயர் பிரெவெற்றியை நீதியமைச்சர் ஆக்க முயன்றார். திரு. பெரெவெற்றி பேருலுஸ்கோனியின் 'நாங்கள் முன்னேறுவோம்' கட்சியின் சார்பில் செனட் சபைக்கு தெரிவு செய்யப்பட்டவர் ஆனால் எதிர்க்கட்சிகளின் கடுமையான எதிர்ப்பால் இறுதியில் இவர் பாதுகாப்பு அமைச்சுப் பொறுப்பை ஏற்றார். அதே சமயம் வடக்குப் பேரவை கட்சியின் தலைவர் உம்பேர்தோ போவியின் கடுமையான நிலைப்பாட்டை கடைப்பிடிக்கும் தந்திரத்துக்கு போதிய பலன் கிடைத்திருக்கிறது. தமது கட்சியில் இரண்டாம் இடத்தை வகிக்கும் 39 வயதுடைய ரெபேற்ரோ மரோனிக்கு உள்ளூராட்சி அமைச்சுப் பொறுப்பு அளிக்கப்படவில்லை என்றால தமது கட்சி அமைச்சரவையில் பங்கு கொள்ளாது என்று போசி பகிரங்கமாகவே மிரட்டினார். பேருலுஸ்கோனி இந்த மிரட்டலுக்கு பணிய வேண்டியே வந்தது. வடக்குபேரவைக் கட்சிக்கு 5 அமைச்சுக்கள் வழங்கப்பட்டுள்ளன. உள்ளூராட்சி அமைச்சுத்தவிர இன்னுமொரு முக்கிய அமைச்சான அரசியல் சட்டத்திருத்த அமைச்சும் வடபேரவைக்கு வழங்கப்பட்டுள்ளது.

பேருலுஸ்கோனியின் உதவிப் பிரதமரான தாதரெல்லா MSI இத்தாலிய சமூக அமைப்பு என்ற நவபாசிச அமைப்பைச் சேர்ந்தவர். இவரே தபாலமைச்சருமாகும். பேருலோஸ் கோனியின் கட்சிக்கு எட்டு அமைச்சுக்கள் வழங்கப் பட்டுள்ளன. அரசியல் பொருளாதார விரிவுரையாளரான அன்ரோனியோ மாற்றிஞேவுக்கு வெளிவிவகார அமைச்சுப்பதவி வழங்கப்பட்டுள்ளது. பெருலுஸ்கோனியின் வியாபாரக் கூட்டாளியான கியானி லெற்ரு பிரதமரின் பாராளுமன்ற செயலாளராக நியமிக்கப் பட்டுள்ளார். பெருலுஸ் கோனிக்குச் சொந்தமான மூன்று தொலைக்காட்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேவை நிறுவனங்களில் பணிபுரியும் கிலியானே ஃபெரேரா பாராளுமன்ற விவகார அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்த நியமனங்கள் குறித்து எதிர்க்கட்சிகள் கருத்துத் தெரிவிக்கையில் 'ஒரு வர்த்தக நிறுவனம் ஒன்று பதவிக்கு வந்துள்ளது" எனக்குறிப்பிட்டுள்ளன. அது மட்டுமல்ல இந்த அமைச்சரவை பெருலுஸ்கோனியின் பெரும் சொத்துக்களை பெருக்கவும் பாதுகாக்கவும் அமைக்கப்பட்ட நிறுவனம்போலவே உள்ளது எனவும் எதிர்க்கட்சிகள் கூறியுள்ளன. இந்த அமைச்சரவையில் செயழிந்துவிட்ட லிபரல் கட்சியிலிருந்து சுதந்திர முன்னணியில் இணைந்தவர்களான அல்பிரேடா பியோண்டி– இவர் ஒரு வழக்கறிஞர்– நீதியமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார். ரஃகொஸ்ரா– சுகாதார அமைச்சராக நியமிக்கப் பட்டுள்ளார். இவர்கள் தவிர உடைந்த கிறீஸ்தவ ஜனநாயக கட்சியைச் சேர்ந்தவர்கள் இருவருக்கும் அமைச்சர் பதவிகள் வழங்கப் பட்டுள்ளன. அமைச்சரவையில் இன்னுமொரு புதியமுகம் திறைசேரிக்கான அமைச்சராக நியமிக்கப்பட்டிருக்கும் லம்பேற்ரோ டினி. இவர் இத்தாலிய வங்கியின் இயக்குநர் நாயகமாக பணிபுரிந்தவர்.

வழமைபோலவே புதிய அமைச்சரவையின் மூலம் பேருலுஸ்கோணி வாக்குறுதிகளை அள்ளி வழங்கியுள்ளார். தனியார் துறையை ஊக்கப்படுத்தப் போவதாகவும் சிவப்பு நாடா முறையை இல்லாமல் செய்யப் போவதாகவும் அறிவித்திருக்கும் பேருலுஸ்கோனி 1 மில்லியன் புதிய வேலைகளை உருவாக்கப்போவதாகவும் கூறியிருக்கிறுர். ஆனுல் குழப்பமான இன்றைய இத்தாலியின் அரசியல், பொருளாதார நிலையில் இந்த வாக்குறுதிகளை நிறைவேற்றக்கூடிய சாத்தியக்கூறுகளே இல்லை.

குறுங்கால ஆயுள் கொண்ட வழமையான இத்தாலிய அரசாங்கங்களிலிருந்து பேருலுஸ் கோனியின் அரசு வேறுபடும் என நினைப்பதில் அர்த்தம் எதுவுமே இல்லை.

# வேலிகள்...

வந்திருக்கிருன். இருட்டிலே யார் என சரிவரத்தெரியவில்லை. துணிஞ்சு வெளிய வர ஒருத்தன் மடக்கி வாயைப்பொத்திப் பிடிக்க மற்றவன் காலைப்பிடித்து சத்தமில்லாது தூக்கிக் கொண்டு வயல் புறமாக கொண்டு சென்றிருக்கிருர்கள்.

வரம்பிலே வாயை துணியால் அடைத்து விட்டு கையை பின்னுக்குக் கட்டிப் போட்டு தடிகளால் அடித்து துவைத்திருக்கிருர்கள். முன்கோபக் காரனுன ஒருத்தன் வில்லுக் கத்தியை எடுத்து தோளை இழுத்து விட்டான் ஆழமாக விழுந்த காயம்.

அவர்களுள் குழப்பம். வெறுமனே அடித்து விட்டு போகவே வந்திருக்கிருர்கள் தோள் காயத்தை துணியால் ரத்தம் போகாதவாறு இழுத்து கட்டி விட்டு கைக்கட்டை அவிழ்த்து விட்டு ஓடிப்போய்யிருக்கிருர்கள்.

மனுசிக்காரி 'கனநேரமாய் காணவில்லை என்று வெளிய வந்து பார்த்திருக்கிருள் முணங்கிற சத்தம் வயல்பக்கமிருந்த மெதுவாக கேட்க, கலவரமுற்று கத்தி ஊரை கூட்டினுள். குணத்திற்கும் ஆட்களை சரிவர தெரியாது. 'காணிக்காரர்கள் தான் செய்திருக்க வேண்டும்' என்று அனுமானித்தார்கள்

பாபு அவர்களுடன் இழுபட்டு 8.00 மணியிற்கே போனுன். இவ்விசயத்தால் செல்லமுத் தண்ணையும் 9.00 மணிக்கே வந்தார் அவர் மனநிலையும் சரியில்லை இன்னும் கொஞ்ச வேலையேயிருந்தது.

குலனை மக்களுக்கு அச்செய்தி ஒரு பொருட்டாகவிருக்கவில்லை. பெடியளுக்கும் கூடத்தான் தன் மகனிடம் டராக்டரைக் கொடுத்து விட்டு வீட்ட போய்விட்டார்

'சொந்தச் சகோதரர் சாதல் கண்டும் சிந்தை இரங்காரடி' பாரதியாரின் வரியே பாபுவுக்கு ஞாபகம் வந்து கொண்டிருந்தது. வடக்கராலிச் சமூகம் சுடலைப்பிரச்சனையை நெஞ்சில் வைச்சுக்கொண்டு "காணித்துண்டை விடாதீங்கடா" என்று தெற்கராலிக்கு அட்வைஸ் பண்ணியது. பள்ளிக்கூடம் 'வெட்டினதுக்கு நட்ட ஈடுபற்றி பிரலாபித்தது.

ஆத்திரத்தில் பெரியவர்களைப் பார்த்து" அங்கால பக்கம் சாவீட்டுக்கு விறகடுக்கல்: கிடங்கு வெட்டல் முதலான குடிமை வேலைகளுக்கு போகக் கூடாது" என்று கட்டுப்படுத்தியது வடக்கராலியில் சிதறிக்கிடக்கும் தம்மவர்களைப் போய் பார்த்தும் கேட்டது.

நீ யார் கேட்க, எங்கட வாசிகசாலைப் பெடியளையே நாம் கேட்போம் என்று இலகுவாகப் புறக்கணிக்கப்படவே பெடியளை அணுகினுர்கள்.

"பல விளைவுகளை சமாளிக்க சூழல் சாதகமாக இல்லை, நாம் வற்புறுத்த மாட்டோம் ஏலுமென்ருல் சொல்லிப் பாருங்கள், கேட்கிறவர்கள் கேட்கட்டும்" என்று அவர்கள் பதில் அளித்தார்கள்.

பெடியளுக்குதம்மத்தியிலுள்ள சீரழிவு முதல் தடவையாக திகைக்க வைத்தது. அந்த முயற்சியை கை விட்டார்கள் பல்வேறு சமுக சேவைகளை முடுக்கிவிடாது கோபமுற்ற மற்ற சமுகம் பள்ளிக்கூடத்தடி ஆட்களை யாரும் வேலைக்கு எடுக்கக் கூடாது, சாந்தனின் (பள்ளியைச்சேர்ந்தவன்) கடையிலே சாமான்கள் வாங்கக் கூடாது" என்று வீடு வீடாக பெடியள் அணியை அனுப்பி பிரச்சாரம் செய்தது. கடை விசயம் சுகுணனின் சதி.

அராலியிலே குறிப்பிடக் கூடிய கடைகளில் ஒன்ருக சாந்தன் விடாமுயற்சியுடன் புத்தி சாலித்தனத்துடனும் கட்டியிருந்தான். தரமான சாமான்கள் என்று எல்லோரும் அக்கடையை நாடினுர்கள் பலர்க்கு கடையிலே கொப்பிகள் இருந்தன.

சுகுணன் புதிதாக கடையை திறந்தவன் அவனுல் 'கொப்பி'கள் வைக்கமுடியவில்லை தவிர சிறிய விலை அதிகரிப்பாகவும் இருந்தன எனவே சூழலை சாதகமாக பயன்படுத்த முயன்ருன்.

சாந்தனின் நிலமை மோசமானது. எதைக் குறித்தும் சரிபிழைகளைப்பார்க்காமல் இரு பெடியள் அணிகளும் தம்பக்கமிருக்கிற துருப்புக்களை வைத்து பகடைக்காய்கள் ஆடின வேலி யடைத்தல், வயல்வேலைகள் கோழிப்பண்ணைகளைப் பார்த்தல், ஆடுமாடுகளைக் கவனித்தல் பழப்புளிக் காலங்களில் அதோடு ஒட்டிய வேலைகள் என கணிசமான குடிமை வேலைகளை செய்தார்கள். அதைவிட பாரம்பரியமாளவை.. என சாவீட்டிலே தட்சணை பெறும் வேலைகள் (அடிமை குடிமையை

24ம் பக்கம் பார்க்க..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொய்மைகள் உடையும் போது... இன்று புலம்பெயர்ந்த வாழும் தமிழ்ச்சமூகத்தின் நிலை என்ன?

**இன்று நாம் காணும் அனைத்து செய்திகளும் ஏதோ ஓர் சார்புடைய, உண்மைக்கு புறம்பானவைகளாகவும் பொறுப்பற்ற தமது நலன்களை பாதுகாப்பவையாகவும் தான் வெளிவருகின்றன. இதன் மூலம் நாம் சாதித்ததெல்லாம் மிகவும் கீழ்தரமான சிந்தனை கொண்ட தமிழ்சமூகத்தினை உருவாக்கியது தான். இதற்கு சில உதாரணங்களை கூறலாம். தமிழ் பெண் அடிமை, நிலை சாதிப்பிரிவினை, சமூக அந்தஸ்து படித்தவன், படிக்காதவன், தனிநபர் வழிபாடு, இயக்க விசுவாசம், கவர்ச்சி கர திறில், என்று இப்படியாக நீண்டு கொண்டே போகின்றது.**

## ஜெயனி சு.

பொதுவாக மக்கள் இருபெரும் காரணங்களுக்காக தமது சொந்த மண்ணை விட்டு வேறு இடங்களிற்கு அல்லது நாடுகளுக்கு புலம்பெயர்ந்து வாழ்கிறார்கள்.

1. பொருளாதாரம்
2 அரசியல்

மேற்கூறிய இரு காரணங்களும் தமிழ் மக்களுக்கும் பொருந்துவதாக உள்ளது. இவ்வாறு புலம்பெயர்ந்த நாம் எப்படியான வாழ்க்கைமுறையை வாழ்ந்து வருகின்றோம் என சீர்தூக்கிப் பார்த்தால் ஏராளமான போலித் தன்மைகளையும், சீரழிவுகளையும் கொண்டதாகவே உள்ளது. இப்படியான போலி வாழ்க்கையில் இருந்து விடுபடவேண்டிய ஓர் இக்கட்டான காலகட்டத்தில் நாம் இன்று இருக்கின்றோம்.

எமது இனம் காலகாலமாக பழமைகளிலும், பொய்மைகளிலும், மனித உரிமைகள் மறுக்கப்படும் போதெல்லாம் மௌனமாக இருந்த நாம், இவ் அனைத்து உரிமைகளும் மறுக்கப்படும் போது, நாம் எமது விடுதலையும், சுதந்திரத்தையும் வேறு யாரும் பெற்றுத்தரமாட்டார்களா(?) என்ற ஏக்கத்துடன் பார்த்துநிற்கின்றோம். இன் நிலை இப்படியே நீடித்துசெல்லுமானால் நாம் பாரிய பிரச்சனைகளை எதிர்நோக்க வேண்டியுள்ளவர்கள் ஆவோம்.

எனவே நாம் இந்த "ஆமா போடும்" சமூக அமைப்பை மாற்றுவதற்குரிய வழிமுறைகளை நன்கு ஆராயவேண்டியவர்கள் ஆகியுள்ளோம். இதில் புலம்பெயர்ந்து வாழும் எமது நிலையும் ஆராயப்படவேண்டும். முதலில் எமது போலித்தனம் பற்றி தெரிந்து கொள்வதின் மூலம் எம்மை ஓர் தெளிவான பாதையில் இட்டு செல்லமுடியும்.

பல்வேறு காலகட்டத்தில் எம்மீது அதிகாரம் செலுத்திய சமூக மத அரசியல் "தலைமைகள்" தமது சுயநல இலாபத்துக்கு எம்மையெல்லாம் பயன்படுத்தி அல்லது ஏன் இந்த "வம்பு" என்று ஒதுக்கி வாழும் சிந்தனைகளையும், கருத்துக்களையும் எம்மிடையே உருவாக்கின.

உலக சமூகங்கள் காலத்துக்கு காலம் பல்வகையான மாறுதல்கள் கண்டுவருகின்றன. இதில் எமது சமூகம் விதிவிலக்கு அல்ல, இம் மாறுதல்களின் அளவுகள் மாறுபடலாம், ஆனால் மாறுதல்கள் நடைபெற்றுக் கொண்டுதான் இருக்கின்றன. இவ் வகையான மாறுதல்களுக்கு குறுகிய சமூகசிந்தனை கொண்ட குழுக்கள் அமைப்புகள் பத்திரிகைகள் சஞ்சிகைகள் உரைகள், நாடகங்கள், கவிதைகள், தொலைபேசி செய்திகள் என்று அனைத்து மக்கள் தொடர்பு சாதனங்கள் மூலம் தவறான கருத்துகளை எம் மத்தியில் பிரச்சாரம் செய்துவருகின்றனர். இவ்வகையான பிழையான கருத்துகள், சிந்தனைகளுக்கு புலம்பெயர்ந்து வாழ்கின்ற சமூகம் தெளிவுடனும் சமூக கண்ணோட்டமுள்ள பல அரிய கருத்துகளை முன்வைக்க வேண்டிய காலகட்டத்தில் நாம் இன்று வாழ்கின்றோம். நாம் எமது ஆரம்ப அடிப்படை கல்வியை சொந்த மண்ணிலும் பின்னர் புலம்பெயர்ந்த பிரதேசங்களில் பல துன்பங்கள் இன்னல்களுக்கு மத்தியில் எமது வளர்ச்சி கல்வியையும் கற்றுவரும் நாம், எமது தமிழ் சமூகத்தின் பொய்மைகளையும், குறைபாடுகளையும் தெளிவுறும் வகையில் எமது ஆக்கங்களை முன்வைப்பதின் மூலம், எமது வளரும் புதிய சமூகத்தினை சரியான முறையினை நோக்கி செல்வதற்குரிய பாதையினை வகுத்துக் கொடுப்போர் ஆகின்றோம்.

இன்று நாம் வாழும் காலம் என்பது மிகவும் அட்டகாசமும், அடக்குமுறைகளும், துன்பங்களும் நிறைந்தன. ஆனாலும் இக்காலகட்டம் தான் நாம் ஒவ்வொருவரும் நம்முடைய வாழ்க்கையை (இருப்புகளை) மீண்டும் பரிசீலனை செய்ய வேண்டிய காலம், ஏனெனில் இதற்கு முன்னர் நாம் ஓர் பொய்மைக்குள் ஒளிந்துகொண்டு அல்லது கதைத்துக்கொண்டு வாழ்ந்தோம் அல்லது வாழ்க்கை மறுக்கப்பட்டது. ஆனால் இன்று புலம்பெயர்ந்து வாழ்கின்ற நாம் பொய்மைகளுக்கு மாற்று கருத்துகளை முன்வைக்கவேண்டும். இதன் ஊடாக ஓர் புதிய பார்வை, புதிய சமூகத்தை நோக்கிய தெளிவான கண்ணோட்டத்தில் எமது நோக்கங்கள் அமைய வேண்டும், மேலும்

## வேலிகள்...

ஞாபகமூட்டுவதாகவிருந்தன) சிலவும் இருந்தன.

வேலையற்றிருந்ததால் ஆண்கள் சீவின கள்ளை தாமே குடித்து விட்டு ஒழுங்கை வழிய அடிபட்டு மண்ணில் புரண்டார்கள் தடுக்கப் போன பொஞ்சாதி பிள்ளைகளையும் அடித்து.. என ஒருவித குழப்பநிலை ஏற்பட்டிருந்தது.

வீம்பாக மறுதலித்த சமூகமும் மற்ற பகுதி ஆட்களை வேலைகளுக்கு புதிதாக சேர்த்தது. ஒரே சமூகத்திலே ஒருவர் அழவும், மற்றவர் வேலை செய்யிற போக்கும் பெடியளுக்கு சிறிய கலக்கத்தைக் கொடுத்தது.

ஒரே நாளிலே அவர்களில் கணிசமான பேர் களவுகளில் ஈடுபடுவதை அச்சமூகத்தினர் கண்டார்கள் பெடியளை விட்டுவிட்டு, பிற்பகல் 6.00 மணிக்கு சாந்தனின் கடையிலே ஏறி சாமான்கள் வாங்கிக் கொண்டு வேலைக்கு பழையபடி வரச் சொல்லி அச்சமூகம் அறிவித்தது.

தொடரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துணிவுடனும் நிதானத்துடனும் எமது கருத்துக்களை எழுதவேண்டும். அவை அனைத்தும் பொய்மைகளின் முகங்களை புரிந்துகொள்ளும் விதத்தில் எழுதப்பட வேண்டும். இதனூடாக நாம் ஓர் புதிய சமூகத்தை உருவாக்கவேண்டும். அச்சமூகத்தின் மத்தியில் இருந்து எமது தமிழ்தேசியத்தை முன்னெடுத்து செல்கின்ற தலைமை உருவாக்கப்படவேண்டும். ஆகவே நாம் ஒவ்வொரும் இந்த புதிய மனிதவடிவம் முழுமையடைய முழுமூச்சுடன் செயல்பட வேண்டிய காலம் இது. இதன் மூலம் அப்புதிய சமூகத்தினை உருவாக்க எளிதாக இருக்கும்.

இங்கு நாம் இன்னு மொன்றையும் கவனிக்க வேண்டும். எமது தவறுன கருத்துக்களை நியாயப்படுத்தவோ அல்லது ஒப்பீடு செய்யவோ முனையக்கூடாது. இன்று நாம் காணும் அனைத்து செய்திகளும் ஏதோ ஓர் சார்புடைய, உண்மைக்கு புறம்பானவைகளாகவும் பொறுப்பற்ற தமது நலன்களை பாதுகாப் பவையாகவும் தான் வெளிவருகின்றன. இதன் மூலம் நாம் சாதித்ததெல்லாம் மிகவும் கீழ்தரமான சிந்தனை கொண்ட தமிழ்சமூகத்தினை உருவாக்கியது தான். இதற்கு சில உதாரணங்களை கூறலாம். தமிழ்பெண் அடிமை, நிலை சாதிப்பிரிவினை, சமூக அந்தஸ்து படித்தவன், படிக்காதவன், தனிநபர் வழிபாடு, இயக்க விசுவாசம், கவர்ச்சிகர திறில், என்று இப்படியாக நீண்டு கொண்டே போகின்றது.

இவைகளில் இருந்து விடுபட புலம்பெயர்ந்து வாழ்கின்ற நாம் எமது தமிழ்மக்களின் (எமது) சரியான தோற்றத்திற்கான ஓர் அடிதளம் போடவேண்டிய காலகட்டத்தில் இருக்கின்றோம். இப்பொழுது நமக்கு முன் உள்ள பணி என்னவென்றுல் பொய்மைகளினுலும் பழமைகளினுலும் கவர்ச்சிகளினுலும் அடிமைப்பட்டு இருக்கின்ற சமூகத்தினை, திறமையான, சரியான திசையில் எடுத்துச்செல்ல வேண்டிய கருத்துக்களை எமது ஆக்கங்கள் மூலம் வெளிக்கொணர்வது தான் இப்படியான ஓர் பரந்துபட்ட சமுதாய மாற்றங்கள் தேவைப்படும் போது எமது மக்களின் அடிமனதில் இருந்து பரவலான மாறுதல்கள் தேவைப்படுகின்றது. இவ்வகையான மாறுதல்களுக்காக எமது ஆக்கங்கள் முன்னுதாரங்களாக அமையவேண்டும். இதன் மூலம் எமது எதிர்காலச்சந்ததியினருக்கு புதிய வாழ்க்கையை சரியான முறையில் அமைத்துகொள்ள ஆரம்ப தளத்தை போட வழிவகை செய்யமுடியும்.

இது நீண்டதாயும் கடினமானதாயும் இருக்கும், ஆனுல் இதனைத்தான் நாம் இன்று செய்யவேண்டிய கடமையும் ஆகும். பொய்மைகள் உடையும் போது ஓர் தெளிவான சமுதாயம் உருவாகும்.

# யதார்த்தத்தை உணர்ந்த பெரியார் ஞானமூர்த்தி அவர்கள்

1987 மே மாதம் வடமராட்சி மீது இலங்கை இராணுவம் தொடுத்த "லிபரேஷன் ஒப்பரேஷன்" யுத்தத்திற்குள் அகப்பட்ட நானும் எனது மனைவியும் பிள்ளைகளும் நூற்றுக்கணக்கான அப்பாவிப் பொதுமக்களின் மரணங்களுக கிடையே தப்பிச் சென்று பருத்தித்துறை வைத்தியசாலையில் தஞ்சம் புகுந்தோம். இராணுவம் வடமராட்சியை நான்கு நாள் யுத்தத்துடன் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தது. மீண்டும் புலிகள் கண்ணிவெடிகளை வைக்கிறுர்கள். இதைத் தொடர்ந்து இராணுவம் பொதுமக்களை வேட்டையாடு கின்றனர். மீண்டும் மரணத்தை தவிர்க்க கொழும்புக்கு பிள்ளைகளையும் கூட்டிக் கொண்டு தப்பிச் சென்றேன். வெள்ளவத்தை சர்வதேச பௌத்த நிலைய வீதியிலுள்ள தமிழருக்கு சொந்தமான லொட்ஜில் பெரும் வாடகை கொடுத்து தங்கினேம். அங்குதான் முதன் முதலாக சென்ற வாரம் அமரராகிய பெரியார் ஞானமூர்த்தி அவர்களைச் சந்திக்கவும் அவருடன் உரையாடவும் வாய்ப்பு கிட்டியது.

மூன்று வாரங்களின் பின் இலங்கை இந்திய ஒப்பந்தம் கைச்சாதிடப்படுகிறது. கொழும்பில் ஜேவிபியினர் அட்டகாசம் ஆரம்பித்தது. சிங்கள பொதுமக்களும் அல்லோல கல்லோலப்பட்டனர். இந்திய இராணுவம் தமிழ்ப்பகுதிக்கு வருகிறது என்ற செய்தியுடன் யாழ்ப்பாணம் திரும்புகிறேம். தனியார் பஸ் வண்டி மூலமாக வவுனியாவிலிருந்து முருகண்டி வரையில் இந்தியா இராணுவத தினரின் வாகனங்கள் வழி நெடுகிலும் தமிழ் மக்களின் இந்திய இராணுவத்தை வரவேற்று குதூகலிக் கின்றனர். சிகரெற் இனிப்புகள் கொடுத்து வரவேற்கின்றனர். பதிலுக்கு இராணுவத்தினர் தம்மிடமிருந்து பணத்தை கொடுக்கிறுர்கள் சனங்கள் வாங்கவில்லை. எனது சக பயணி ஒருவர் என்னிடமிருந்த 'கோல்ட்லீப்' பெட்டியை வாங்கி இராணுவத்துக்கு கொடுத்து நன்றியைப் பெற்றுக் கொண்டார். இந்திய இராணுவத்தின் வருகையுடன் யாழ்ப்பாணத்தில் ஒரு மாதம் பூரண அமைதி. இலங்கை இராணுவம் முட்டை கட்டிவிட்டது. ஒரு மாதத்தின் பின்பு இந்திய இராணுவ முகாம்களை சுற்றி புலிகளின் ஆதரவாளர்களின் ஆர்ப்பாட்டங்கள்.. ஐப்பசி மாதத்தில் இந்தியா இராணுவத்துடன் புலிகள் மோதினர். மீண்டும் யுத்தம் யாழ்ப்பாணக் கல்விமான்கள், சட்டத்தரணிகள் முதலானேர் யுத்தம் வேண்டாம் என்று மன்றுடினர்.

யுத்தப்பேய்கள் அகோரத்தைக் காட்டின. இதற்கு முடிவில்லை என்பது தெரிந்து விட்டது. இரண்டு மாதங்களுக்கு முன்பு இரத்துச் செய்த எனது வெளிநாட்டுப் பயணத்தைத் தொடர நிர்பந்திக்கப்பட்டு கொழும்பு வந்தேன். அந்த லொட்ஜில் மீண்டும் தங்குகிறேன்.

பெரியவர் ஞானமூர்த்தி அவர்களை மீண்டும் சந்திக்கிறேன். பேயறைந்ததைப் போல காணப் பட்டார் "இந்தியாவைப் பகைப்பது முட்டாள்தனம். இது தமிழ் மக்களை அழிவில் கொண்டுபோய் விடப் போகிறது" என்றுர் கவலை தோய்ந்த முகத்துடன். அவர் சார்ந்திருந்த அரசியல் கட்சியுடன் எனக்கு உடன்பாடு இல்லாவிட்டாலும் அந்த மனிதர் யதார்த்தத்தை எவ்வளவு தெளிவாகப் புரிந்து கொண்டாரே என்று எண்ணியபோது, அவர்மீது ஒரு பெரும் மதிப்பு ஏற்பட்டதைக் குறிப்பிடாமல் இருக்கமுடியுமா?

**கதிர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜே.வி.பி.யின் அரசியலின் சமூக பொருளாதார அரசியல் பின்னணி

ஜேவிபியின் வளர்ச்சிக்கு மிகுந்த தாக்கத்தை ஏற்படுத்திய இன்னுமொரு காரணி இனப்பிரச்சனையாகும். இப்பிரச்சனையானது பிற்காலத்தில் ஜேவிபி பெரும் பாய்ச்சலில் வளர்வதற்கு அவகாசம் அளித்தது.

இனப்பிரச்சனை பிரதானமாக ஆட்சியாளர்களால் நிர்மாணிக்கப பட்ட ஒன்றாகும். ஆயினும் இப்பிரச்சனை இந்த மட்டத்திற்கு வளர்வதற்கு எமது இடதுசாரி இயக்கமும் ஓரளவுக்கு பொறுப்பாளியாகும். படிப்படியாக ஜனரஞ்சக அரசியலுக்குள் வீழ்ந்த எமது இடதுசாரி இயக்கத்தின் பிரதான பங்காளிகள் அனைவரும் கூடிய குறைந்த அளவில் இனவாத அரசியலுடன் இணைந்து கொண்டனர். இதன் பெறுபேறாக தமிழ் இளைஞர்கள் இடதுசாரி இயக்கம் குறித்து நம்பிக்கை கொள்ள முடியாத நிலமை ஏற்பட்டது. இடதுசாரி இயக்கம் இனவாத அரசியலுடன் ஓரளவு தூரத்துக்கேனும் இணைந்து கொண்டதனால் தமிழ் மக்கள் மத்தியில் தமக்கு இருந்த அடித்தளத்தைக் கூட இழக்க நேரிட்டது எனக் கூறவேண்டியுள்ளது.

இடதுசாரி இயக்கம் ஓரளவு தூரத்துக்கு இனவாத அரசியலுள் வீழ்ந்தும், இடதுசாரி இயக்கத்துள் நிலவிய தவறுகளால் அது பெலவீனப்பட்டதும் காரணமாக முதலாளித்துவ ஆட்சியாளர் தமிழ் மக்களுக்கு இனரீதியான அநியாயங்களை இழைக்கும் போது தேசிய இன ஒடுக்குமுறைக்கு எதிராக மேற்கொண்ட போராட்டத்தையும் கைவிட வேண்டிய நிலமை ஏற்பட்டது. இடதுசாரி இயக்கம் பெலவீனப்பட்டதால் தேசிய இன ஒடுக்கு முறைக்கு எதிரான போராட்டங்கள் மட்டுமன்றி ஒட்டுமொத்தமாக அனைத்து போராட்டங்களையுமே கைவிட நேரிட்டது. ஆனாலும் ஜனரஞ்சக அரசியலை தேர்ந்தெடுத்ததால் தேசிய இன ஒடுக்குமுறைக்கு எதிரான போராட்டத்தை முற்று முழுதாகவே கைவிட வேண்டிய நிலமை உருவாகியது. இடதுசாரி இயக்கம் இவ்வாறு சீரழியாமல் இருந்திருந்தால் தேசிய இன ஒடுக்கு முறைக்கு எதிரான போராட்டத்தின் சுக்கான் இயக்கியாக மாறி இவ்வாறான அழிவுகளை ஏற்படுத்தியுள்ள யுத்தத்தை நோக்கி செல்வதிலிருந்து நாட்டையும் மக்களையும் விடுவித்திருக்கலாம். ஆனாலும் அச்சந்தர்ப்பத்தை இழக்க நேரிட்டது. இனவாதம் பெருமளவில் வளரும் நிலமையும் இனங்களுக் கிடையான ஐக்கியமும் சகோதரத்துவமும் தகர்ந்து போகும் நிலையையும் இனப் பிரச்சனையால் தோன்றிய இவ்யுத்தம் ஏற்படுத்தியது. இதன் தாக்கம் எந்த அளவுக்கு உள்ளது என்று கூறுவதாயின் நாட்டின் சகல நிலமைகளையும் நிச்சயிக்கும் காரணியாக இனப்பிரச்சனையும், யுத்தமும் மாறியுள்ளது. இதனை அடித்தளமாகக் கொண்டு தமிழ் மக்கள் மத்தியில் தமிழ் இனவாதமும் சிங்கள மக்கள் மத்தியில் சிங்கள இனவாதமும் வளர்ந்தன. இதன் காரணமாக தமிழ் மக்கள் மத்தியில் வேலை செய்த அரசியல் கட்சிகள் அமைப்பகள் ஏறக்குறைய எல்லாமே கூடிய குறைந்த ரீதியில் தமிழ் இனவாதத்த அடிப்படையாகக் கொண்டு வேலைகளைச் செய்ததோடு சிங்கள மக்கள் மத்தியில் வேலை செய்த அரசியல் கட்சிகள் அமைப்புகள் ஏறக்குறைய எல்லாமே கூடிய குறைந்த ரீதியில் சிங்கள இனவாதத்தை அடிப்படையாகக் கொண்டு வேலை செய்தனர். இரு இனங்கள் மத்தியிலும் சிங்கள அல்லது தமிழ் இனவாதத்தை நிராகரித்த அரசியல் அமைப்புகள் ஒன்றுமே இல்லை என்பது அல்ல, ஆனால் அவற்றால் அரசியல் பூமியில் மிகச் சிறிய தாக்கத்தையே ஏற்படுத்த முடிந்தது.

சந்தர்ப்பவாத பதவி ஆசை பிடித்த ஆட்சியாளர் மட்டுமன்றி ஆட்சி அதிகாரத்துக்கு வர துடித்துக் கொண்டிருக்கும் சக்திகளும் ஏதோ ஒரு விதத்தில் இவர்களைத் தூக்கிப் பிடித்த தொடர்பு சாதனிகளும் மக்களின் உள்ளத்துள் இனவாத விதையை விதைத்து அவற்றுக்கு உரம் இட்டதால் அது நன்றாக செழித்து வளர்ந்தது. இன பிரச்சனைக்கும் யுத்தத்திற்கும் வழி சமைத்த இவர்கள் அடுத்ததாக அதனையே முன்தள்ளி சிங்கள மக்கள் மத்தியில் பெரும் பீதியை ஏற்படுத்தக்கூடிய அனைத தையும் செய்தனர். சிங்களவர்கள் அவர்கள் பிறந்த நாட்டிலேயே சிறுபான்மை இனத்தவர்களாக மாறி வருகின்றனர் எனவும் அந்நிலமையை தடுப்பதற்காக போராடவேண்டும் எனவும் இனப் பிரச்சனையுடன் தொடர்பான யுத்தம் நாட்டை இரண்டாக கூறுபோட்டு சிங்களவர் களை அடிமைகளாக மாற்றுவதற காகவே நடைபெறுகிறது எனவும் மிகப் பிரபல்யமான மனோபாவத்தை சிங்கள மக்கள் மத்தியில் உருவாக்க இவர்களால் முடிந்தது. இக் கூற்றின்படி சிங்கள மக்களுக்கு சிங்கள இனத்தைய, ம் நாட்டையும் இவ் ஆபத்தில் இருந்து மீட்பதற்காக போராடவேண்டிய சக்தி ஒன்றின் அவசியம் ஏற்படுத்தப் பட்டிருந்தது. யூஎன்பி ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி உட்பட பிரதான கட்சிகள் தொடக்கம் சிறிய கட்சிகள் குழுக்கள் வரை அனேகமானவை இவ் அவசியத்தை நிறைவேற்றவே தாம் செயல்படுவதாக காட்டிக் கொள்ள முயற்சித்த போதிலும் அம் முயற்சி அவ்வளவு தூரம் கைகூடவில்லை. ஆனால் 1985 காலத்தில் இருந்து ஜேவிபி இவ் அவசியத்தை நிறைவேற்றுவதற்காக தாம் உள்ளதாக தன்னை காண்பிக்கத் தொடங்கியதிலிருந்து அனேகமான இளைஞர்கள் ஜேவிபியை நோக்கி கவர்ந்திழுக்கப்பட்டதைக் காண முடிந்தது.

ஆனாலும் ஜேவிபி இக்காலகட்டத்தில் இவ் அவசியத்தை நிறைவேற்று பவனாக முன்னுக்கு வந்தது ஏனைய சக்திகளைப் போன்று இந்திய விரோத அடிப்படையில் அல்ல. அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கு எதிரான

**வசந்த திசாநாயக, பற்றிக்பெர்னான்டோ**
**சரத் த சில்வா, ரஞ்சித் குமார**

**தமிழாக்கம்; செ. லோகநாதன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிப்படையிலேயேயாகும். இனமோதல்களும் யுத்தமும் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் தேவைக்காகவே தோற்றுவிக்கப்பட்டது எனவும் இந்தியாவை கூறுபோடும் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் உபாயத்தின் முதலாவது கட்டமே இது எனவும் ஜேவிபி கூறியது. ஆனாலும் ஜேவிபி இவ் நிலைப்பாட்டில் அவ்வளவு நீண்டகாலம் நிற்கவில்லை. மென்மேலும் ஜனரஞ்சக அரசியலுள் பிரவேசிக்க எத்தனித்த ஜேவிபி அதற்கமைய படிப்படையாக அமெரிக்க விரோதத்திலிருந்து இந்திய விரோதத்திற்கு மாறியது. இந்திய விரிவாதிக்கத்தைகப் பற்றி மீண்டும் பேசத் தொடங்கியதோடு விரிவாதிக்கம் ஏகாதிபத்தியமாக வளர்ந்தது. இந்திய ஏகாதிபத்தியத்திடமிருந்து தாய் நாட்டைப் பாதுகாக்கும் போராட்டத்திற்கு முக்கிய கவனம் செலுத்தப்பட்டது. இலங்கை அரசாங்கம் கடைப்பிடித்த இந்திய விரோதமும் இந்தியாவுக்கு பிரச்சனை ஏற்படுத்தக்கூடிய அமெரிக்க சார்பு கொள்கையும் தமிழ் நாட்டின் தமிழ் மக்கள் மத்தியில் தோன்றிய ஆர்ப்பாட்டங்களும் வலயத்துள் ஆதிக்கம் செலுத்த வேண்டும் என்னும் இந்தியாவின் நோக்கமும் காரணமாக இனப் பிரச்சனையுடன் இந்தியா தலையிடலாம் என்பது தெளிவாக காணக் கூடியதாயிருந்தது. அவ்வாறான நிலைமையின் கீழ் இந்திய தலையீடு பற்றி குரல் எழுப்பி மக்களைத் தட்டி எழுப்புதல் இலகுவான காரியமாகும்.

இந்தியா எமது வான் எல்லையை அத்துமீறி யாழ்ப்பாணத்தில் உணவுப் பொதிகளை போட்டதும், இந்திய இலங்கை உடன்படிக்கை ஒன்றுக்காக செயல்பட்டதும் இந் நிலமையின் கீழேயாகும். இச் சம்பவங்கள் ஜேவிபியின் வளர்ச்சிக்கு பெரும் துணையாக அமைந்தது. இவ்வாறாக இனப்பிரச்சனையும் யுத்தமும் ஜேவியின் வளர்ச்சியுடன் கைகோர்த்து நின்றன.

ஜேவிபியின் வளர்ச்சிக்கு உதவியாக விருந்த அரசியல் பின்னணி பற்றி பேசும்போது இன்னுமொரு இடைக்காரணியையும் குறிப்பிடவேண்டியது அவசியமாகும். அதாவது யூஎன்பி தனது எதிர் தரப்பினரைத் தாக்குவதற்காக கடைப்பிடித்த செயல்முறைகள் மூலமாக தோன்றிய அவகாசமாகும். 1977 ல் பதவிக்கு வந்த யூஎன்பியின் முதலாவது அரசியல் உபாயம் தனது பாராளுமன்ற எதிரியான ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியை மீண்டும் தலை தூக்க முடியாதவாறு தகர்ப்பதாகும். இருந்த இடதுசாரிக் கட்சிகள் பெலவீனமான நிலையில் நிலவிய போதிலும் அவற்றுக்கு அப்பொழுதும் தொழிலாள வர்க்க அடித்தளம் மேலும் தகர்க்க வேண்டியதும் யூஎன்பியின் அவசியமாகும். தனது இந் நோக்கங்களை ஈடேற்றிக் கொள்வதற்கு தானே தாக்குதல்களைத் தொடுப்பதோடு அதைத் தவிர எதிர்கட்சிகளுக்குள்ளேயே அவற்றைத் தாக்கக் கூடிய சக்தியொன்றை நிர்மாணிக்க வேண்டியதும் அதன் உபாயமாக விருந்தது. சிலவேளை அவ்வளவு தூரம் தாக்கத்தை ஏற்படுத்தாவிட்டாலும் அவ்வாறான சக்தியொன்றை நிர்மாணிக்க ஆட்சியாளர் மேற்கொள்ளும் முயற்சிகளை தற்போதும் நாம் காணலாம். தனது இந்நோக்கத்தை ஈடேற்றிக் கொள்வதற்காக யூஎன்பி தேர்ந்தெடுத்த சக்தி ஜேவிபியாகும். 71 கிளர்ச்சியை அடக்கிய காரணத்தால் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடனும் இடதுசாரிக்கட்சிகளுடனும் ஜேவிபி பெரும் ஆத்திரத்துடன் இருப்பதால் ஜேவிபியைக் கொண்டே அவற்றின் மீது பெரும் தாக்குதல்களைத் தொடுக்கலாம் என யூஎன்பி எண்ணியது.

இதன்படி விடுதலை செய்யப்பட்ட பின்னர் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சிக்கும் இடது சாரிக் கட்சிகளுக்கும் தாக்குதல்களைத் தொடுக்கக் கூடியவாறு செயல்படுதவற்கு ஜேவிபியினருக்கு யூஎன்பியால் அவகாசம் வழங்கப்பட்டது. எதிர்கட்சிகளின் கூட்டங்களுக்கும் நிகழ்ச்சிகளுக்கும் பல்வேறுவிதமான தடங்கல்களை ஏற்படுத்தியதோடு எதிர்கட்சிகள் எவற்றுக்குமே வழங்கப்படாத மைதானங்கள் ஜேவிபிக்கு வழங்கப்பட்டன. சில சந்தர்ப்பங்களில் (1980 ஜூலை வேலை நிறுத்தம்) வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டவர்களது எதிர்கட்சியினரது கூட்டங்களுக்கு தடைவிதித்த போதிலும் வேலை நிறுத்தத்திற்கு எதிராக கூட்டம் நடாத்த ஜேவிக்கு அனுமதி வழங்கப்பட்டது. இவ்வாறாக அரசாங்கத்தால் ஜேவிபி யினருக்கு வழங்கப்பட்ட அவகாசமும் அதன் வளர்ச்சிக்கு உந்துதலாக அமைந்தது

(தொடரும்)

---

*தன்னலமற்ற..*

அறியவும் காரணமாக இருந்தது. வலது குறைந்த நிலையால் ஏற்படும் தடைகளை எதிர்த்து எவ்வாறு வாழலாம் என்பதற்கு சிறீ ஓர் எடுத்துக் காட்டு. அவர் வலது குறைந்தவர்களுக்கு ஒரு உயிரூட்டும் சக்தி அவரது சேவை வலது குறைந்தவர்களின் நிறுவனங்களுக்கும் வழங்கப் படுகிறது.

சிறீ தனது பிறந்த நாட்டிலும், இங்கிலாந்து கனடாவிலும் பாகுபாடு அநீதி ஆகியவற்றை அனுபவ ரீதியாக உணர்ந்தவர். அதற்கான போராட்டத்தை மற்றவரிடம் கையளிப்பதில் நம்பிக்கை கொண்டவரல்ல. அவ்வாறான போராட்டங்களில் தனது உணர்ச்சி மிக்க பொறுப்பான ஈடுபாட்டை அளித்து, தான் செலவிடும் நேரத்திற்கு கால எல்லை வரையறுக்காமல், அம் முயற்சி நல்லதொரு மாற்றத்தை ஏற்படுத்தி மேம்பாடான உலகை உருவாக்க பாடுபடுபவர். பாகுபாட்டிற்கு எதிரான அநீதி முறைகள் அடங்கிய அமைப்பு உள்ளார்ந்த சீர்திருத்தங்களை தாமே ஏற்படுத்தவேண்டும் என்று நன்கு தெரிந்து கொண்டவர் அமைப்பின் மாற்றமும், சமூக நோக்கின் மாற்றமும் ஒருங்கிணைந்து ஏற்படுத்தப்பட வேண்டும் என்கிறார் சிறீ ஒன்ராறியோ எல்லோருக்கும் ஒரு சிறந்த இடமாக அமைய வேண்டும் என்று அமைப்பின் உள்ளும் புறமும் அயராது உழைக்கின்றார் சிறீ.

சிறீ தனது சேவையின் நிமித்தம் தனது குடும்பத்திற்கென வாரத்தில் ஒரு நாளேனும் ஒதுக்க முடியாத நிலை ஏற்படுவதுண்டு. இருப்பினும், மனமுவந்து அவருடன் ஒத்துழைத்து உறுதுணையாக அவரது மனைவி ஜனனெற்றும், மகள் ஆன்யாவும் வாழ்கிறார்கள் அவர் பெற்ற விருதில் அவர்களுக்கும் பங்கு உண்டு. அவர்களுக்கும் சிறீக்கும் எமது மனம் கனிந்த பாராட்டுதல்கள் உரியதாகட்டும் சிறீயின் சேவை ஒன்ராறியோ வாழ் மக்கள் தமிழர் உட்பட யாவருக்கும் தொடர்கிறது. வெற்றிகரமாக தனது சேவையை தொடர தாயகமும் வாழ்த்துகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழம் ஒரு தொடர்கதை 2

அரசியலில் வெற்றியைவிட நீதியை, நீதி வழுவா நெறிமுறையை மதிக்கிறேன். கடந்த சில வாரங்களாக நடைபெற்றுவரும் சம்பவங்களைத் தொகுத்துப் பார்க்கும்போது அரசியல் பற்றிய ஒரு தொடர்கட்டுரை எமது இனத்துக்குத் தேவைதானு என யோசிப்பதுண்டு. நான் ஒரு தமிழன் எனச் சொல்வதற்கு வெட்கப்படுமளவுக்கு வெளிநாடுகளில் சம்பவங்கள் நடைபெறுகின்றன.

அதனால் இவ்வாரமும் தொடரை நிறுத்தி விட்டு பலதும் பத்துமெனச் சில விடயங்களைப் பற்றி வாசகர்களுடன் பகிர்ந்து கொள்வோம். கடந்த வாரம் சபாலிங்கம் படுகொலை பற்றி ஒரு ஆங்கில வரியின் தமிழாக்கம் பின்வருமாறு எனுனல் எழுதப்பட்டிருந்தது. "ஆதரவாளர் எனக் காட்டிக் கொண்ட நிச்சயப்படுத்திச் சொல்ல முடியாத தனி நபர்" என்பதில் ஆதரவாளர் என்ற சொல் ஆய்வாளர் என வந்திருந்தது. தாயகத்தின் "தமிழ்" பற்றி குட்டிக்கதை ஜெயந்தீசனிடம் விட்டுவிடுவோம்.

இப்போது விடயத்துக்கு வருவோம். 1981ம் ஆண்டு ஏப்பரல் 9,10,11 ம் திகதிகள் யாழ் நகரைப் பொறுத்தவரை அது எரியூட்டப்பட்டு சோபை இழக்கத் தொடங்கிய ஆரம்ப நாட்கள். இது பற்றி பாகம் ஒன்றில் விரிவாக எழுதியுள்ளேன். மாவட்ட சபைத் தேர்தலை யொட்டி நடந்த அடாவடிகளில் யாழ்ப்பாண பொதுசன நூலகம் கிடைத்தற்கரிய அரும் பெரும் பொக்கிசமான நூல்கள் உட்பட 95,000 புத்தகங்களுடன் சிற்ப வேலைப் பாடுகளைக் கொண்ட கட்டடமும் எரிந்து சாம்பலாயின.

தீ வைத்து யார்? எப்படி எரியூட்டினுர்கள் என்பதை நேரில் கண்ட சாட்சிகளுடன் சம்பந்தப்பட்டவர்கள் விசாரிக்கப்பட்டு ஒரு தீர்ப்புக் கூறப்படவில்லையாஞலும் இது இலங்கை இராணுவத்தினுல் செய்யப்பட்டது என்பது உத்தியோகப் பற்றற்ற முறையில் ஊர்ஜிதம் செய்யப்பட்டது. இலங்கை அரசபடையைத் தவிர வேறு இத்தகைய செய்கையைச் செய்திருக்க முடியும் என்பது மிக வலுவான காரணியாக இருந்ததும், அமைச்சர் காமினி திசாநாயக்க யாழ் உல்லாச ஹோட்டலிருந்து கட்டளைகள் பிறப்பித்ததும் பின்னர் பத்திரிகைச் செய்திகளாயின.

அழகான, விலைமதிக்க முடியாத யாழ்நூல்நிலையம் எரிந்ததை விட அதைத் தமது அரசியலுக்குப் பாவித்த தமிழ் அரசியல் கட்சிகளின் இன விரோத உரைகள் தமிழ் மக்களுக்குள் மிகுந்த தாக்கத்தை ஏற்படுத்தியது. விடுதலைப் போராட்டத்தின் வேகம் தீவிரப்படுத்தப்பட்டது. இத்தகைய இழிசெயல்களில் ஈடுபடும் இலங்கை அரசிடமிருந்தும் அரசபடைகளிடமிருந்தும் விடுதலை பெறவேண்டும் என்ற நியாய ஆதிக்கம் முதன்மை பெற்றது. போராட்டம் வெடித்தது. அதில் நியாயமும் இருந்தது. ஆனுல் இன்று... தமிழ் ஈழத்திலிருந்து பன்னிரண்டாயிரம் மைல்களுக்கு அப்பாலுள்ள கனடாவில் உள்ள "தேடகம்" நூலகம் பதின்மூன்று வருடங்களின் பின் இவ்வாரம் பெற்றேல் குண்டு வீச்சுக்கு இலக்காகித் தீக்கிரையாக்கியுள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. அங்கு சிங்கள விஷமிகள் நாசகார வேலையால் எமது நூல் நிலையம் தீக்கிரையானது. இங்கு இத்தகைய வேலையைச் செய்தவர்கள் யார் என்பதே இன்றைய முக்கிய விஞவாகும்.

மின்சார ஒழுக்குப் போன்ற இயற்கையான காரணங்களால் தீவிபத்து ஏற்படாமல் நாசகார வேலையாக இது நடைபெற்றதாகத் தெரியவருகிறது. இலங்கைப் பிரச்சனையில் ஈடுபாடு கொண்டு மேலாதிக்க சக்திகள், தமிழீழ விடுதலைப்புலிகள், சில பொறுப்பற்ற உதிரிகள், தோல் தலையர் போன்ற குழுக்கள், தேடக அரசியற் கண்ணேட்டங்களுக்கு விரோதமான கனடிய ஈழ சக்திகள் என்பனவற்றில் ஒன்று இங்கு இத்தகைய செயல்களில் ஈடுபட்டிருக்கலாமென்பது விசாரணைகளில் தெரிய வரலாம்.

இது நிச்சயமாக தமிழர்களால் செய்யப்பட்டது என்பது நிருபிக்கப்படுமாஞல் அதன் பின்பும் தமிழ் தேசிய வாதத்தை உயர்த்திப் பிடிப்பது அர்த்தமற்றது.

தமிழ்ஈழவிடுதலைப்புலிகள் ஒரு தொலைபேசிச் செய்தியில் தமது மறுப்பைத் தெரிவித்துள்ளார்கள். புகலிடங்களில் தற்போது ஸ்தாபனமயப்படாத, கட்டுப்பாடற்ற, சந்தர்ப்பத்துக்கேற்ப தாம் புலிகளின் ஆதரவாளர்கள் எனக் காட்டிக் கொள்ளும் குழுக்கள் நிறையவே உள்ளன. இத்தகைய குழுக்கள் புலிகள் அமைப்புக்கு விசுவாசம் அற்றவர்கள் என்பதுடன் புலிகளை விமர்சிக்கும் அமைப்புகளுக்கு விசுவாசமானவர்ளும் அல்ல, இத்தகைய குழப்பம் நிறைந்த நிலைமைகளில் சில விடயங்களில் நாம் உடனடி முடிவுகளுக்கு வரமுடியாது.

அரசியலில் தெளிவான இரு தத்துவங்கள் இருபிரிவுகளின் செயற்பாடுகளில் நடவடிக்கைகளை இனம் காண்பது சுலபம். பல முரண்பட்ட குழுநிலைகளில் தேசியவாதமோ சோசலிசவாதமோ முன்னெடுக்கப்படும் போது குளறுபடிகள் நிறைந்ததும், விபரீதமான நிகழ்வுகள் நடைபெறும் போது பரஸ்பரம் குற்றம் சுமத்துவதில் தவறுகள் இழைக்கப்படலாம்..

1980 களிலிருந்து இன்று வரை எமது முரண்பாடுகளை "ரோ" உட்பட வெளியுலக சக்திகள் கையாண்ட விதம் தான் இங்கு முக்கியமானது. அத்தகைய மேலாதிக்க சக்திகளின் தலையீடு இல்லையென எம்மால் நிச்சயப்படுத்திக் கொள்ள முடியுமாயின் அதன் பின்பு எமக்குள் உள்ள தீய சக்திகளை இணங்காண்பது சுலபம். எனவே, விசாரணைகளின் போது சகல பக்கங்கள் பற்றிய கருத்துக்களையும் பரிசீலனை செய்தல் வேண்டும்.

★ ★ ★

அடுத்ததாக இவ்வார பத்திரிகைச் செய்திகளின் படி அமைச்சர் தொண்டமான் வடக்குக் கிழக்கு இணைப்புக்கு புதிய வியூகம் ஒன்று வகுத்துள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. அதாவது கிழக்கு மாகாணத்தில் சிங்களவர் பெரும்பான்மையாக வாழும் அம்பாறை சேருவில போன்ற

**சின்னத்தம்பி வேலாயுதம்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏ.ஆர்.கே மார்க்கட்

## 31-35 St.Dennis Dr

**(Don Mills/Eglinton)**

## (416) 421 3429

**இலங்கை இந்திய
உணவுப் பொருட்கள்,
பால் பழங்கள், உடன் மரக்கறி
வகைகள், இறைச்சி, மீன்,
கடலுணவு வகைகள்,
கனடிய உணவுப் பொருட்கள்
அனைத்தும் மலிவு விலையில் ...**

தமிழ், ஹிந்தி வீடியோப் படங்களின்
ஒரிஜினல் பிரதிகளை வாடகைக்கும்
விற்பனைக்கும் பெறலாம்

CD, Audio **மலிவு விலையில்**

# A.R.K MARKET



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகுதிகள் பிரிக்கப்பட்டு மற்ற மாகாணங்களுடன் சேர்க்கப் படுவதுடன் முஸ்லீம்கள் பெரும்பான மையாக வாழும் கல்முனை, அம்பாந்துறை போன்ற பிரிவுகள் தனி அமைப்பாக உருவாக்கப்பட்டு இணைந்த வடக்கு கிழக்கின் ஒரு பிரிவாகச் செயற்படும் என்பதே அது.

எனது தொடர் பாகம் 2 அத்தியாயம் 3 ல் (5.11.93) மேற் கூறிய திட்டம் பற்றி எழுதியிருந்தேன். இன்று தொண்டமான் அதை ஏனைய தமிழ் அமைப்புக்களுடன் பரிசீலனை செய்கிருர் என்பது மகிழ்ச்சிக்குரிய விடயமே. ஆனுல் கிழக்கில் விட்டுக் கொடுக்கப்படும் இடங்களுக்கான அதே பரப்பளவு வடக்கு மாகாணத்துடன் சேரக் கூடியதாகப் புதிய வரைபடம் போடப் படவேண்டும். பின்வரும் முக்கிய விடயங்கள் கருத்துக் கெடுக்கப்படவேண்டும்.

1.வடக்கு கிழக்கு மாகாணத்தின் மொத்தச் சதுரமைல் பரப்பளவுக்குப் பாதகம் ஏற்படாத வகையில் மட்டக்களப்பு, திருகோணமலை நகரங்களை உள்ளடக்கிய கிழக்கு மாகாணமும், விசாலிக்கப்பட்ட வடக்கு மாகாணமும் (செட்டிகுளம்,பதவியா பகுதிகளில் விஸ்தரிக்கப்பட்ட வடமாகாணம் எனக் கொள்க) இணைந்த தமிழ் மாநிலம்

2 கிழக்கு மாகாணத்தின் முஸ்லீம்கள் அடர்த்தியான பகுதிகளை இணைத்த முஸ்லீம் ஆட்சி வலயம். (இந்தியாவின் பாண்டிச்சேரி மாநிலம் போன்றது.)

கிழக்கு மாகாணத்தில அம்பாறை, கந்தளாய், சேருவில பிரிவுகளின் அடர்த்திய சிங்களப் பிரதேசங்களை மட்டும் பொருத்தமான அண்டை சிங்கள மாகாணங்களுடன் இணைத்தல்.

மேற்கூறிய விடயங்களைக் கருத்துக்கெடுப்பதன் மூலம் புதிய மாநில வரைபடம் வரையப்பட வேண்டும். அதே வேளை சிங்கள மாகாணங்கள் இணைக்கப்பட்டு மூன்று சிங்கள மாநிலங்கள் (மேற்கு, தெற்கு, மத்தி) வரையப்பட்டு மொத்தமாக இலங்கையில் நான்கு சட்டசபைகள் என இலங்கையின் அரசியல் யாப்பு மாநில வரைபடம் என்பன தயாரிக்கப்படவேண்டும். நான்கு மாநிலங்களுடன், முஸ்லீம்கள் ஆட்சி வலயம் உட்பட ஐந்து சபைகள் இருக்கும்.

வரையறைக்குட்பட்ட நிறைவேற்று அதிகாரங்களுடன் ஒரு உபஜனுதிபதி தமிழ், முஸ்லீம் ஆகிய இருபகுதியினரிலிருந்தும் சுழற்சி முறையில் பதவி வகிப்பர் இவர் குறிப்பாக தமிழ் மாநிலம், முஸ்லீம் ஆட்சி வலயம் இரண்டினதும் பாதுகாப்பு பொலிஸ்படை) நீதித்துறை, நிதி, அபிவிருத்திகளில் பூரண அதிகாரம் கொண்டிருப்பார். இந்த உப ஜனுதிபதியானவர் தமிழ் மாநிலம் முஸ்லீம் ஆட்சி வலயம் ஆகிய இருபிரிவில் வாழும் மக்களால் மட்டும் தெரிவு செய்யப்படுவார். ஆனுல் இலங்கையின் எந்தப் பாகத்தில் வாழும் தமிழரோ, முஸ்லீமோ போட்டியிடும் தகுதி பெறுவார்.

மேலும் இதுபற்றிய உத்தேச அபிப்பிராயங்கள் தொடரில் பின்னர் வரும். ஆகவே மேற் கூறிய திட்டங்களை அரசுக்கு அல்லது மிகப் பிரதான மாற்றுக்கட்சியாக விளங்கும் பொதுஜன ஐக்கிய முன்னணிக்கு சமர்பித்து விவாதிக்கும் போது இத்தகைய திட்டம் சாத்தியமாவதற்கான சாத்தியங்கள் நிறையவே உண்டு.

தமிழர்களுக்கு ஏதோ தாரை வார்த்துக் கொடுத்து விட்டார்கள் என்று சிங்கள இனவாதிகளும், அரசியலில் எதிர்கட்சியினரும் குழப்பியடிப்பதைத் தவிர்ப்பதற்காக வடக்கு கிழக்கு இணைந்த தமிழ் மாநிலத்தை வரையும்போது, சிங்கள மாநிலங்களையும் மாற்றியமைப்பதன் மூலமும் அம்பாறை, சேருவில, கந்தளாயை விட்டுக் கொடுப்பதன் மூலமும்தான் பிரச்சார சாதனங்களில் சிங்கள மக்களை அமைதியாக இருக்கச் செய்ய முடியும். யதார்த்த பூர்வமான தீர்வுகளை நோக்கி முன்னேற முடியும்

அடுத்த வாரம்

# இரண்டாவது வருட நினைவாஞ்சலி (23.5.92)

## பண்டிதர் பா.ஞானப்பிரகாசம்



அன்பின் அகல்விளக்கே!
பண்பின் உறைவிடமே!
பப்பா, பப்பா என்று
பாசத்தின் உயிராய்
உம்மை சீவியத்தில் நேசித்தோமே
நெஞ்சத்தில் உங்களைச்
சுமந்தே வாழ்கிறோம்
இறைவனின் சந்நிதானத்தில்
உங்கள் ஆன்மா சாந்தியடைய
பிரார்த்திக்கிறோம்

மரணத்தில் மறவாத,
மனைவி, மக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்ளத்தில் இட்ட தீ

சூரியன் மலர்களை சுட்டெரித்ததில்லை
நட்சத்திரங்கள் வானத்தை எரித்ததில்லை
23.5.94
விக்டோரியா மைதானியில் திரும்
வாணவேடிக்கைகள்
இருட்டை மீறு கோலத்தீ
விளையாடிக்கொண்டிருந்தன.....

காற்று அலையிட்டுக் கொண்டிருந்தது
பறவைகள் எல்லாம் உறங்கிவிட்டன
ரொரன்ரோ நகரமும் உறங்கிவிட்டது
வாய்பேசா தெருவிளக்குகள்
விழித்துக்கொண்டிருந்தன.....

கறைபடிந்த கைகள் தீப்பிழம்பில்
முகம்பார்த்து மகிழ எண்ணியே
அறிவுகளஞ்சியத்தை எரித்து
சாம்பலாக்கிவிட்டன....

கருகிய நிலையில்
சரிநிகரும், வீரகேசரியும்
சுபமங்களாவும், இந்தியா டுடேயும்
தாயகமும், உலகத்தமிழரும்
நக்கீரனும், நாழிகையும்
எரிமலையும் கேடயமும்
இன்னும் எத்தனையோ
சஞ்சிகைகளும், பத்திரிகைகளும்
உறங்கிக்கிடக்க கண்டேன்....

புதிய கலாச்சாரமோ இவை
புதுமை செய்திட எண்ணியே
நள்ளிரவில் நடத்திய நாடகமோ இது...
பிறஇனத்தவனால் எம் உடமைகள்
எரிக்கப்பட்டபோது...எப்படியெல்லாம்
துடித்தோம்...துன்பப்பட்டோம்....

ஆனால் இன்று
எம் இனத்தவரின் இரும்பு கைகளால்
எம் நூல்களே எரிக்கப்பட்டு கிடக்கின்றன.
எம்தேசம் புலம்பெயர்ந்து போனதுபோல நாம்
வந்த இடத்திலாவது வசந்தத்துடன்
வாழ பழகிக்கொள்வோம்.....

இருள் நீக்கி பகலை உருவாக்குவோம்
உயிர் காக்க வந்த இடத்தில் உடமைகளை
காப்போம்...

-மொனிக்கா-

## "தீ"
## 24 மே 1994

அதிகாலை வானத்தில்
முழுநிலவு பூத்திருக்க,
முன்னிரவில்
வாண வேடிக்கைகள்
வர்ண ஜாலமாய் சிதறிட
வானரக் கூட்டமொன்று
தேடகத்திற்கு தீ மூட்டி
களிப்பெய்தியது!

யார் சதி செய்தவர்
மனிதரைய் இருக்க மாட்டார்?
என் நாட்டில்
வாயை மூடச் சொன்னார்
எழுத்தாளனை முறித்தார்
எண்ணங்கள் சிதைத்தார்
ஆனால் இங்குமா?

என் நாட்டில் எரித்த
யாழ் நூலகத்திற்கு காரணம்
காடையர் கூட்டமெனில்
இங்கும் செய்தவர்
காடையரே!
அங்கே இன்னோர்
இனத்தவன் செய்தான் ஆனால்
இங்கோ என்
இனத்தவனே செய்தான்!

கருத்தை கருத்துக்களால்
எதிர்க்க திராணியற்றவர்
கையில் தீயை ஏந்துவதால்
காண்பது என்ன?

எரிந்த தேடகத்தில்
எரிமலையும் கருகியது
விளைந்த நெருப்பில்
விடுதலையும் வீழ்ந்தது

கருகி மிச்சமாய் இருந்த
சுவடுகள் சஞ்சிகையில்
கண்ணீர்ப்பட்ட கவிதையொன்றின்
சிலவரிகளோ
வெட்கம் கெட்ட வீர சாகசத்திற்கு
பதிலாகட்டும்!

"எமது தெருக்களில் இருந்து
அடிமைகள் [illegible]
எந்த ஆயுதக் [illegible]
இயக்கும் போது
முதுபு மனிதர்கள்
செத்துமடிந்தார்களோ,
அந்த ஆயுதக்குழுக்களை இயக்க
இவர்கள் வருகிறார்கள்
ஏன் எதற்காக.....
நீ என்னைக்கு
உன் [illegible]
[illegible]
அவர்கள் முகத்தில்
அறைந்தாற்போல்
இந்தக் கேள்வியை கேட்காமல் போகிறாய்!
ஏன் நாங்கள்
போகிட்டுக் கொண்டிருக்கிறோம்!"

எல்லாவற்றிற்கும் வரலாறு
ஒர்நாள் பதில் சொல்லும்

-காப்தன்

## மே 1, 1994 2.45 மணி

இன்னும் சிலருக்கு இப்படியான
இறுதி ஒலி வருமென்பதாக
செய்திகள் திரிகின்றது.
சிலர்- வாழ்வை நேசிப்பவர்கள்
பேசாதிருக்காதவர்கள்
ஒதுங்காதிருக்காதவர்கள்
காதலர்கள்- காலக்கிரமத்தில் வருவர்
இப்போது எம்மெல்லோர் முகத்திலும்
சாக்களை, பயத்திகில், பேரச்சம்
நிலைகுலைந்தும் இறுதி நம்பிக்கைகளும்
இடிந்து கொட்டுகிறது
விதவையின் மௌனம் இருப்பு
வியாபித்துளது

சுகன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாஸ்போட் மோசடியில் மூவர் கைது

பாஸ்போட் மோசடியில் மூன்று தமிழர்கள் குற்றம் சாட்டப் பட்டுள்ளனர். ரொறன்ரோவைச் சேர்ந்த ஒருவரும் மொன்றியலைச் சேர்ந்த இருவரும் கனடிய உளவுபொலிஸ் நிறுவனத்தின் இரண்டு மாத விசாரணைகளின் பின்னர் கைது செய்யப்பட்டதாக ரொறன்ரோ ஸ்டார் செய்தி வெளியிட்டிருக்கிறது. உளவு பொலிஸ் அமைப்பின் அதிகாரிகள் தமிழ் சமூகத்தினரிடையே ஊடுருவி பதினைந்து பாஸ்போட்டுக்களை ஒவ்வொன்றும் சுமார் 3500 டொலர்களுக்கு வாங்கியதாக ஸ்டார் தெரிவிக்கிறது.

உண்மையான பாஸ்போட டுக்களில் புதிய படங்களையும் தகவல்களையும் சேர்ப்பதன் மூலம் இந்த மோசடி நடைபெற்றிருக்கிறது. சமூக உதவிப் பணம் பெறுவோர், மதுபான விடுதிகள் போன்ற இடங்களில் இவர்கள் உண்மையான பாஸ்போட்டுக்களை சுமார் 200 டொலருக்கு வாங்கிய பின்னர் அவற்றை மோசடி செய்து 3500 டொலர்கள் வரை விற்றிருக்கிறார்கள். மாற்றப்பட்ட விடயங்கள் உண்மையான ஆவணங்கள் போன்றே காட்சியளித்ததாகவும் அவற்றை சுங்க அதிகாரிகள் கண்டுபிடிப்பது மிகவும் கஷ்டமானது என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

ரொறன்ரோவில் அதிகாலை நடத்தப்பட்ட வேட்டைகளில் இவர்கள் கைது செய்யப்பட்டனர். ரொறன்ரோவைச் சேர்ந்த முத்துக்குமாரு சோமசுந்திரம், மொன்றியலைச் சேர்ந்த இதயரஞ்சன் பேதுருப்பிள்ளை, இளையகுட்டி நமசிவாயம் ஆகியோர் தற்போது கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருக்கின்றனர். இவர்களைப் பிணையில் விடுவது குறித்த விசாரணை திங்கட்கிழமை நடைபெறும் என்று ஸ்டார் தெரிவிக்கிறது.

# கனடிய தூதுவரகம் பற்றி முறைப்பாடு

கொழும்பில் உள்ள கனடியத் தூதுவரகத்திற்கு செல்பவர்கள் முறையாக மதிக்கப்படுவதில்லை என கனடிய ராஜதந்திரிகளுக்கான சஞ்சிகை ஒன்று குற்றம் சாட்டியுள்ளது. அந்த தூதுவரகத்திற்கு செல்லும் வெள்ளையரல்லாத ஒவ்வொருவரும் அகதி என்றோ, வெறும் பிரச்சனை தருபவர் என்றோ கருதப்படுகிறார். ஒவ்வொரு நாடுகளில் உள்ள தூதுவரகங்களும் அந்நாட்டின் விருந்தோம்பலை பிரதிபலிக்க வேண்டும், தனது நாடு பற்றிய விபரங்களை உடனடியாக தரக் கூடியதாக இருக்க வேண்டும், இலங்கையில் உள்ள கனடாத் தூதுவரகத்தில் செல்லும் ஒவ்வொருவரும் சோதனையிடப் படுகிறார்கள். இவ்வாறு குறிப்பிட்டிருக்கும் இந்த சஞ்சிகை அங்குள்ள கனடியத் தூதுவரை வெகுவாகப் புகழ்ந்து எழுதியிருக்கிறது.

# ஐ.தே.கவுக்கு புதிய செயலாளர்ளர்கள்

ஐ.தே.கட்சியின் செயலாளர் சிறிசேன கூரே பதவியை ராஜினமா செய்ததை அடுத்து உதவிச் செயலாளர்கள் ஆறு பேர் ராஜினமா செய்யும்படி கேட்கப்பட்டனர். இப்போது புதியவர்கள் ஆறு பேர் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். காமினி ஜயவிக்கிரமபெரேரா, ஜயலத் ஜெயவர்த்தன, தயா பெல்பொல, பியசேன ஜெயவீர, வஜிரா அபேவர்த்தன, தகாம் விமலசேன ஆகிய அறுவரும் புதிதாக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

விஜேதுங்க தனது ஆதரவாளர்களை பதவிகளில் நியமித்து தனது கரங்களை பலப்படுத்துவதன் செயற்பாடே இதுவாகும்.

# பிக்குகள் யாழ்.செல்லும் திட்டம் கைவிடப்பட்டது

யாழ்ப்பாணம் செல்வதற்கு திட்டமிட்டிருந்த பிக்குகள் குழு தமது பயணத்திட்டத்தை கைவிட்டுள்ளனர். நூற்றுக்கணக்கான பிக்குகளைக் கூட்டிச்சென்று சமாதான முயற்சிகளை மேற்கொள்ள திட்டமிட்டிருந்த போதும் புலிகளோ, அரசாங்கமோ இது குறித்து ஆர்வம் காட்டவில்லை. இதனால் இந்த திட்டம் கைவிடப்பட்டிருக்கிறது.

# பாராளுமன்றத்தினுள் ஹேமா, றெனியைக் கொண்டு வர முயற்சி

மலே இனத்தவரான ஆமித் தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்து விலகியதை அடுத்து காமினி திசநாயக்க பாராளுமன்றத்தில் நுழைந்தது போல, மேலும் சிலர் பதவியை ராஜினமா செய்வார்கள் என்று ஐ.தே. கட்சியின் புதிய செயலாளர் காமினி விஜேசேகர எதிர்பார்க்கிறார். புதிதாக றெனி டிமெல், ஹேமா பிரேமதாசா, ருக்மன் சேனநாயக்க போன்றோரை பாராளுமன்றத்துள் கொண்டு வர முயற்சிகள் நடைபெறுகின்றன.

ஓகோ.. அப்படியா!
பகுதிக்குரிய ஒலிப்பதிவு பற்றிய விடயங்கள் அடுத்த வாரம் முதல் மீண்டும் தொடரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராவின் விஜயத்தை ஒட்டி வாஷிங்டனில் ஆர்ப்பாட்டம்

வாஷிங்டனுக்கு பேச்சு வார்த்தைகளுக்கு வந்த நரசிம்மராவிற்கு எதிரான ஆர்ப்பாட்டம் ஒன்றை அமெரிக்க, கனடிய புலி ஆதரவு அமைப்புகள் நடத்தினர். வெள்ளை மாளிகைக்கு முன்னால் பதாகைகள் தாங்கிய வண்ணம் பலர் கலந்து கொண்டனர். ஏற்கனவே காஷ்மீர், பஞ்சாப் பகுதிகளைச் சேர்ந்தவர்கள் ஆர்ப்பாட்டம் செய்திருந்தனர். இதனால் இப்பகுதியில் பலத்த பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. வெள்ளை மாளிகை அதிகாரிகளிடம் ஆட்சேப மனு ஒன்றும் கையளிக்கப் பட்டிருந்தது. அதில் இந்தியாவில் உள்ள தமிழ் அகதிகளை நாடு கடத்துவதை தடுக்கவேண்டும், இந்திய அமைதிப்படை இழைத்ததாகக் கூறப்படும் குற்றங்களை விசாரிக்க விசாரணைக்குழு அமைக்க வேண்டும், புலிகள் மீதான தடைச்சட்டத்தை நீக்க வேண்டும், இலங்கை படையினருக்கு இந்திய அரசு பயிற்சி அளிப்பதை நிறுத்த வேண்டும், இந்திய அரசின் தலையீடின்றி இலங்கைப் பிரச்சனைக்கு தீர்வு காண வேண்டும் போன்ற விடயங்களுக்கு ஜனாதிபதி கிளின்டனை தலையிடுமாறு இந்த மகஜரில் கோரப்பட்டிருந்தது.

ஆனால் அமெரிக்க தலையீடுகள் பற்றியோ, அமெரிக்க இராணுவப் பயிற்சி பற்றியோ எந்த வித ஆட்சேபமும் தெரிவிக்கப்படவில்லை. இந்த ஆர்ப்பாட்டத்தில் தாங்கிப் பிடிக்கப்பட்ட பதாகைகளிலும் இதே கோஷங்களே முன்வைக்கப் பட்டிருந்தன.

## புதுக்க...

நீதிபதி தடை விதித்திருக்கிறார். சொல்லப்படும் விளக்கம், இந்த தகவல்கள் வெளிவந்தால் வழக்கு விசாரணை நீதியானதாக இராது, நடுநிலையான ஜூரர்களை தெரிவு செய்வது கஷ்டம் என்பதுதான். இந்த தடை கனடிய பத்திரிகைகளுக்குத் தான். அமெரிக்கப் பத்திரிகைகள் இந்த விடயத்தை வெளியிட்டிருந்தன. அந்தப் பத்திரிகைகள் எல்லையில் வைத்து பறிமுதல் செய்யப்பட்டன. என் அபிமான சஞ்சிகை wired வெளியிட்ட கட்டுரை ஒன்றும் பின்னர் தடை செய்யப்பட்டு அந்த பக்கம் கிழிக்கப்பட்டே கனடாவில் விற்பனைக்கு விடப்பட்டது.

இந்த கொலைகள் பற்றிய விடயங்கள் கியூறியஸின் கைக்கெட்டியது. இதற்கான நீதிமன்றத்தடை அமுலில் உள்ளதால் அதை பிரசுரிக்க முடியாது. பத்திரிகைகளுக்குத்தான் இந்த தடை அமுலாகி இருக்கிறது. ஆனால் கம்பியூட்டர் வலையமைப்புகளில் இந்த தகவல் சுதந்திரமாக பவனி வருகிறது. என் கைக்கு கிடைத்ததும் ஒரு சட்டவிரோத துண்டுப்பிரசுரம் தான். இதை உங்கள் நண்பர்களுக்கும் தெரிவியுங்கள் என்ற குறிப்புடன் கிடைத்தது.

அதை வாசித்த போது படுபயங்கரமான விடயங்கள் நடைபெற்றிருக்கின்றன என்பது தெரிய வந்தது. கொலைகள் நடந்த விதம், அதில் தம்பதியரின் பங்கு, மோசமான பாலுறவுத் தொடர்புகள், அவை படம் பிடிக்கப்பட்ட விடயங்கள், அவை நீலப்படங்களாக விற்கப்பட்டமை என்று பல விடயங்கள். இந்த கொலைகள் நடந்த விடயங்கள் கூட வீடியோப் படங்களில் பிடிக்கப்பட்டனவாம். இது பற்றி முழுமையாக அறிந்து கொள்ள வேண்டுமாயின் எங்காவது கலியாண வீடுகளில் 'குடிநீர் வினியோகப் பகுதியில்' ஒரு பியர் போத்தலை வைத்துக் கொண்டு அறுத்துக் கொண்டிருக்கும் கியூறியஸை பிடித்து ஒரு மூலையில் அமுக்கி, கையில் ஒரு போத்தலைத் திணித்தால் சொல்லி விட்டுப் போகிறேனே.. மற்றும்படி முச்! மானநட்ட வழக்குப் போட்டாலாவது 'மன்னிப்புக் கேட்பது என்ற பேச்சுக்கே இடமில்லை' என்று அறிக்கை விடலாம். இது நீதிமன்ற விவகாரமாச்சே.

இப்போது இது விடயமாக வெளியீட்டுத் தடைக்கு காரணமாக தற்போது தடைக்கு எதிரானவர்களால் குறிப்பிடப்படுவது... இந்த வழக்கில் மனைவியின் சாட்சியத்தை தவிர, கணவனை சட்டத்தின் பிடிக்குள் சிக்கவைக்க ஆதாரங்கள் இல்லையாம். வீடியோக்கள் பிடிக்கப்பட்ட போதும், அதில் கணவன் முகமூடிகள் சகிதம் இருப்பதால் அடையாளம் காண முடியவில்லையாம். இடையில் மனைவி சாட்சியம் சொல்ல மறுத்தாலும் கணவன் வெளியே வரச் சாத்தியங்கள் உண்டு. இந்த விடயங்களால் பொதுமக்கள் எதிர்ப்பு கிளம்பாமல் இருப்பதற்காகத் தான் இந்த தடை என வாதிடுகிறது இந்த கூட்டம். எது உண்மையோ.. நீதிமன்ற விதிமுறைகளை கடைப்பிடிக்க வேண்டியது அவசியமாச்சே.

★ ★ ★

இந்த வாரம் உரசு பத்திரிகையும் சரி பத்திரிகையும் வெள்ளை மாளிகை ஆர்ப்பாட்டம், ஐரோப்பிய பாராளுமன்ற தீர்மானம் பற்றிய செய்திகளாக ஒரே விடயத்தையே பிரசுரித்திருக்கின்றன. ஒரு வேளை இரண்டு பேருமே யுத்தமுனைக்கு ஒரே நிருபரையே வைத்திருக்கிறார்களோ என்று பார்த்தால் புலிகளின் செய்தியை அப்படியே வரிக்கு வரி மறுபிரசுரம். அவர்கள் தான் பிரசாரம் செய்கிறார்கள் என்றால்.. இவர்கள்?

# உலக விமானப் போட்டியில் வெற்றி பெற்ற இந்தியர்

உலகை 23 நாட்களில் 9 நாடுகளின் ஊடாக சுற்றும் போட்டியில் இரண்டு இயந்திர செஸ்னா விமானத்தில் வந்த இந்திய தொழிலதிபர் ஒருவர் வெற்றி பெற்றிருக்கிறார். 14 சர்வதேச குழுக்கள் இந்தப் போட்டியில் கலந்து கொண்டன. மே 1ம் திகதி ஆரம்பித்த இந்தப் போட்டியில் மொரோக்கோ, துருக்கி, துபாய், இந்தியா, வியட்னாம், ஜப்பான், ரஷ்யா, அலாஸ்கா ஆகிய நாடுகள் ஊடாக மீண்டும் கனடாவை அடைந்தனர். விஜேபாட் சிங்கானியா என்ற பம்பாய் வர்த்தகரும் அவருடன் சென்ற அமெரிக்கரான டானியல் பிறவுனும் 56 மணி நேரத்தில் உலகைச் சுற்றியதற்காக டர்பைன் விமான ரகத்திற்கான போட்டியில் தங்கப்பதக்கம் பெற்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதுக்க அறுத்தவைகள்

## விதைத்தவர் யாரோ?
## அறுத்தவர் யாரோ?

அறுஞர் பேராசிரியர் கல்லாநிதி கியூறியஸ் ஜி

'எதையோ எழுத வேண்டும் என்பதற்காக புத்திசாலிகள் எழுதுகிறுர்கள். எதையாவது எழுத வேண்டுமே என்பதற்காக முட்டாள்கள் எழுதுகிறுர்கள்'

தியேட்டர்
கிளுகிளுப்பூட்டும்
காதல் காட்சிகள்
மயிர்க்கூச்செறியும்
சண்டைக்காட்சிகள்
உள்ளேயும் வெளியேயும்
நடைபெறுவது

வைபவம்
(திருமண, பூப்புனித நீராட்டு)
'பாரிய' அழகிகள்
கலந்து கொள்ளும்
பாஷன் ஷோ

போராளி
பதினைந்து
வயதுக்குள்
பதினைந்து
நிமிடப்புகழ்

புதுப்படம்
வீடியோவில்
வந்த
'சிவகவி'

வெல்பெயர்
சீட்டு,
வட்டிக்கு கொடுத்தல்
போன்ற சிறுதொழில் முயற்சிகளை
ஆரம்பிக்க கனடிய அரசு
வழங்கும்
ஊக்குவிப்பு போனஸ்

உலகத்தமிழர்
காதினுல்
தாயகம்
வாசிப்பவர்

கோயில்
(காசேதான்)
கடவுளடா
குடியிருக்கும் இடம்

தொலைபேசி
தொல்லை
பேசித்
தொலை

தேனிலவு
ஹோட்டலில்
கழிக்கப்படும்
திருமணத்தன்று இரவு

கணவன்
Bread winner
மனைவி
Bread buyer

★ ★ ★

இந்த வாரம் தேடகம் நூலகம் எரிக்கப்பட்டிருக்கிறது. 'அனுமார்' எரித்த 'அசோக'வனம் மாதிரி இருந்தது. அரச உதவிப்பணம் பெறுவதற்காக என்றே சங்கம் அமைத்து பணம் பெற்று எல்லாமே செய்கின்ற 'சங்கத்தமிழர்களுக்கு' இடையில் அன்பர்கள், நண்பர்கள் கொடுத்த நன்கொடை, சொந்தப்பணம் என்பவற்றைப் போட்டு நடத்தப்பட்ட நூலகம் 'இனம் தெரியாதவர்களால்' கொழுத்தப்பட்டது. தமிழர்களும் எங்கள் இனம் என்று தெரியாதவர்களால்... எவ்வளவு காலத்திற்கு நாம் இவர்களை 'இனம் தெரியாமல்' இருக்கப்போகிருேமோ? எழுதினுல் பிரச்சனை, சிந்தித்தால் பிரச்சனை, வாசித்தால் பிரச்சனை என்ருல் இனி எமக்கு செய்வதற்கு என்னதான் மிச்சமிருக்கிறதோ?

யாழ். நூலகம் எரிக்கப்பட்டது தமிழர் வரலாற்றில் ஒரு மறக்க முடியாத சம்பவம். எரித்தது சிங்களவர்கள் என்பதால் எங்கள் அனைவருக்குமே அது தவறு என்பதில் இரண்டாம் கருத்து இருந்ததில்லை. இன்று தேடகம் எரிப்பு தமிழர்களால் செய்யப்பட்டிருக்கலாம் என்றதும் 'இதற்கான காரணமோ, அன்றி அதனை மேற்கொண்டவர்கள் பற்றியோ அறியப்படாத நிலையில் இத்தீ வைப்பினை விடுதலைப் போராட்டத்திற்கு எதிரான பிரசாரத்திற்கு பயன்படுத்த சில புல்லுருவிகள் முனைந்திருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன, விடுதலைப் போராட்டத்தின் மீது சேறடிக்கும் இவ்வவசர முயற்சி இத்தீ வைப்பிற்கு அவர்களே காரணமாக இருக்கக் கூடும் என்ற சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது. தமிழீழ விடுதலைக்கு எதிரான தீய சக்திகளால் சர்வதேச ரீதியாக முடுக்கி விடப்பட்டுள்ள நாசகார செயற்பாட்டின் ஒரு வடிவமாக இது கருதப்படுகிறது' என்று உலகத்தமிழரின் தொலைபேசி செய்தி கூறுகிறது. இவர்களை தமிழக சட்டசபையில் சேடப்பட்டி முத்தையாவை எடுத்து விட்டு சபாநாயகர்களாக்க வேண்டும்.

'மாற்று அரசியல் கருத்துக்களுக்கும் மாற்றுவேலை முறைகளுக்கும் எதிராக துப்பாக்கிச் சூடுகளும் தீவைப்புகளுமே எம் நாட்டு அரசியல்வாதிகளிடமிருந்து நாம் கற்றுக் கொண்ட விடயங்கள் ஆகும்' என்று மட்டுமே தேடகம் இத்தீவைப்பு குறித்து வெளியிட்ட பிரசுரத்தில் குறிப்பிட்டிருக்கிறது. மொத்தத்தில் இது தங்களைத் தான் குறிக்கிறது என்பதை அறிந்து கொண்டு தான் இந்த மறுப்பு. மற்றும்படி எவருமே யாரையும் நேரடியாகக் குற்றம் சாட்டவில்லை. மனித உரிமைகளை மீறுவோர், கருத்துச் சுதந்திரத்தை மறுப்போர் என்றதும் இவர்களுக்கு ஏன் கோபம் பொத்துக் கொண்டு வருகிறது என்று தான் புரியவில்லை. துப்பாக்கிச் சூடுகளும் தீ வைப்புகளும் தான் தங்களுக்குத் தெரிந்தவை என்பது இவர்களுக்கு தெரிந்ததே மகிழ்ச்சிக்குரிய விடயம். மொத்தத்தில் எங்கப்பன் குதிருக்குள் இல்லை?





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ ★ ★

ஹிட்லர் ஐரோப்பாவை அழித்த போது நூலகங்களை அழிக்க வேண்டாம் என்று கட்டளையிட்டதாக கூறினார்கள். அரபுலகத்திற்கு மேற்கே, தென்னமெரிக்க பிராந்தியத்தில் கிரெனடாவில் மட்டுமே இஸ்லாமிய கலாசாரம் வளர்ச்சியுற்றியிருந்தது. ஸ்பானியர்கள் தென்னமெரிக்காவை ஆக்கிரமித்த போது இந்த கலாசாரத்தை தீவைத்துக் கொழுத்தினர். இதனால் பல அரிய நூல்கள் எரிந்து சிதைந்தன. யாழ். நூலகம் எரிக்கப்பட்டதற்கு சில வாரங்களுக்கு முன்னர் தான் அனலைதீவைச் சேர்ந்த ஒருவர் மகாத்மா காந்தி கைப்பட எழுதிய கடிதங்கள் சிலவற்றை நூலகத்திற்கு அன்பளிப்புச் செய்திருந்தார் என்று என் நண்பன் ஒருவன் முன்பு சொன்னான். நூலக அழிப்பு என்பது காட்டுமிராண்டிகளின் செயற்பாடே.

உலகத்தமிழர் நூலகங்களில் நீங்கள் புலம் பெயர் இலக்கிய முயற்சிகள் பலவற்றைக் காண முடியாது. ஆனால் தேடகம் நூலகத்தில் புலிகளின் வெளியீடான 'உலகத்தமிழர்', எரிமலை போன்றன கிடைக்கும். எந்த அரசியல் கருத்துக்களுடைய வெளியீடுகளும் அங்கு கிடந்தன. எரிந்து எஞ்சியவற்றில் ஒரு 'எரிமலை' கிடந்தது. அன்னை பூபதியின் படம் ஒன்று கிடந்தது.

எரிந்து போனவற்றில் கியூறியஸின் கையில் அகப்பட்டது ஒரு பிரசுரம்.. காலம் சஞ்சிகை வெளியிட்ட 'வீட்டுக்கொரு நூலகம்' என்ற கட்டுரை.. மல்லிகையில் வெளிவந்த மறுபிரசுரம். வீட்டுக்கொரு நூலகம் அமைப்பது முதலில் இருக்கட்டும். தமிழர்களுக்காக இருந்த ஒரே நூலகம் தீக்கிரையாகி விட்டதே.

★ ★ ★

சூப்பர் ஸ்டார் கனடா வருகிறாராம். ஏற்கனவே பாரிஸ், லண்டனில் நடத்தப்பட்ட நிகழ்ச்சிகள் படுதோல்வியில் முடிந்ததாக செய்தி. இது குறித்து தாயகத்துடன் ஒரு அன்பர் தொடர்பு கொண்டு சொன்னார்.. 85ல் இலங்கை தமிழர்களுக்கு உதவும்படி சூப்பர் ஸ்டாரைக் கேட்ட போது 'முகம் தெரியாத தமிழர்களுக்காக நான் ஏன் கமெராவுக்கு முன்னால் நிற்க வேண்டும்?' என்று கேட்டாராம். நட்சத்திரங்கள் பணம் சேர்த்துக் கொடுத்த போதும் இவர் தலையைக் காட்டவில்லை. இப்போது எமது மக்களிடம் பணம்சேர்த்து தமிழகத்தில் உள்ள அனாதைகளுக்கு உதவப் போகிறாராம். அது நல்ல விடயம் தான். ஆனால் எமது மக்கள் படும் துயரத்துக்குள் அவர்களுக்கு செய்ய வேண்டிய கடமைகள் இருக்கும் போது. இப்படியா இவர்களைக் கூப்பிட்டு பணம் சேர்த்துக் கொடுக்க வேண்டும்' என்று குமுறினார்.

இந்தியாவிலிருந்து வருவிக்கப்பட்ட விளம்பர நோட்டீஸில்'சிறப்பு விருந்தினராகத் தோன்றி மகிழ்விப்பார்' என்றிருப்பதை வேறேதோ வாசகத்தினால் மறைத்திருப்பதாகவும், சூப்பர் ஸ்டார் கொஞ்ச நேரம் மேடையில் முகத்தைக் காட்டி மறைவார் என்பதைத் தான் மறைக்கிறார்கள் என்றும் தொடர்பு கொண்ட அன்பர் மேலும் சொன்னார்.

சூப்பர்ஸ்டாரை தனியார் அழைப்பதாக இருந்த போதும் அதில் குறிப்பிடப்பட்ட ஓரிரு பெயர்களைப் பார்த்தால் தொடர்பு 'வேறெங்கோ' இருக்கும் போலிருக்கிறது. நெல்லுக்கிறைத்த நீர் வாய்க்கால் வழியோடி 'பு(ல்)லி(ற்)க்கும்' ஆங்கே பொசியுமோ?

★ ★ ★

மானநட்டம் சம்பந்தமாக உரசு பத்திரிகை (உரசு உரசு என்று உபத்திரவம் தாங்க முடியலைங்க!) வீரப்பு பேசியிருக்கிறதாம். (நான் படிக்கவில்லை. நண்பர் சொன்னார்.) இலவசம் என்றால் கூட அதைப் படிப்பதில் ஆர்வம் இருக்கணுமே.. சூரியன் என்றால் கூட கியூறியஸ் ஆர்வத்துடன் வாசிப்பதற்கு செந்தூரான், ராஜவர்மன் போன்றோர் எழுதும் விடயங்கள் உள்ளன. இதில் எதை வாசிப்பதாம்? அதனால் தான்..

(நக்)கீரன் கேள்வி பதில் ஒன்றில்.. இணைப்பாட்சியை கூட்டணி தற்போது ஆதரிப்பது பற்றி கேள்விக்கு 'கூட்டணியின் இன்றைய அலங்கோலத்தைப் பார்த்தால் தந்தை செல்வா தனது கல்லறைக்குள் நெளிவார்' என்றிருந்தது. தந்தையை சிதை மூட்டி அவரது அஸ்தி தான் ஸ்தூபியில் வைக்கப்பட்டிருப்பதாக ஞாபகம்.

மானநட்டத்திற்கு வருவோம். . கிட்டுவின் சீடர் அனுப்பிய வக்கீல் நோட்டீஸிற்கு 'மன்னிப்புக் கேட்பது என்ற பேச்சுக்கே இடமில்லை' என்று

# அறு(சு)வை

உரசியிருக்கிறார்களாம்.

★ ★ ★

மானநட்டம் என்றதும் ஞாபகத்திற்கு வருகிறது. ரொறன்ரோ பத்திரிகைகள் மீது கொன்ராட் பிளாக் தொடுத்த மானநட்ட வழக்குகளில் தற்போது குளோப் வெளியிடப்படாத பெருந்தொகைப் பணத்தை கொடுத்து 'நீதிமன்றத்திற்கு வெளியிலான சமரசம்' செய்திருக்கிறது. முன்பு ஸ்டாரும் இப்படி மானநட்டம் கட்டியிருக்கிறது. இத்தனைக்கும் கொன்ராட் பிளாக் தான் இங்கிலாந்து, அவுஸ்திரேலியா, கனடா போன்ற நாடுகளில் பல பத்திரிகைகள், சஞ்சிகைகளின் சொந்தக்காரர்.

நம்ம 'உரசுப்' பத்திரிகையை ஸ்டார், குளோப் காரர் படித்திருந்தால், 'மன்னிப்புக் கேட்பதென்ற பேச்சுக்கே இடமில்லை' என்று சூளுரைத்திருப்பார்கள். பாவம், விடயம் தெரியாமல் காசைக் கொடுத்து நட்டப்பட்டு விட்டார்களே.

★ ★ ★

அமெரிக்க விண்வெளி வீரர் கார்ள் சாகன்.. அப்பிள் கம்பியூட்டர் நிறுவனம் தனது புதிய கண்டுபிடிப்பிற்கான திட்டம் ஒன்றிற்கு கார்ள் சாகன் என்றுபெயர் வைத்திருந்தது. தனது பெயருக்கு களங்கம் விளைவிப்பதாக கூறி சாகன் வழக்குத் தொடர்ந்தார். அப்பிள் உடனே பெயரை மாற்றி B.H.A என்று மாற்றி விட்டது. சாகன் விடவில்லை. புதிய பெயரும் தன்னை அவமானப்படுத்துவதற்கின்ற பெயர் என்று குற்றம் சாட்டி வழக்குத் தொடர்ந்துள்ளார். காரணம் B.H.A என்பது Butt Headed Astronaut. அதாவது மரமண்டை விண்வெளி வீரர் என்ற அர்த்தமாம்.

★ ★ ★

தமிழ் பத்திரிகைகளுக்கு இடையில் தான் வியாபாரப் (ஓகே... விளம்பரப்) போட்டி என்றால் சீனப் பத்திரிகைகளுக்கும் இதே கதிதான். மிங் பாவோ டெயிலி நியூஸ், சிங் ராவோ ஜி பாவோ, வேர்ல்ட் ஜேர்னல் டெயிலி நியூஸ் என்று மூன்று பத்திரிகைகள் கடும் போட்டி. இந்தப் பத்திரிகைகளில் எல்லாவற்றிலுமே விளம்பரம் செய்தியை விட அதிகம். சிங் ராவோவில் விளம்பரம் 75


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீதமும் செய்தி 25 வீதமும் உள்ளது. முதலில் வெளிவந்த வேர்ல்ட் ஜேர்னல் 76ம் ஆண்டும் அடுத்து சிங் ராவோ 78ம் ஆண்டும் வெளிவரத் தொடங்கின. சென்ற வருடம் முழு வண்ணத்தில் வெளிவந்த மிங் பாவோ மற்றவர்களை முந்திக் கொண்டு கனடிய விளம்பரங்களைக் குவிக்கிறது. இது வண்ணத்தில் வந்ததால் இதுவரையும் கறுப்பு வெள்ளையில் வந்த மற்ற இரண்டும் வண்ணத்தில் அச்சிடத் தொடங்கியுள்ளன. சராசரி இந்தப் பத்திரிகைகள் முப்பதாயிரம் பிரதிகள் தினசரி விற்கின்றன.

இந்த மூன்று பத்திரிகைகள் மட்டுமல்ல, வேறு பத்திரிகைகளுக்கும் இங்கு இடம் உண்டு என்கிறார்கள். ஹொங்கொங்கில் மட்டும் ஐம்பது தினசரிப் பத்திரிகைகள் உண்டென்றால் பாருங்களேன். இப்போது விளம்பரதாரர்களுக்கு இந்த மூன்று பத்திரிகைகளும் வலை வீசத் தொடங்கியிருக்கின்றன. எங்கு போய் முடியுமோ? ஒருவேளை மூன்றுமே இலவசமாக வெளிவரத் தொடங்கலாம்.

★ ★ ★

சரிநிகரில் 'நாலு வார்த்தை எழுத விடு' என்ற பகுதியில் சூர்யா இம்முறை அலை யேசுராசா பற்றி எழுதியிருக்கிறார். தற்போது யேசுராசா 'கவிதை' என்றொரு சஞ்சிகை வெளியிடுகிறாராம். முன்பு அவருக்கு ஒரு இலக்கியக் கோட்பாடு இருந்ததாம். 'கலைஞர் சுதந்திரமானவர். இதைத் தான் படை என்று அவரை நிர்ப்பந்திக்க முடியாது. மனிதருக்கு விரோதமில்லாத எதையும் கலைஞர் படைக்கலாம். இதில் முற்போக்கு பிற்போக்கு என்று பார்க்க முடியாது' இதுதான் இவரது கோட்பாடாம். முன்பு சாதி ஒடுக்குமுறை, வர்க்கப் போராட்டம் பற்றி படைக்கிற முற்போக்கு வாதிகளை வரட்டு வாதிகள் என்று மட்டம் தட்டினார். இவை வெறும் பிரசார இலக்கியங்கள், கதை பண்ணுகிறார்கள், படைக்கவில்லை என்பார்.

இப்போதைய 'கவிதை' இதழில் 'கால நிர்ப்பந்தத்துக்கு இயைய தேசிய விடுதலைப் போராட்டம் சார்ந்த ஆக்கங்களுக்கு கவிதை முக்கியத்துவம் கொடுக்கும்' என்றிருக்கிறார். முன்பு கால நிர்ப்பந்தத்திற்கியைய சாதி ஒடுக்குமுறை, வர்க்கப் போராட்டம் பாடுபொருளாக அமைகிற போது அது வரட்டு இலக்கியமாம். இப்போது தேசிய விடுதலைப் போராட்டம் சம்பந்தமான விடயங்கள் வளமானதாகி விட்டதாம்.

இதை விட இளங்கவிஞர்கள் படிக்க வேண்டிய நூல்களைப் பட்டியலிடும் போது 'சேரன், சிவசேகரம், ஜெயபாலனின்' பெயர்களை தவிர்த்திருக்கிறார். காரணம் இவர்கள் புலிகளால் விரும்பப்படுவோர் அல்ல. முருகையன், புதுவை போன்றோர் பட்டியலில் உள்ளார்கள். இதில் புதுவை வர்க்கப் போராட்டம் பற்றி கவிதை எழுதிய போது வரட்டு வாதி. இப்போது புலிகளைப் பாராட்டுகின்ற போது நல்ல கவிஞர். முருகையன் முற்போக்கு எழுத்தாளர் சங்கத்துடன் இருக்கும் போது மோசமான கவிஞர். இப்போது நிறத்தை மாற்றிய போது யேசுராசாவும் தன் கருத்தை மாற்றிக் கொண்டார்.

சூர்யா இப்படிக் குறிப்பிட்டிருக்கிறார். 'இங்கே சில' பத்திரிகைகள் முன்பு யேசுராசா பற்றி எழுதியதை ஊர்ஜிதம் செய்வதற்காக 'யாழ்ப்பயணம்' சென்று யேசுராசாவை நேரடியாகச் சந்தித்தவர் இதை வாசிப்பது நன்று.

★ ★ ★

யேசுராசாவின் இலக்கியக் கோட்பாடு மேலே குறிப்பிட்டிருந்தது. அவரது 'கொலைக்கியக் கோட்பாடு' எப்படியிருக்கும்? 'கொலைஞர் தந்திரமானவர். இதைத் தான் உடை என்று அவரை நிர்ப்பந்திக்க முடியாது. தமக்கு பிடிக்காத எதையும் கொலைஞர் உடைக்கலாம். இதில் முற்போக்கு பிற்போக்கு என்று பார்க்க முடியாது'. இப்படி இருக்குமோ?

★ ★ ★

சமீபத்தில் கனடாவில் பத்திரிகைத் தணிக்கை ஒன்று பரபரப்புக்குள்ளானது. பெர்னடோ, ஹொமோல்கா என்ற தம்பதியர் இரு பெண் பிள்ளைகளின் கொலை சம்பந்தமாக கைது செய்யப்பட்டு விசாரணை நடப்பது தெரிந்ததே. இந்த விசாரணையில் மனைவி அரச தரப்புச் சாட்சியாக மாறி தகவல் கொடுத்ததில் கணவன் கைது செய்யப்பட்டு விசாரணை நடக்கிறது. இந்த விசாரணையில் வெளிவரும் தகவல்கள் பத்திரிகைகளில் வெளியிடுவதற்கு

33 ம் பக்கம் பார்க்க..

*This newspaper is published by*
*Georgicka communications.*
*A member of*
*Ethnic Press Council Of Canada.*
*Editor: George R.Ckrhushchev*
இப்பத்திரிகை ஜோர்ஜிக்கா தொடர்பு நிறுவனத்தினால் வெளியிடப்படுகிறது.
ஆசிரியர்: ஜோர்ஜ் இ. குருஷ்சேவ்

தொடர்புகளுக்கு
Georgicka communications
P.O.Box 1031, Station "F",
*Toronto, Ont, M4Y 2T7.*
*Tel: (416) 920 9081*
*Fax: (416) 963 5738*
*E mail:71650.3216*
*@Compuserve.com*

வாசகர்களின் வசதி கருதி தொலைபேசி பதிவு சேவை ஒன்றை தொடங்கியுள்ளோம். வெளிவந்த ஆக்கங்கள் பற்றிய உங்கள் கருத்துக்கள், முனியின் கேள்வி பதில்களுக்கான கேள்விகள், ஆக்கபூர்வமான கருத்துக்களை வெள்ளி மாலை முதல் ஞாயிறு நள்ளிரவு வரையில் 963 5738 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொண்டு ஒலிப்பதிவு செய்யலாம். தொடர்புகளுக்கு உங்கள் தொலைபேசி இலக்கத்தையும் பதிவு செய்ய மறக்காதீர்கள்.

உங்கள் ஆக்கங்கள், பத்திரிகை பற்றிய உங்கள் ஆக்கபூர்வமான கருத்துக்கள் என்பவற்றை வரவேற்கிறோம். உங்கள் கருத்துக்களை எழுத்து மூலமாக அனுப்புங்கள். உங்கள் கருத்துக்கள் எதுவாயினும் பிரசுரிக்க முயற்சிப்போம். ஆக்கங்கள் தரங்கண்டு பிரசுரமாகும். ஆக்கங்களின் கருத்து சிதையாமல் மாற்றங்கள் செய்ய ஆசிரியருக்கு உரிமை உண்டு. ஆக்கங்களுடன் உங்கள் தொலைபேசி இலக்கங்களையும் விலாசங்களையும் குறிப்பிடுங்கள். படைப்புகளில் சொல்லப்படும் கருத்துக்களுக்கு எழுதியவர்களே பொறுப்பு. படைப்புகளில் வரும் கருத்துகள் ஆசிரியரின் கருத்தாக இருக்க வேண்டிய அவசியமில்லை.

## தாயகம்
## சந்தா விபரம்

கனடா ஆறுமாதம் $30
வெளிநாடுகள் ஆறு மாதம் US$60
வெளிநாட்டு வாசகர்களின் காசோலைகளின் இலக்கம் encoded செய்யப்பட்டிருக்க வேண்டும். காசோலைகள் அனைத்தும் Georgicka communications பெயருக்கு எழுதப்பட வேண்டும். (தாயகத்தின் பெயருக்கு அல்ல)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரே இடத்தில் உங்கள் அனைத்து இலங்கை, இந்திய, கனடிய
உணவுப் பொருட் தேவைகளுக்கும் நாட வேண்டிய இடம்

# அன்ரனி பிறதர்ஸ்

**1472 QUEEN ST WEST (QUEEN/LANSDOWNE),**
**TORONTO, ONT. M6K 1M4**

வாரத்தில் ஏழு நாட்களும் காலை 9 மணி முதல் இரவு 11 மணி வரை

உடன் மீன்,
இறைச்சி,
மரக்கறி, பழவகைகள்
மலிவு விலையில்

தமிழக, இலங்கை
வாரப்பத்திரிகைகள்,
சஞ்சிகைகள் உடனுக்குடன்

முத்திரை, சிகரெட்,
TTC Tickets, Lottery Tickets


★ போட்டோக்கொப்பி,
ஃபாக்ஸ் வசதிகள்

★ தமிழ்,ஹிந்தி, மலையாள
வீடியோக்கள்
வாடகைக்குப் பெறலாம்

★ லேசர்
இசைத்தட்டுக்கள்
மலிவு விலையில்

# ANTONY BROTHERS

**TEL:(416) 588-0733**
**TEL/FAX:(416) 516 3903**




சிங்கப்பூரில் இருந்து
இறக்குமதி செய்யப்பட்ட
உடைகள்,
பரிசுப் பொருட்கள்,
அலங்காரப் பொருட்கள்
அனைத்தும் மலிவு விலையில்
பெற்றுக் கொள்ள

# ANTONY BROTHERS FASHION HOUSE

**1484 QUEEN ST WEST**
**Tel:(416) 588 0310**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

SIVA'S TRADING CO LTD
321-2739

ஸ்காபரோ நகரின்
தன்னிகரற்ற
தமிழ் வியாபார நிலையம்

அனைத்துப்
பொருட்களும்
மலிவுவிலையில்

★ இலங்கை, இந்திய உணவுப்பொருட்கள்
★ உடன் இறைச்சி,கடலுணவு,
★ பசுமையான மரக்கறி வகைகள்
★ தயாரிக்கப்பட்ட உணவுவகைகள் (இடியப்பம்,தோசை,அப்பம்)
★ சமையல் உபகரணங்கள்
★ இலங்கை, இந்திய சஞ்சிகைகள்

சிவாஸ் ரேடிங் கோ லிமிட்

3852 FINCH AVE EAST (KENNEDY/FINCH)
TEL:(416) 321 2739

P.S.T.T

5210 FINCH AVE EAST #23
(FINCH/Middlefield)
TEL:609-0141

வீடியோ ஒலிப்பதிவு நாடாக்கள்,
இந்திய உணவு வகைகளின்
மொத்த விற்பனையாளர்

சகல புதிய, பழைய தமிழ்,
இந்தி, மலையாளப் படங்கள்
வாடகைக்கு கிடைக்கும்

VIDEO TRANSFER
(ANY SYSTEM)
$8.99

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org